வசந்தம்

மலர் 4	பார்த்திப ௵ கார்த்திகை ௴	இதழ் 8

பொருளடக்கம்

கார்த்திகை விளக்கு
பாரதியார் ... 1

முதல் இந்திய விஞ்ஞானி
ஆர். கே. விசுவநாதன் ... 2

மாயையின் முன்பு
கு. ப. சேதுஅம்மாள் ... 6

ஓடக் காண்பது
கோமதி சுப்பிரமண்யம் ... 13

மலரூடு நீயே இருத்தி
மு. அருணாசலம் ... 21

சிலப்பதிகாரம்
சர். ஆர். கே. எஸ் ... 25

கவிதைப் பெண்
மு. பெரியசாமி ... 32

புத்தக ஆராய்ச்சி
... ... 34

கார்த்திகைச் சுடர்
"சுகி" ... 36

மறுமலர்ச்சி
வித்வான் அ. கிருஷ்ணமூர்த்தி 42

கலர்க் குங்குமம்
'விசுவம்' ... 49

சந்திரோதயம்
கே. சி. எஸ். அருணாசலம் .. 55

சாவித்திரி
ஆர். ஷண்முகசுந்தரம் ... 56

சோகக் கதைகள்
ரா. நா ... 55

மியாகியின் கடிதம்
ர. சி. டேவிட் ... 67

கலைக்கோயில்
சுத்தானந்த பாரதி ... 76

இலக்கிய விஷமம்
கி. ரா ... 81

மலர் மணம்
... ... 85

அவனுடைய வெற்றிக்கு இப்போதே திட்டம் போடப் படுகிறது

அவனுடைய தகப்பனர் அவனுக்குக் கல்வி நிச்சயமாய்க் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்கிருர்

அவன் ஒரு சின்ன பையன் தான். ஆனல், அவனுடைய தகப்பனர் அவன் கல்விக்குப் பணச் செலவு ஆகுமென்று எதிர்பார்த்து, அவன் பள்ளிச் சம்பளத்துக்குப் பிடிக்கும் செலவை புத்திசாலித்தனமாய் வட்டிக்குப் போட்டுவைத்திருக்கிருர். அதே தொகை 12 வருஷத்து வட்டியினல் 50 சத வீதம் அதிகமாகிறது. பையன் பெரியவனகும்போது அந்தத் தொகையைக் கொண்டு அவன் தனது சர்வ கலாசாலைப் படிப்பை முடித்துவிடுவான். எனவே, பூர்த்தியானதும் பயனுடையதுமான கல்வியை ஆதாரமாகக் கொண்டு, அவன் மனே திடத்தோடும் நம்பிக்கையோடும் உலகத்தில் காலெடுத்து வைக்கலாம்.

அவன் தனது தகப்பனருக்கு எவ்வளவு கடமைப் பட்டிருக்கவேண்டும்! அதுபோலவே அவனுடைய தகப்பனர் தமது சேமிப்புகளை நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளில் வட்டிக்குப் போட்டுவைக்கத் தாம் செய்துகொண்ட தீர்மானத்துக்கு எவ்வளவு கடமைப்பட்டிருக்கவேண்டும். அதே மாதிரி நீர் உமது மகனுக்குச் செய்யமுடியுமா? அது உம்மைப் பொறுத்ததாகும்.

சிறு சேமிப்புக்காரர்கள் 5 ரூபாய்க்கு ஒரு ஸெர்டிபிகேட்டையாவது, ஒன்று 4 அணு, 8 அணு, 1 ரூபாய் மதிப்புள்ள ஸேவிங்ஸ் ஸ்டாம்புகளையாவது வாங்கலாம். ஸெர்டிபிகேட்டுகளும் ஸ்டாம்புகளும் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற யாதொரு ஏஜெண்டினிடமாகிலும், ஸேவிங்ஸ் பீரோ, தபால் ஆபீஸ்கள் ஆகிய இந்த இடங்களிலாகிலும் கிடைக்கும்.

அறிவுள்ள தகப்பன்மார்களைப் பின்பற்றி உமது வருமானத்தில் மிச்சம் பிடித்ததை......

நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளில் வட்டிக்குப் போட்டுவைக்கவும்.

★ பிரதி 10 ரூபாயும் 12 வருஷங்களுக்குப் பிறகு 15 ரூபாய் ஆகிறது.

★ தனிவட்டி $4\frac{1}{8}$ சத வீதம். இதற்கு இன்கம் டாக்ஸ் கிடையாது.

★ மூன்று வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட் விஷயத்தில் 18 மாதங்களுக்குப் பிறகு) அதுவரையில் சேர்ந்துவந்த வட்டியுடன் பணமாக மாற்றிக் கொள்ளலாம்.

AAA 124

நீண்ட தமிழால் உலகை
நேமியின் அளந்தான் — கம்பர்

அட்டைச் சித்திரம்:

கார்த்திகை விளக்கு

கோலமிட்டு விளக்கினை யேற்றிக்
கூடி நின்று பராசக்தி முன்னே
ஓல மிட்டுப் புகழ்ச்சிகள் சொல்வார்
உண்மை கண்டிலர் வையத்து மாக்கள்:
ஞால முற்றும் பராசக்தி தோற்றம்
ஞால மென்ற விளக்கினை யேற்றிக்
காலமுற்றுந் தொழுதிடல் வேண்டும்.

— பாரதியார்



விஞ்ஞான ஆராய்ச்சி:

முதல் இந்திய விஞ்ஞானி

1972 37.

[ஆர். கே. விசுவநாதன்]

நம் நாட்டில் ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு முதலில் வந்த பாகம் வங்காளம்தான். வெகுநாள் வரை இந்தியாவுக்கு கல்கத்தா நகரம் தலைநகராக இருந்து வந்தது. மேனாட்டு முறையில் பள்ளிக் கூடங்கள் முதலில் ஏற்பட்டதும் வங்காளத்தில்தான். இப்பள்ளிக் கூடங்களில் எல்லாப் பாடங்களும் ஆங்கில பாஷையிலேயே கற்பிக்கப் பட்டன. இவற்றில் படித்தவர் களுக்கு வேலை அதிகமாகக் கிடைத்ததினால் வங்காளத்தின் பல பாகங்களில் இப்புது மாதிரிப் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டு நாளடைவில் இந்தியாவின் மற்ற பாகங்களிலும் ஏற்பட்டன. விஞ்ஞான பாடங்களும் கற்பிக்கப் பட்டன. இவற்றை முதலில் கற்கத் தொடங்கினவர்கள் வங்காளிகள்தான்.

அச்சமயம் வங்காளத்திலுள்ள இளைஞர்கள் பலர் இப்பள்ளிக்கூடங்களில் பாடங்களை முடித்துக் கொண்டு மேல்ப் படிப்புக்காக இங்கிலாந்துக்குச் சென்று வந்தார்கள். அக்காலத்தில் ஆங்கிலேயர்களுக்கு சமத்துவமாக விஞ்ஞான அறிவில் இந்தியர்கள் ஒருநாளும் வரமுடியாது என்ற எண்ணம் பெரும்பாலர்களினிடையே இருந்து வந்தது. அச்சமயத்தில் தோன்றி விஞ்ஞான விஷயங்களை நன்கு கற்று மேனாட்டாரைப் போல நூதனமான ஆராய்ச்சிகள் செய்து முதல் இந்திய விஞ்ஞானி என்று பெயர் எடுத்தவர் ஸர். ஜகதீஸ் சந்திரபோஸ் என்னும் பெரியார்.

இப்பெரியார் வங்காளத்தில் 1858 ஆம் ஆண்டு நவம்பர் 30 ம் தேதி டாக்கா ஜில்லாவை சேர்ந்த ராரிகால் என்னும் கிராமத்தில் பிறந்தார். அச்சமயம் பாரிட்பூரில் இவரது தகப்பனார் டெப்டி கலெக்டராக வேலை பார்த்து வந்தார். நல்லவேலை பார்த்து வந்த போதிலும் நூதனமாக தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டுமென்று முயன்றதில் பணத்தை எல்லாம் செலவழித்து விட்டார். எனவே படிப்பில் அதிக ஆர்வம் காட்டிய இவரை மேல்ப் படிப்புக்காக இங்கிலாந்திற்கு அனுப்ப முடியாமல் இவர் தகப்பனார் தவித்தார். அவரது மனைவியார் தமது நகைகளை விற்று மகனை இங்கிலாந்துக்கு அனுப்புவதற்கு வேண்டிய பணத்தைக் கொடுத்தார் என்று தெரிகிறது.

வைத்திய பரீக்ஷை தேறுவதற்காக இவர் இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்ட போதிலும் அங்கு சென்றவுடன் அந்நோக்கத்தை விட்டுவிட்டு பௌதிகம், ரசாயனம், தாவர நூல் முதலிய பகுதிகளில் பரீட்சை கொடுத்து கேம்பிரிட்ஜிலும், லண்டனிலும் பட்டம் பெற்றார். அக்காலத்தில்

இங்கிலாந்தில் பிரசித்தி பெற்ற விஞ்ஞானிகளான ராலே, மைக்கேல் பாஸ்டர், டார்வின், டிவார் முதலியவர்கள் இவருக்கு ஆசிரியர்களாக இருந்தார்கள். போஸ் இவர்கள் எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்ருர். படிப்பை முடித்துக் கொண்டு இந்தியாவுக்கு வந்தவுடன் கல்கத்தா இராசதானிக் கல்லூரியில் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.

இயற்கை விநோதங்களைக் கண்டு களிப்பதிலும் அவற்றைப் படம் பிடிப்பதிலும் சில வருஷங்கள் கழித்தார். முப்பத்தைந்து வயதுக்குமேல்தான் முழுமுறமாக விஞ்ஞான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார் இவர்.

தற்காலம் ரேடியோ மூலம் பிரசங்கங்களையும், பாட்டுகளையும் கேட்டு ஆனந்தித்து வருகின்ருேம். இது எவ்வாறு நடைபெறுகிறது. என்பதைப் பற்றி அனேகருக்குக் கவலை இல்லை. இதற்காக அனேக ஆராய்ச்சிகள் நடைபெற்றன. கம்பிகளின் மூலமாகத் தொலையிலுள்ள இடங்களுக்கு வெகுநாள் வரை சமாசாரத்தை அனுப்பி வந்தார்கள். இதில் செலவு அதிகம். இம்முறைக்கு ஆங்காங்கே தந்தி மரங்களை நாட்டி, கம்பிகளைக் கொண்டுபோக வேண்டியிருக்கிறது. கடல் மார்க்கமாக சமாசாரத்தை அனுப்ப முடியவில்லை. எனவே இக்குறைபாடுகளை உத்தேசித்து கம்பியே இல்லாமல் அயல் நாடுகளுக்கு சமாசாரங்களை அனுப்ப முடியுமா என்று ஆராயப் புகுந்தார்கள்.

செய்திகளை ஏற்றுச் செல்வதற்கு ஓர் சாதனம் வேண்டுமே. இது சம்பந்தமாக செய்யப்பட்ட ஆராய்ச்சிகளில்தான் போஸ் பங்கெடுத்துக் கொண்டார். கடற்கரையில் அனைவரும் அலைகளை கவனித்திருக்கலாம். இவை நீரில் செல்லும் அலைகள். இதைப் போல காற்றில் செல்லும் அலைகளுக்குத்தான் ஒலி அலைகள் என்று பெயர். இவற்றின் உதவியினுல்தான் நாம் ஒலியைக் கேட்கின்ருேம். ஒலியைப் போல ஒளியும் அலைகளாகவே பரவி நம் கண்ணில் உணர்ச்சியை உண்டாக்குகிறது. ஒலி அலைகள் காற்றில் ஒரு விநாடிக்கு ஆயிரத்து நூறு அடி வீதம் செல்லும். ஆனால் ஒளி அலைகள் விசும்பில் ஒரு விநாடிக்கு நூற்று எண்பத்தாராயிரம் மைல் வீதம் செல்லும். மாக்ஸ் வெல் (Maxwell) என்ற விஞ்ஞானி மின்காந்த அலைகள் (Electro magnetic wans) என்று மற்ருெரு வகை அலைகள் இருக்க வேண்டுமென்றும் அவை ஒளி அலைகள் செல்லும் வேகத்தோடு செல்ல வேண்டுமென்றும் எடுத்துக் காட்டினர். உடனே இத்தகைய அலைகளை எவ்வாறு உற்பத்தி செய்வது என்று விஞ்ஞானிகள் பல இடங்களில் ஆராயத் தொடங்கினர்கள்.

“ஹெர்ட்ஸ்” (Herts) என்னும் ஜெர்மனி தேசத்து விஞ்ஞானி இவற்றை உற்பத்தி செய்யும் வழியைக் கண்டுபிடித்தார். இச்செய்தி உலகெங்கும் பரவிற்று. பலர் இது போல மின்காந்த அலைகளை உற்பத்தி செய்யக் கருவிகள் இயற்றலாயினர். பேரறிஞர் போஸும் இவர்களில் ஒருவர். மற்றவர்கள் இயற்றிய கருவிகளைக் காட்டிலும் இவர் இயற்றிய கருவி மிகவும் சிறியதாகவும் கையாளுவதற்கு எளிதாகவும் இருந்ததினுல் எல்லோரும் இதைப் புகழ்ந்தார்கள்.

இது ஒருபுற மிருக்க இவ்வலை களின் பண்புகளைப் பற்றி இவர் செய்த ஆராய்ச்சிகள்தான் பிர சித்தி பெற்றவை. ஒலி அல்லது ஒளி அலைகள் ஒரு கண்ணுடியின் மீது மோதும்போது பிரதிபலனம் ஆவதையும், கண்ணுடி மூலம் ஊடுருவிச் செல்லுவதையும் எல் லோரும் கவனித்திருக்கலாம். இதைப் போல இம் மின்காந்த அலைகள் பாதிக்கப் படுகின்ற னவா என்று ஆராய்ந்தார் போஸ். மின்காந்த அலைகளும் ஒளி அலை களும் ஒரே வகையைச் சேர்ந்த வையே என்று காட்டினர். இத் துடன் இவ்வலைகளைக் கொண்டு ஒலியைப் பரப்பலாம் என்றும் எடுத்துக் காட்டினர்.

இவர் கண்ட முடிவுகளை இங்கி லாந்திலுள்ள பிரபல விஞ்ஞானப் பத்திரிகைகளில் பிரசுரித்து வெளி யிட்டார். இவரைப் போல ஆராய்ச்சிகள் நடத்தி வந்த ஆலிவர் லாட்ஜ் என்னும் பேரறி ஞர் இவரது முடிவுகளை ஊர்ஜிதப் படுத்தி இவரைப் பாராட்டினர். இதன் பயனுக விஞ்ஞான உலகில் இந்தியாவின் சார்பாக முதலிடம் இவருக்கு அளிக்கப்பட்டது.

இவரது ஆராய்ச்சிகளின் மற் றொரு பகுதியை இப்பொழுது கவனிப்போம். இவை தாவரங் களைப் பற்றிய ஆராய்ச்சிகள். தாவரங்களின் வளர்ச்சியைக் கவ னித்து அவற்றின் மர்மங்கள் பலவற்றை உணர்ந்தார். உயிரற்ற பொருள்கள் என்று ஒன்றுமே கிடையாது என்ற முடிவுக்கு வந்தார். பிராணிகளின் வாழ்வைப் போல தாவரங்களும் வாழ்வதைக் கண்டார். பிராணிகளைப் போல தாவரங்களுக்கும் உணவு இந்திரி யங்கள் இருப்பதைக் காட்டினர். பிராணிகளினிடத்திலுள்ள இரு தயம் எவ்வாறு இரத்தக் குழாய் களின் மூலம் இரத்தத்தை அனுப் புகின்றதோ அதைப்போல தாவ ரங்களிலும் நடைபெறுகிறது என்றும் காட்டினர். மயக்க மருந்தால் பிராணிகளை நினைவிழக் கச் செய்வது போல தாவரங் களையும் நினைவிழக்கச் செய்யலா மென்றும் காட்டினர். ஓர் மரத் துக்குக் குளோரோபாரம் கொடு த்து அது பிராணிகளைப் போல நினைவிழப்பதைப் பார்த்தார். மின்சாரத்தைக் கொண்டு பிராணி களில் அதிர்ச்சியை உண்டுபண்ண லாம். அதிர்ச்சியினுல் பிராணிகள் அவஸ்தைப் படுவதை நாம் பார்க் கிறோம். அதைப்போல தாவரங் களும் அதிர்ச்சியினுல் அவஸ்தைப் படுவதைத் தக்க கருவிகளைக் கொண்டு நிரூபித்துக் காண்பித் தார்.

மேற்கொண்டு சில சோதனை களில் தாவரங்களுக்கும் விஷத்தி ஞல் தீங்கு நேரிடுவதைக் கண் டார். விஷம் சிறிதளவு கொடுக் கப்பட்டால் செடி கொடிகள் சுறு சுறுப்பாக வளர்வதையும் அதிகமாகக் கொடுக்கப்பட்டால் உடனே இறந்து விடுவதையும் கண்டார். இவ்வாருக சோதனை கள் பலவற்றைச் செய்து உயி ரற்ற பொருள்களென்று நாம் கருதும் தாவரங்களினிடத்தும் உயிருக்குரிய உணர்ச்சி இருப் பதை எடுத்துக் காட்டினர். இச் சோதனைகளுக்காக இவர் இயற் றிய கருவிகள் மிகவும் நுட்பமான வை. இக்கருவிகளின் சூக்ஷமங் கள் எல்லா விஞ்ஞானிகளையும் திகைக்கச் செய்தன. இவரது crescograph என்னும் கருவியால் இயக்கத்தை பத்து லக்ஷம் மடங்கு பெருக்குவதற்கு வசதி இருந்தது.

பாரிஸ் நகரத்தில் அச்சமயம் நடைபெற்ற விஞ்ஞான மகா

நாட்டிற்குச் சென்று இவர் கண்ட முடிவுகளை எடுத்துரைத்தார். பலர் இவற்றை ஒப்புகொள்ளவில்லை. ஆனல் இவருக்கு ஆசிரியர்களாக விருந்த "ராலே" "டிவார்" என்ற விஞ்ஞானிகள் இவரது ஆராய்ச்சிகளைக் கண்டு வியந்து இவரை இங்கிலாந்துக்கு அழைத்துச் சென்று "டேவி" சோதனைச் சாலையில் இதுபோன்ற ஆராய்ச்சிகள் நடத்துவதற்கு வசதி அளித்தார்கள். அங்கு சில காலம் தங்கி, பின் இந்தியாவுக்குத் திரும்பினர் போஸ்.

இவர் இராசதானி கல்லூரியிலிருந்து விலகியவுடன் ஆராய்ச்சிகளை நிறுத்தாமல் செய்து வருவதற்காக ஓர் சோதனைச்சாலையின் அவசியத்தை உணர்ந்து அதை ஸ்தாபிப்பதற்கு வேண்டிய முயற்சியை எடுத்துக் கொண்டார். கவர்ன்மெண்டாரும் பல தனவந்தர்களும், இவருக்குப் பண உதவி அளித்தார்கள். மேலும் இவருக்குக் கிடைத்த சம்பள பாக்கி முழுவதையும் இதற்குக் கொடுத்தார். கட்டிடத்தைக் கட்டி ஆராய்ச்சிகளுக்கு வேண்டிய கருவிகளைச் சேகரித்து சோதனைச்சாலையை ஸ்தாபித்தார். இதற்கு Bose Institute என்று பெயர். இப்பொழுதும் இங்கு தாவர நூற் பகுதியில் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.

இவரது அரிய சேவையைப் பாராட்டி இவருக்கு கவர்ன்மெண்டார் பல பட்டங்கள் அளித்தார்கள். இங்கிலாந்திலுள்ள அரசாங்கக் கழகமும் (Royal Society) இவரை அங்கத்தினராக (F. R. S.) தேர்ந்தெடுத்தது. 1937-ம் ஆண்டின் இறுதியில் இவரது பூத உடல் மறைந்தது.

இவர் விஞ்ஞான அறிவு வளர்ச்சிக்குச் செய்த பேருதவி ஒருபுறமிருக்க நம் நாட்டின் செல்வாக்கை விஞ்ஞான உலகில் இவர் உயர்த்தினதைத்தான் நாம் அதிகம் பாராட்ட வேண்டும்.

இவரது வழியைப் பின்பற்றித் தான் தற்காலம் இந்தியாவின் பல பாகங்களில் விஞ்ஞானிகள் அறிவு வளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இவர் செய்தது போல நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரபல விஞ்ஞானியும் தனவந்தர்களின் உதவியைக் கொண்டோ அல்லது கவர்ன்மெண்டாரின் உதவியைக் கொண்டோ அவரவர் துறைகளில் ஆராய்ச்சிகள் செய்வதற்கென்றே சோதனைச் சாலைகளை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு செய்து பலருக்கு இப்பயிற்சி அளித்தால் தான் அமெரிக்கா போன்ற நாடுகளுடன் நம் தேசத்து விஞ்ஞானிகளுடன் நாம் முன்னேற முடியும்.

விஞ்ஞான அறிவு வளர்ச்சியில் முதன் முதலில் ஈடுபட்டு நமக்கு வழி காட்டியாக இருந்த ஸர். ஜகதீஸ் சந்திர போஸுக்கு நாம் என்றும் கடமைப்பட்டிருக்கிறோம்.

● ★ ●

மாயையின் முன்பு

[கு. ப. சேது அம்மாள்]

ஆடி மாதத்துக் கருமேகக் கூட்டங்கள் மேல் வானத்தில் ஒளிய ஓடும் சூரியனை மறைக்கும் மாலை நேரம். இடைவெளிகளிலிருந்து புறப்படும் சூரிய கிரணங்கள் பாய்ந்து வந்து இயற்கையின் வனப்பை மிகைப்படுத்தி, பின்னும் சோபையுறச் செய்யும் அந்தி வேளை. அரண்மனையின் கால அறிவிப்பு மணி கம்பீரமாக ஒலித்து நின்றது.

நீராப் பொறியாக, கண்ணெதிரே வந்து நர்த்தனமாடிக்கொண்டிருந்த நடன மாதர்களைப் பார்த்து நடனத்தை நிறுத்துமாறு ஜாடை செய்து தெரிவித்தான் சித்தார்த்தன்.

சிலம்புகளின் ஒலியும், பின்னணி வாத்தியங்களும் சட்டென்று நின்றன. அனைவரும் அரசிளங்குமாரனிடம் உத்தரவு பெற்று வெளியேறிக் கொண்டிருந்தார்கள். க்ஷணநேரத்திற்குள்ளாகவே அங்கு நிசப்தம் குடிகொண்டு விட்டது!

"அப்பாட!" என்று ஒரு பெருமூச்செறிந்தபடியே ஆசனத்தில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்துவிட்ட இளவரசனை வியப்புடன் பார்த்துக் கொண்டு நின்றார்கள் மெய்க்காப்பாளர்கள்.

சிந்தனை கலைந்து நிமிர்ந்து உட்கார்ந்து, மூடிய கண்களைத் திறந்து சாவதானமாகச் சுற்று முற்றும் பார்த்தார்; தம்மையும் பார்த்துக் கொண்டார். உடம்பின் மீது அரசாட்சிக்கு உரிய முறையில் அணிந்திருந்த இரண்டொரு அணிகளும்கூட அவருக்கு ஒரு சுமை போலத் தோன்றி இருக்க வேண்டும்! மேலே போர்த்திருந்த உத்தரீயத்தை எடுத்துப் போட்டார். கிரீடத்தையும் தோள்வளைகளையும், மாலைகளையும் கழற்றி வைத்துவிட்டு எழுந்து தமது ஏகாந்த மாளிகையை நோக்கி நடந்தார்.

மாளிகையின் வாசலை அடைந்ததும் பின் தொடர்ந்த மெய்க்காப்பாளர்களும் அங்கேயே நிறுத்தப்பட்டனர். தனியாக சித்தார்த்தன் உள்ளே சென்றார்.

யோசனையில் உழன்று கொண்டிருந்த அவருக்கு ஒரு இடத்திலும் இருப்புக் கொள்ளவில்லை. அலைபாயும் எண்ணங்களுடன் போராடிக் கொண்டு அங்கு மிங்குமாக உலாவினர்.

அலங்காரமற்ற மேனியுடன் பளிங்கு ஆசனத்தில் சோர்ந்து உட்கார்ந்து கொண்டிருந்த சித்தார்த்தனைப் பார்த்து திடுக்கிட்டு நின்றாள், அங்கு விளக்கேற்ற வந்த தாதி!

சக்கரவர்த்தியின் திருமகன், மகத நாட்டின் வருங்கால மன்னன் இவ்வாறு சோர்ந்து, கவலையாய்க் காணப்படுவதைப் பார்த்து அயர்ந்து நின்று விட்டாள் அவள்.

அடியோசை கேட்டு அந்தத் திக்கில் திரும்பிப்பார்த்தான் சித்

தார்த்தன். விளக்கும் கையுமாக அவள் நின்ற நிலையைக் கண்டு புன்னகை கொண்டார் தானாக! அந்த இடத்தையும் விட்டு வாய் பேசாமல் உப்பரிகையை நாடிச் சென்றார்.

உச்சி மாடத்தின் திறப்பில் நின்று கொண்டு சுற்று முற்றும் பார்த்தார். மலைவாயில் விழும் சூரியனின் கடைசி கிரணங்கள் அரண்மனையின் உயர்ந்த ஸ்தூபியின் மீது மாத்திரம் படிந்திருந்தது.

ஏக்கம் தேங்கிய பார்வையுடன் அதைப் பார்த்துக் கொண்டே சற்று நேரம் நின்றார்.

சந்தடியின்றி மெல்ல வந்து வணக்கம் செய்து நின்றான் ஒரு மெய்க்காவலன்.

சித்தார்த்தனுடைய கம்பீர பார்வை அவன் மீது திரும்பிற்று 'என்ன?' என்பது போலப் பார்த்தார்.

"தேவியார் தங்களைக் காண விரும்புவதாக அறிவிக்கின்றார்" என்றான் பணிவாக.

சித்தார்த்தனுடைய உள்ளச் சலிப்பு முகத்தில் பிரதிபலித்தது. அத்துடனேயே ஒரு புன்னகையும் பூத்தது!

"வரச்சொல்" என்று சொல்லி மறுபடியும் மௌனத்தில் ஆழ்ந்து விட்டார். அந்த மௌனம் அவனை மேலே பேசாதே' என்பதாகத் தெரிவித்தது.

அவன் திரும்பிச் சென்று செய்திக்காகக் காத்திருந்த தோழியிடம் இளவரசனுடைய கட்டளையைத் தெரிவித்தான்.

தூதியின் அறிவிப்பைக் கேட்டதும் யசோதரை அயர்ந்து போனாள்! திகில் நிரம்பிய குரலில் நடுக்கம் தொனிக்க "எங்கு இருக்கிறார்; என்னை எங்கு வரச் சொல்லுகிறார்?" என்று தீனமாகக் கேட்டாள்.

"அவருடைய ஏகாந்த மாளிகையின் உப்பரிகையிலிருக்கிறார்"

"அவ்விடத்திற்கா என்னை வரச் சொன்னார்?"

"ஆமம்மா?"

"கவனமாகக் கேட்டாயா, செய்தி சொன்னது யார் உன்னிடம்?" என்று சந்தேகத்துடன் கேட்டாள் மீண்டும்.

"இளவரசருடைய மெய்க்காப்பாளன்தான்!"

"நீ என்னவென்று செய்தி அனுப்பினாய்?"

"தாங்கள் தெரிவித்தபடிதான் அம்மா. ஒருக்கால் — வெளி வாசலில் நின்று உத்தரவு கேட்பதாக நினைத்தாரே என்னவோ?"

யாதோதரை மௌனமாகி விட்டாள். விநாடிக்கெல்லாம் அதிலிருந்து மீண்டு வேதனைச் சிரிப்புடன். "ஆம்! தோழி, இருக்கலாம் அப்படியும்! உலகின் எண்ணற்ற மானிடத் தொகையில் நானும் ஒருத்திதான்! ஆ!" என்றாள்.

ஒரு உலுப்பு உலுத்து அடங்கிற்று அவள் உடலும் உள்ளமும்! சுடரொளி கொண்ட விழிகளிலிருந்து இரு துளி கண்ணீர், முத்துக்கள் போல உதிர்ந்தன.

"ஊம், சரி புறப்பட வேண்டும். குழந்தை எங்கே? கொண்டு வரச் சொல்" என்றாள்.

யசோதரையின் உறுதுணையான சீலவதி, குழந்தை ராகுலனுடன்

குலாவிக் கொண்டே அங்கு வந்தாள். அவள் வந்ததுமே அவளிடமிருந்த குழந்தையை வாங்கிக் கொண்டு "நட சீலவதி!" என்ருள் தானும் புறப்பட்டுக் கொண்டே.

அவளுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. யசோதரையின் வாடிய முகமும், ஒடுக்கமும் கண்டு மலைத்து நின்ருள் — எங்கே போக வேண்டும் என்பது தெரியாமல்!

"என்னடி விழிக்கிருய்? இளவரசரைக் கண்டு வரவேண்டும். புறப்படு" என்று அறிவித்துக் கொண்டே இடத்தை விட்டு எழுந்தாள்.

சீலவதி ஒன்றும் பதில் சொல்லவில்லை. மௌனமாக அதற்கு ஆயத்தம் செய்யும் வகையில் சம்பக மொட்டுகளாலும், புன்னை பாதிரி, மகிழம் பூக்களாலுமான விசித்திர மாலையை அவள் கழுத்தில் சூட்டிஞள். சோபை பெற்ற பொன் மகுடத்தை யசோதரைக்கு அணிவித்தாள். ஜாதி மலர்க் கங்கணங்களைக் கைகளில் பூட்டிஞள்.

"போதுமடி இதெல்லாம், புறப்படு என்கிறேன் — அலங்காரம் செய்கிருயே என்னவோ — எல்லாம் தெரிந்தும்?" என்று கவலையுடன் மெல்லிய குரலில் சொல்லிக் கொண்டு நடக்க ஆரம்பித்தாள்.

அவசர அவசரமாகப் பட்டுச் சல்லாவை மேலே போர்த்திவிட்டு அவளுடன் நடந்து கொண்டே, யசோதரா, அலங்காரம் செய்ய வேண்டும் என்றுதான் செய்கிறேன்! தைரியமாக இரு. உன் பதிபக்தி உன்னைக் காப்பாற்றும். பயப்படாதே. கனவுக்காக இப்படிப் பயப்படுகிறவர்கள் உண்டா எங்காவது?"



சீலவதியின் ஆறுதல் மொழிகள் விழலுக்கிறைத்த நீராயிற்று. வேதனை நிறைந்த மனதுடன், அச்சமும், துயரும் ததும்பும் குரலில் "ராகுலா, என் செல்வமே உன்னைக் காண்பித்தாவது உய்ய மார்க்கம் காண்பேனு?" என்று

இடுப்பிலிருந்த குழந்தையைத் தூக்கியெடுத்து மார்புடன் அணைத்துக் கொண்டாள். அவள் மேனி நடுங்கிற்று.

சீலவதி உடனே அவள் கைகளைப் பற்றிக் கொண்டு கெஞ்சும் பாவனையாக "யசோதரா, நாம் எங்கு செல்கிறோம்? இன்னும் எவ்வளவு தூரம்......"

"அதிக மில்லை! இளவரசருடைய ஏகாந்த மாளிகைக்கு. ஏன், உன்னால் நடக்க இயலவில்லையா?" என்று கேட்டாள் யசோதரா.

"நீ இப்போது இன்னும் சில அடிகள் நடப்பதுகூட......"

சீலவதி இன்னும் வார்த்தையை முடிக்கவில்லை. அதற்குள்ளேயே யசோதரை இடை மறித்து வேதனைக் குரலில் கேலி தொனிக்க 'ஓ! அதற்காகக் கேட்டாயா? சில அடிகளென்ன? காதமானாலும் நடப்பேன்! ஆயிற்று, அதோ தெரிகிறது பார்; அதுதான் அவருடைய ஏகாந்த மாளிகை. நட! என்று சொன்னாள்.

சீலவதி ஒன்றும் பேசவில்லை. தனக்குள்ளாக யோசிக்கலானாள் 'ஆ, எவ்வளவு மனவேதனை கொண்டிருந்தால் இவ்வித வேற்றுமை பாவமும், சலிப்பும் தோன்றப் பேச வேண்டும்? இனிமையும், இங்கிதமுமே சுபாவமாகப் படைத்த யசோதரை, என்ன நேர இருக்கிறது என்று இப்படி மனக்குலைவுற்றிருக்கிறாள்?'

துரிதமாக நடந்து மாளிகை வாயிலை அடைந்தாள் யசோதரை. அஞ்சலி செய்து வழி விட்ட காவலர்களைத் தாண்டிக் கொண்டு உள்ளே சென்றாள்.

மேன்மாடத்திற்குப் போகும் முன் ஹாலில் நின்று விட்டாள் சீலவதி; அதாவது நிறுத்தப்பட்டு விட்டாள் யசோதரையால். தான் மட்டும் குழந்தையுடன் சென்றாள்

சற்று தூரத்திலிருந்த பளிங்கு மேடையில் கால்மேல் காலிட்டுக் கொண்டு சிம்மத்தைப் போன்ற கம்பீரத்துடன் அமர்ந்திருந்த சித்தார்த்தனைக் கண்டு பரவசமாகி ஒரு கணம் நின்று பார்த்து விட்டு நடந்து அருகில் சென்றாள்.

பாலாடை நிறத்தைப் போன்ற உடலழகு படைத்த தூய வெண் பட்டாடை உடுத்து, மலராலும் அணிகளாலும் அலங்கரிக்கப்பட்டு அரச அன்னத்தைப்போன்ற நடையுடன் ஆவல் துள்ள தம்மை நோக்கி வரும் பத்தினியை சித்தார்த்தன் இரக்கம் நிறைந்த விழிகளால் பார்த்துக் கொண்டே இருந்தார், தன் அருகில் வரும் வரையில்.

மெல்ல அருகில் வந்து, இடுப்பிலிருந்த குழந்தையைக் கீழே இறக்கி விட்டு, பதியின் பாதங்களில் தலை வைத்து வணங்கினாள் யசோதரை. கடகடவென்று பெருகிய கண்ணீர் அவருடைய பாதங்களை நனைத்தது.

பச்சாதாபம் ததும்ப "எழுந்திரு யசோதரா" என்று இனிமையாக மொழிந்து குனிந்து அவள் கைகளைப்பற்றி தூக்கியெடுத்தார்.

மண்டியிட்டு அவருடைய கால்களை அணைத்துக் கொண்டு முழங்கால்களுக் கிடையில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். அவளுடைய புஜங்கள் தணிந்து தணிந்து உயர்ந்தன.

பரம கருணையுடன் அவள் முதுகைத் தடவிக் கொடுத்து "என்

யசோதரா, எதற்காக இப்படி வருத்தப் படுகிறாய்? என்ன நேர்ந்தது உனக்கு?'' என்று கேட்டார்.

''பிரபுவே, நேற்றிரவைப் போலவே இன்று பகலிலும் கனாக்கண்டேன். நாதா, வேதனையால் என்னுடைய நெஞ்சு வெடித்து விடும்போல....'' என்று விம்மிக் கொண்டே அவருடைய கரங்களிரண்டையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு தீனமாகப் புலம்பினாள் யசோதரை.

யோசனையிலேயே ஆழ்ந்திருந்த சித்தார்த்தனுக்கு யசோதரையின் பிரலாபம் கண்டு மனம் தடுமாறிற்று! பிரபஞ்ச மாயையின் மர்மக் கிளர்ச்சிகளும், பாசவலிமையும் கண்டு சிரிப்புத்தான் வந்தது அவருக்கு! மிகவும் இரக்கத்துடன் அவள் முகத்தை நிமிர்த்திப் பிடித்துக் கொண்டு ''தேவி, வெறும் கனவுக்காக இப்படிப் பயந்து மன வலிமையை இழப்பார்களா யாராவது — உன்னைப் போல; ஊம்?''

''ஆம், எனக்கு மனோ வலிமை கிடையாது! தாங்கள் அதை அருள வேண்டும் நாதா! எனக்கு வலிமை தாருங்கள், அமைதி தாருங்கள், சந்தோஷம் தாருங்கள்......''

யசோதரையின் கபடமற்ற பாவத்தைக் கண்ட சித்தார்த்தனின் மனம் குழம்பியது. மிகுந்த பிரயாசைப்பட்டு தன்னை அடக்கிக் கொண்டு இரக்கத்துடன் ''யசோதரா, எழுந்து உட்கார். கண்களைத் துடைத்துக் கொள் முதலில். பிறகு பேசலாம்'' என்றார்.

சட்டென்று முகத்தைத் துடைத்துக் கொண்டு அருகில் அமர்ந்து ''தாங்கள் சொற்படியே நடக்கிறேன். என்ன சொன்னாலும் கேட்கிறேன். என் பிராணேச்வரா, ஏனிப்படி ஆகிவிட்டீர்கள் என்பதை எனக்கு உரைக்க மாட்டீர்களா?'' என்று கெஞ்சும் கண்களுடன் அவரைக் கூர்ந்து பார்த்தாள்.

''அதுதான் லட்சம் தரம் சொல்லியிருக்கிறேனே உன்னிடம்?''

''தாங்கள் ஒருவர் கஷ்டப்படுவதால் — துயரப் படுவதால் மானிடரின் எண்ணற்ற துயரங்கள் நீங்கி விடுமா? அரசுரிமை ஏற்று அதற்கு ஆவனவற்றைச் செய்வது முறையல்லவா? இரவு பகலாக இப்படித் தனிமையில் துயருற்று வாடுவதைக் காண......''

''யசோதரா, கவலைப்பட்டுத்தான் கவலையை நீக்க வேண்டும். அது இருக்கட்டும் — நீ இப்போது வந்த காரியமென்ன?'' என்று பேச்சை மாற்றினார்.

கண்ணீர் நீரைக் கொட்ட, பொங்கும் உணர்ச்சியுடன் ''தங்களுடைய உபதேசத்தின்படியே என்னலான வரையில் என்னைத் தேற்றிக் கொள்ளுகிறேன். தூங்கினால்தானே கனவு காண நேரும் என்று தூங்காமலிருக்க உபாயம் தேடினேன் — என்னென்னவோ

செய்தேன். என் யுக்திகள் ஒன்றும் பலிக்கவில்லை. பட்டப்பகலில் உட்கார்ந்தபடியே தூங்கிய அரைத் தூக்கத்திலும் அதே கெட்ட கனவுதானா காண வேண்டும்? என்னால் அங்கு தனித்திருக்க மனம் கொள்ளவில்லை. இனித் தங்களை விட்டுப் பிரியவே மாட்டேன். நாதா, பீதியால் நடுங்கும் என் உடல் உண்மையைச் சொல்ல வில்லையா தங்களுக்கு? என் மீது இரக்க மில்லையா?

ஏனோ யசோதரையின் இந்தத் தேன் மொழிகள் நாராசமாய்ப் பாய்ந்தது சித்தார்த்தனுடைய காதுகளில்! கஷ்டப்பட்டு அவற்றைச் சகித்துக் கொண்டு "பார்த்தாயா யசோதா, மறுபடியும் அஞ்ஞானம் தலை தூக்குகிறதே உன் மனதில்?"

அது வரையில் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்த ராகுலன் மெல்லத் தாயின் அருகில் வந்து கால்களைப் பற்றிக் கொண்டு எழுந்து நிற்க முயன்றான்.

சட்டென்று யசோதரைக்கு நினைவு வந்தது. குழந்தையை தகப்பனாரின் கால்களைப் பற்றிக் கொண்டு நிற்க வைத்தாள். "ராகுலா, யார் இது? அப்பா! சொல்லு நீ! அப்பா......" என்று கவலையை மறந்து மகிழ்ச்சியுடன் தன் குழந்தைக்குப் பேசக்கற்பித்தாள். மழலைச் சொல்லில் தகப்பனாரை அழைக்கக் கற்றுக் கொடுக்க இரண்டு நாளாக அவள் பட்டபாடு பலித்தது!

குழந்தை ராகுலன் தகப்பனாரின் மடியில் உட்கார்ந்து கொண்டு அவருடைய முகத்தைப் பார்த்து 'அப்பா' என்று அழைக்க வேண்டும் என்பது அவள் ஆசை!

ஒரு முறை அல்ல! தாயின் போதனையால் பல தடவைகள் அந்த அமிர்தச் சொல்லைச் சொல்லி அழைத்தான் ராகுலன் தனது பிதாவை!

முதல் முதலில் மலர்ந்த அதே மலர்வுடன், மாறுதலற்ற அதே முக பாவத்துடன் உட்கார்ந்திருந்தான் சித்தார்த்தன். மனைவியின் பரிபூரணப் பிரேமை, மதலையின் இன்சொல் இரண்டும் சேர்ந்து அவரைப் பிணித்துவிடப் பார்த்தன! அதை சித்தார்த்தன் தெளிவாகத் தம்மில் தெரிந்து கொண்டார்.

கடின பரீட்சை ஏற்பட்டும் கூட தளராத தம் மன உறுதியைப் பற்றித் தாமே வியந்து கொண்டார். சட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்து "யசோதரா, இருட்டி வெகு நேரமாகி விட்டது. நீ அந்தப்புரம் செல். நான்

இதோ வருகிறேன்" என்று எழுந்தார்.

"சீக்கிரமே வருகிறீர்களா?" என்று கேட்ட யசோதாவை

தரையின் ஆசையையும் பாசத்தையும், பிரேமையையும் கண்டு குழப்ப மடைந்தவராக சற்று பிரமித்து நின்று, பிறகு தெளிவடைந்து "அப்படியே யசோதரா, செல் வருகிறேன்" என்று அவளை அழைத்துக் கொண்டு உப்பரிகையின் கீழ்ப்படி வரையில் வந்து வழி யனுப்பி விட்டுத் திரும்பிச் சென்று யோசனையில் ஆழ்ந்தவராக அங்குமிங்குமாக உலாவினர்.

யசோதரையின் வரவும், சம்பாஷணையும், அவர்து சித்த உறுதியைத் தளர்த்தி விட்டதுபோல அவர் உணர்ந்தார். அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று மறுபடியும் தம்மைப் பிணிக்க முயலும் பாச உணர்ச்சியைப் பலவந்தமாக ஒதுக்கித் தள்ளி விட்டுத் தாம் செல்ல விருக்கும் தூய பணியைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினர்.

நேரம் போனதே தெரியாமல் போய், முதல் ஜாமம் கழிந்து விட்டதை உணர்ந்து ஒருப்பட்ட மனதுடன் இடத்தை விட்டு எழுந்தார் — யசோதரையின் இருப்பிடத்திற்குச் செல்ல!

"பாவம், களங்கமற்ற உள்ளம் படைத்த பேதை! யசோதரா என் சதி, உலகத்தின் — எண்ணற்ற மானிடர்களின் உய்வுக்காக நான் முயற்சிக்கிறேன். அதில் உனக்கும் பங்கு உண்டு. நீயும் கடைத்தேற வேண்டுமென்றே உன்னைத் துறந்து சென்று பாடுபட நிச்சயித்து விட்டேன். ஆ! அக்ஞானி! ராகுலன் என்னை இல்லறத்தில் ஊன்றச் செய்து விடுவான் என்று நம்பி வந்திருக்கிறுள், பாவம்! ஆம்! இன்றிரவுதான் தருணம். இனியும் தாமதித்தேனுனல் யசோதரை என்னை விடவே மாட்டாள்! அவளுடைய வேண்டுகோளை நிறைவேற்றுகிறேன்; அவள் நல்ல உறக்கம் கொள்ளும் வரையில்! பிறகு......? பிறகு பந்தமில்லை! நிர்ப்பந்தமுமில்லை. அப்பாட, இந்த இன்பச் சிறையினின்றும் எப்படியும் மீண்டுவிட வேண்டும் இந்த இரவில், நடு நிசியில்"

இப்படி எண்ணமிட்டுக் கொண்டே சாவதானமாக யசோதரையின் அந்தப்புற இன்ப மாளிகையை நோக்கி நடந்தார் சித்தார்த்தன்.

வாழ்க்கைச் சித்திரம்:

ஓடக்களைப்பு...

[கோமதி சுப்ரமண்யம்]

காவிரியில் புது வெள்ளம் இரு கரையும் அலைமோதிக்கொண்டு, நொங்கும் நொரையுமாக சிரித்துக் குமிழிவிட்டுச் சென்றது. மேல் வானத்திலே செம்பொற்குடம் போல் அமிழ்ந்த சூரியனது அந்தி வானம், ஓடும் நீர்ப்பரப்பில் பிரதி பலித்து, ஒரே ஒளிமயமாக உருகி ஓடிற்று. எதிர்க் கரையிலிருந்து வரும் பரிசல், மேகத்தைக் கிழித்து வரும் அம்புலிபோல அவர்கள் கண்ணிற்குப்பட்டது.

"அந்திவானத்தைக் கிழித்து வருவதுபோல், எவ்வளவு அழகாக வருகிறது பரிசல்! ஆம் வாழ்க்கையும் இப்படித்தான்"

"போதுமப்பா உன் பரிகாசம். பெண்ணைப் பிடிக்கா விட்டால் என்ன செய்யப் போகிறோம்?" என்றான் கலியாணம் ஆகவேண்டியவன்.

"இன்னொரு பெண்ணைப் பார்த்தால் போகிறது." என்று சொல்லிச் சிரித்தான் கோபு.

இருவரும், பெண் பார்க்க வந்திருந்தனர். பரிசல் கரையோரமாக வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய பொன்னன் "நீங்க பட்டணத்து ஐயா வீட்டுக்கு வந்தவங்கதானே?" என்று கேட்டான். மாலை வெயில் அவன் முதுகிற்பட்டு, கருகருத்த உடலை நன்கு பளபளப் பாக்கிற்று.

பக்கத்திலிருந்த பெட்டி படுக்கையைப் பரிசலில் தூக்கிவைக்கும்படி சொன்னார்கள். பரிசலோட்டி இருவரையும் ஏற இறங்கப் பார்த்துவிட்டு "என்ன, இவ்வளவு புது வெள்ளத்திலே இரண்டு பேரும் போகவா? முடியாதே... யாராவது ஒருத்தர் ஏறுங்க..." என்றான்.

"ஏண்டாப்பா, ரங்கா நீதான் ஏறு. மாப்பிள்ளை, நீ முதலில் போ" என்றான் கோபு.

"இவருதானா, மாப்பிள்ளை? பொண் பாக்கவந்த வங்கதானே? ரொம்ப சந்தோஷம். ஏறுங்க நீங்கமட்டும்" என்று கரையோரம் படகை வலித்தான்.

"இந்தாடா கோபு, நான்போய் அக்கரையி லிறங்கியதும் படகு வரும். அப்புறம் நீயும் படுக்கை பெட்டியுடன் வந்துவிடு" என்று சொல்லிக்கொண்டே படகில் ஏறினான். படகு ஒருமுறை அசைந்தாடிற்று. பொன்னன் கலகலவெனச் சிரித்தான்.

நதியும் சிரிப்பதுபோல புதிய குமிழிகளை விட்டுக்கொண்டு ஓடிற்று. துடுப்பும் விரைவாக ஓடவே, படகில் இருந்த ரங்கனுக்குப் பயம் ஏற்பட்டது. அந்த மாதிரி படகோட்டும் குலத்தில் அவன் பிறந்திருந்தாலும், வாழ்க்கையின் மேடு பள்ளத்தால் கலாசாலைப் படிப்பும் வியாபாரமும் பெருகி, தண்ணீர்ப் பிரயாணத்தின் பயங்கரத்தை அவன் அறிந்து கொள்ளவில்லை.

பொன்னன் நடு ஆற்றைக் கடந்துபோய்க்கொண்டிருந்தான்.

அவன் மனதில் அநேக சோதனைக் குமிழிகள் குமிழி விட்டுக் கொண்டிருந்தன. இவ்வளவு நேரம் பேசாமல் வந்தவன்...... "உங்களுக்கு நீச்சல் தெரியுமா?" என்று கேட்டான்.

ரங்கன் அப்படியே திடுக்கிட்டுப் போனான். முட்டளவு ஜலத்தில் நீச்சல் அடித்துப் பழக்கம். கிடுகிடு பாதாளம் போன்ற அக்கசத்தில், யானையைக்கூட உருட்டித்தள்ளும் பள்ளத்தில் நீச்சல் அடிக்க முடியாது என்று பட்டது.

"ஏன்" என்று கேட்டான்.

"ஒருவேளை படகு கவிழ்ந்து விட்டால் நீங்கள் சாமாளிக்க முடியுமா?"

"முடியாது."

அந்த வார்த்தை முடிவதற்குள், படகில் ஏதோ ஒரு சுழற்சி...... ஆடி அலைமோதி நின்ற படகிலிருந்து அலக்காகத் தூக்கி எறியப்பட்டான் ரங்கன். 'ஓ'வெனக் கதறி ஓலமிட்டோடும் நதியின் சுழிப்பு வெள்ளத்திற்குள் ரங்கன் உடம்பு...தலை கை...எல்லாம் அமுங்க ஆரம்பித்தது. படகும் மறுகணம் சாந்தமாக அலைந்து கரையை நோக்கிப் போக ஆரம்பித்தது.

பொன்னனுக்கு, ரங்கன் எப்படிக் கஷ்டம் அனுபவிக்கின்றான் எனப் பார்க்க ஆசை. படகுக்குப் பத்தடி தூரத்தில் அரைகுறையான நீச்சல் பழக்கத்தில், கையையும் காலையும் பரிதாபமாக அடித்துக் கொண்டு "ஐயோ... என்னைக் காப்பாற்றேன். ஐயோ!... ஐயோ..." எனக் கதறினான் ரங்கன்.

கதறல் விழவிழ பொன்னனுக்கு உள்ளூர ஆனந்த வெள்ளம் பொங்கியது. கண் இமைக்காமல் பார்த்தான். "ஐயோ...நான் சாகிறேன் கடவுளே கண்ணில்லையா?..." என்று கதறல் கேட்கவே, பொன்னன் சிந்தனையில் பொறி தோன்றியது. பாவம், ஒருவனைக் கொல்வது மகாபாவம் என்று தோன்றிற்று. ஒருகணம் ஒரேகணம் நீந்தத்தெரியாமல் தத்தளிப்பதைக் கண்டு இரக்கமும், ஏனோ தன் செய்கைக்காக பச்சாதாபமும்



எழவே, படகை விரைவாகச் செலுத்தி ஓடும் நதியில் உயிருக்கு மன்றாடும் ரங்கனை மிகுந்த சிரமத்துடன் எடுத்தான்.

ரங்கன் உடம்பெல்லாம் ஒரே நடுக்கம். போன உயிரைக் கரையேற்றியதற்கு மிகவும் நன்றி தெரிவித்துக்கொண்டான் பொன்னன். "ஐயா, இந்த விபத்தைத் தாங்கள் யாரிடமும் தெரிவிக்கவேண்டா"மென்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான்.

"ஏதோ தற்செயலாக ஆபத்து ஏற்பட்டுவிட்டது. சுழலில் தோணி சிக்கியதும்...அப்படிவாரி எறிந்து விட்டதே... தெய்வம் போல் என்னைக் காப்பாற்றினாய்" என்று நன்றி தெரிவித்தான்.

மீண்டும் பொன்னன், இந்த விபத்தை யாரிடமும் அவனுடைய நண்பன் கோபுவிடம்கூடத் தெரிவிக்கக் கூடாதென வேண்டியதற்கு, ரங்கனும் ஒப்புக் கொண்டான்.

கரைசேர்ந்த படகு, மீண்டும் ஆற்றைக் கிழித்துச் சென்று, பெட்டி படுக்கையுடன் கோபுவை அழைத்துத் திரும்பியது. கோபுவிற்கு மிகவும் பயங்கரமாக இருந்தது. ஆற்றின் பேயிரைச்சலில் பொன்னன்எப்படி சற்றும் மனக் கலக்கமின்றிப் படகு ஓட்டுகிறானோ என்றுவியப்பு.எதிர்க்கரையில் ஓங்கி வளர்ந்த விருக்ஷங்களையும்... நீரில் வந்து முத்தமிட்டு நிற்கும் மூங்கிற் புதர்களையும் பார்க்கப் பார்க்க அவனுக்கு ஒரே கோலாகலமா யிருந்தது.

மெதுவாகப் படகு கரைவந்தபோது ஒரு மரத்தடியிலுள்ள வேரின்மேல் உட்கார்ந்திருந்த நண்பனைப் பார்த்தான்.

"ஏண்டா இப்படி நனைந்து விட்டாய்?"

"ஒன்றுமில்லை..." என்று பொன்னனைப் பார்த்தான் ரங்கன்.

பொன்னன் பரிசலை ஓரமாக விட்டுக் கொண்டிருந்தவன், "இல்லை இவரு கரையிறங்கற இடத்திலே வழுக்கி விழுந்துட்டாரு." என்றான்.

இதற்கு 'ஆமாம்' போட்டான் ரங்கன்.

மாற்றுடை தரித்ததும் பெட்டியும் படுக்கையும் எடுத்துக் கொண்டு, இருவரும் நடக்க ஆரம்பித்தார்கள். "காசு கொடுக்கவில்லையே?" என்று கோபுவிடம் கேட்க... "நீ கொடுத்திருப்பாய் என்று நினைத்தேன்" என்று பதில் சொன்னான் கோபு.

ஒரு ரூபாய் எடுத்து நீட்டவே "பட்டணத்து ஐயா வீட்டுக்கு வந்தவங்களண்டே காசு வாங்கலாமா?" என்று மறுத்து விட்டான். ஆற்றங்கரை மேட்டிலிருந்து பிரிந்த ஒற்றையடிப் பாதை வழியாக இருவரும் தோப்புக்குள் மறைந்தார்கள். ஆற்றங்கரையிலிருந்து கூப்பிடு தூரத்திலிருந்தது அந்தக் கிராமம்.

பரிசலை இழுத்து முளையில் கட்டிவிட்டு மேல வானத்தைப் பார்த்தபடியே உட்கார்ந்தான் பொன்னன். பஞ்சவர்ணக் கிளியின் இறக்கை போலிருந்த சந்தியாவானம் அவன் மனதில் ஒன்றவில்லை. நேற்று அதே ஒத்தையடிப் பாதையில் யார் போனது என்ற கேள்வி எழுந்தது. நேற்று பூங்கொடி போன அதே தடத்தில் இன்று அவளைப் பெண்பார்க்கப் போய்க் கொண்டிருக்கும் இருவர்களையும் பார்த்துக் கொண்டேயிருந்தான். வரவர கால், மார்பு, தலை மறைந்துபோக ஆரம்பித்தது.

எழுந்து நின்று பார்த்தான். நடந்து சென்ற இருவரும் மறைந்து விட்டார்கள்.

அவன் மனசிலே பூங்கொடி தோன்றினாள். நேற்று பூங்கொடிக்கும் தனக்கும் ஏற்பட்ட சம்பாஷணை நினைவிற்கு வந்தது. "நாளை என்னைப் பெண்பார்க்க இரண்டுபேர் வருகிறார்கள்!" என்று சொன்னாள். அப்படியே இன்று வந்து விட்டார்கள். பாவம் பொன்னன் மனதிலிருந்த தத்துவார்த்தத்தை அவள் அறிந்திருந்தால். அப்படிச் சொல்லியிருக்கமாட்டாள்! பொன்னனும் தன்மனதைச் சொல்லிக் கொள்ளவில்லை. மாலை நேரத்தில், ஆற்றிலே தனக்காகத் தோணி ஓட்டிப் பொழுது போக்கும் ஓர் பொம்மையாகவே அவனை நினைத்தாள். அவள் பட்டணத்தின் நவ நாகரீகத்திலே வளர்ந்தவள். பொன்னன் மனசிலே எழுந்த உணர்ச்சி அவன் அந்தஸ்துக்குப் புறம்பானது என விதிதான் அறிந்தது. அதைப் பூங்கொடி கண்டு கொள்ளவில்லை.

நேற்று நடந்தது மறுபடியும் பொன்னன் மனவட்டத்தில் எழுந்தது.

வழக்கம்போல, அவள் அழகாக உடுத்திக்கொண்டு வந்திருந்தாள். தாழம்பூ வாசனை ஜம்மென மணத்தது. கூந்தல் தைலத்தின் சுகந்தம் வேறு.

"இன்று உன் அப்பாவிற்கு எப்படி இருக்கிறது?" என்றான் பொன்னன்.

"படகைக் கரைக்குக் கொண்டு வா. நான் ஏறிக்கொள்ளுகிறேன். அப்பாவிற்கு உடம்பு சௌக்யமாகிவிட்டது. ஒருமாதத்திலே கிராமவாசம் பலனளித்து விட்டது. இன்னும் இரண்டு மாதத்தில் மீண்டும் பட்டணத்திற்குப் போய்விடுவோம்.

பரிசல், கரையை யொட்டி வந்துநிற்க பூங்கொடி அதில் ஏறிக் கொண்டாள். பரிசலைத் தள்ளினான் பொன்னன்.

“உன் அப்பாபோல நானும் இந்த ஊரை விட்டு விட்டால்... பணக்காரனுக ஆகலாம்.”

“எங்கள்கூட வந்துவிடேன்!”

“வந்து என்ன செய்கிறது?”

“எங்கள் கிடங்கியில் நூறுபேர் வேலைபார்க்கிருர்கள். நீயும் ஓர் வேலை பார்க்கலாம். நிறைய சம்பளம் தரச்சொல்லுகிறேன்”

“இந்த ஆறு...இந்தப் பளிங்குத் தண்ணி இம்மாதிரி இருக்குமா உன் பட்டணத்தில்? நான் வர மாட்டேன்”

மௌனம் நிலவியது. படகு கரையோரமாகச் சென்றது. கரையின் அருகே நின்ற தாழைகளில் பூத்த தாழம்பூவின் நறுமணம் கம்மென வீசிற்று. சூரியனும் பிரகிருதியின் சிரிப்பொலியைக் கேட்டு, சிவந்து விட்டவன் போல வானத்திலும் நீரிலும் பளபளத்தான்.

“நம்ம ஜாதியிலே, நீதான் படித்த பெண் இந்த ஊரிலே” என்று பேச்சுக் கொடுத்தான்.

“நம்ம ஜாதியிலே நீதான் படிக்காத பிள்ளை!” என்று சிரித்தாள். கைகள் நீரில் அளைந்து விளையாடிக்கொண்டிருந்தன.

“படிக்காதவனுக இருப்பதனுல் தான் உன்னை உல்லாஸப் படுத்த தோணி ஓட்ட முடிகிறது!” என்ருன் பதிலுக்கு.

“எனக்கு ஒரே ஒரு ஆசை. கலியாண தினத்தன்று, இந்தக் கரையிலுள்ள அத்தனை தாழம்பூவையும் பறித்து வைத்துக்கொண்டு அலங்காரமாக இந்த ஆற்றிலே உல்லாசப் பிரயாணம் செய்ய வேண்டும்”

“அதற்கென்ன செய்தால் அழகாகத்தான் இருக்கும். ஆமாம். இப்போது படகு கவிழ்ந்துவிட்டால் நீ என்னசெய்வாய்?”

“செய்கிறதென்ன? ‘அம்மா காவேரி உன்னைப்போல் நானும் ஒரு பெண். பெண்பாவம் பொல்லாதது. பெண் என்ருல் பேயும் இரங்கும் என்பேன்’ அவள் காப்பாற்றிவிடுவாள்.” என்ருள்.

“நான் கவிழ்த்து விடட்டுமா?”

“நீ அப்படிப்பட்ட கொலைகாரன் இல்லை. உன் பெயரைப் போல மனமும் கட்டிப் பொன்னு.” என்று கலகலவெனச் சிரித்தாள்.

அப்படிப்பட்டவன் தானு, இவ்வளவு கொடிய கொலைபாதகம் செய்தோமென ஒரு கணம் தயங்கினுன். மீண்டும் நேற்றைய சம்பவத்தை மனத்திரையிலே பார்த்தான். கண்கள் மூடி இருந்தன.

“இப்படி எத்தனையோ நாட்கள் ஆற்றில் பொழுது போக்கி விட்டேன். நாளை வர முடியாது” என்ருள்.

“ஏன்?”

“பெண் பார்க்க நாளை இருவர் வருகிருர்கள். அதனுல்தான்!” பொன்னன் உதட்டைக் கடித்துக் கொண்டான். படகு மட்டும் இரைச்சலிடும் தண்ணீரைக் கிழித்துக் கொண்டு போனது. தண்ணீரை இருகையாலும் அள்ளி வீசி வந்தாள். சற்றுத் தொலைவில் வந்த ஒரு இளநீரை எடுக்கக் கை நீட்டினுள் பூங்கொடி.

பரிசல் ஒரு பக்கமாகச் சாய்ந்ததை சுங்கானினுல் சமாளித்துக் கொண்டான். “அடபாவி சாகத்

தெரிஞ்சயே!'' என்று பதற்றத்துடன் சொன்னான், பொன்னு.

"ஒருத்தி சாக, அதை நீ பார்த்துக் கொண்டிருப்பாயா?'' என்று களங்கமின்றித் தெளிவாகச் சொன்னாள்.

அப்படி நேற்று நல்லவன், உத்தமன் என்று பெயரெடுத்தவன் தானா இன்று ஒரு உயிரைக் கொலை செய்யத் துணிந்தது.? என நினைத்த போது கண்ணீர் மாலை மாலையாகச் சொரிந்தான்.

அந்தி மயங்கி எங்கும் இருள் கவ்வ ஆரம்பித்தது. இதை யெல்லாம் கவனிக்காமல் எவ்வளவு நேரம் உட்கார்ந்திருந்தானோ?

மறுநாட் காலை... பரிசல்த்துறைக்கு வந்த நண்பர்களிருவரும் பொன்னுவைக் கண்டார்கள். பொன்னு எதுவும் பேசவில்லை. அங்கே பலர், பரிசல் துறையில் குழுமி இருந்ததுதான் காரணமோ என்னவோ! அந்த இருவருக்கும் வசதியாக இடம் கொடுத்தான்,

அவர்கள் பேச்சிலிருந்து கலியாணம் நிச்சயமாகிவிட்டது என்றும் அந்தக் கிராமத்திலேயே இன்னும் பத்து நாட்களில் நடக்க விருப்பதையும் அறிந்தான். இன்ப துன்பமான எண்ணங்கள் மாறி மாறியெழுந்தன. மனதிற்குள் இருப்பதை எந்தக் கண்ணாடியில் பார்க்கிறது?

நண்பர்கள் கரையேறினார்கள்! பொன்னன் ரங்கனைப்பார்த்த கெஞ்சிய பார்வைக்கு பதிலாக, 'நான் அந்த விபத்தை யாரிடமும் சொல்லேன்' என்று சொல்லுவது போல ரங்கன் பதிலாகக் கண்ணடிட்டம் கொடுத்தான்.

கலியாணம் பணக்கார அம்ஸங்களுடன் சிறப்பாக நடந்து கொண்டிருந்தது. ஆனால் வெற்றிலை தாம்பூலத்திற்குக்கூட பொன்னன் போகவில்லை. அவன் வந்தானா வரவில்லையா? என யாரும் கேட்கவுமில்லை. இரவில் ஊர்வலம் முடிந்த பின்பு பூங்கொடிக்கு நினைவு வந்தது.

பத்துமணிசமயம். நல்ல நிலா சந்திரிகையின் பால் வெள்ளத்திலே, சுழிந்தோடும் ஆற்றில் கலியாணதினத்தன்று ஆற்றில் உல்லாஸப் பிரயாணம் செய்ய நினைத்தாளே, அது நினைவிற்கு வந்தது. தன் கணவனிடம் சொன்னாள். ரங்கனுக்குப் பெண்பார்க்க வந்த போது நிகழ்ந்த விபத்து நினைவில் எழவே சற்றுத் தயங்கினான்.

ஆனால் அவள் நடந்தாள். அவனும் பின் தொடர்ந்தான். மணக்கோலத்தின் காம்பீர்யம். பட்டாடைகளின் ஜிலு ஜிலுப்பு வாசனைத் திரவியங்களின் கும்மாளம் இதெல்லாம் சுகமாக இருந்தது. காற்றும் உறவாட ஆரம்பித்தது. ஒத்தடித்தடத்திலே கைகோர்த்து ஆற்றங்கரை மேட்டை அடைந்தனர்.

எதிரே பாற்கடல் பெருக்கெடுத்துப் பாய் விரித்து ஓடுவதுபோல், இருகரையும் தொட்டுக்கொண்டு சென்றது நதி. தொட்டதெல்லாம் அமுதமாக்கிக் கொண்டிருந்தது நிலா வெள்ளம். எதிர்க் கரையிலுள்ள மரங்களின்மீது வெள்ளிப் போர்வை!

தம்பதிகள் பரிசலின் படாடோப ஜோடனையைக்கண்டு அப்படியே மெய்மறந்துவிட்டார்கள். கரையோரமாக, பூமாலைகளின் ஜோடனையுடன் பரிசல் ஆடி அசைந்து கொண்டு அன்னம் போல மிதந்தது. தோணிக்கு மேலே பிச்சி, இருவாட்சி ஆரங்கள் சரஞ் சரமாகத் தொங்கிக்

கொண்டிருந்தன. தோரணங்களிலே, இளந் தென்னங் குருத்திற்குப் பதிலாக, தாளம்பூக்களையே வகிர்ந்து கட்டியிருந்தது: நிலவில் அது தங்கத் தகடுபோல் மின்னிற்று.

நிலவிலே குளித்து நின்ற தம்பதிகள் தன்னைநோக்கி வருவதைக் கண்ட பொன்னன், "படகில் ஏறுங்கள்" என்றான்.

ரங்கன் மனதில் பழைய சம்பவம் நினைவிற்கு எழுந்தது. ஆனால் தன்னைக் காப்பாற்றிய தியாகி பொன்னன்மீது சந்தேகம் வரவில்லை. இதற்குள் பூங்கொடி படகில் ஏறிவிட்டாளே! அருகே போய் உட்கார்ந்தான். பரிசல் நகர்ந்தது கரையோரமாக.

"நடு ஆற்றுக்குப் போயேன் பொன்னு!" என்றாள் பூங்கொடி.

"வேண்டாம் இப்படியே ஓரமாக விடுகிறேன்" என்றான் பொன்னு.

நட்டாற்றிற்குப்பரிசலைத் திருப்பும்படி வேண்டிக் கொண்டாள். மறுக்கமுடியாமல் திருப்பினான். தம்பதிகள் உல்லாசமாகப் பேச்சை ஆரம்பித்தார்கள். ரங்கனுக்கு 'உனது வாழ்க்கைப் பரிசல் இன்பமயமானது. அந்திவானம் போல் படாடோபம் வாய்ந்தது' என்று கோபு சொல்லியது ஞாபகத்திற்கு வந்தது. மேலே புஷ்பச்சரங்களின் ஊஞ்சலாட்டம். அதற்கு மேலே தவள சந்திரனின் குளிர்ந்த கதிர்கள். பக்கத்திலே புஷ்பத்தோரணங்கள் எல்லாம் இன்பமயம். பின்னிய தலையிலே ரத்தச் சிவப்புக்கொண்ட ரோஜாவைச் சூடியிருந்தாள். அதை எடுத்துத் தண்ணீரில் போட்டாள். அது சற்று நேரத்தில் படகோரமாகவரவே எட்டி எடுத்தாள் பூங்கொடி. அவள் பொற்கை நீட்டி, தண்ணீரைத் துளாவியதைப் பார்த்த ரங்கன் கண்களில் நீரின் அழிப்புப் புலப்பட்டது. உடனே தனக்கு நேர்ந்த விபத்தை நினைத்து, தான் அதே இடத்தில் சாக நேர்ந்ததைச் சொல்ல துடித்தான்.

தூரத்திலே ஒரு தாழை, பூக்கள் குவிந்து, கதிர் நீட்டிக்கொண்டு மிதந்து வந்தது. பூவொன்றை எட்டிப் பிடிக்க முயற்சி செய்தாள் பூங்கொடி. கையை அறுத்துவிடும் வேண்டாமென எச்சரிக்கை செய்தான் பொன்னன். ஆனால் அவன் சொல்லை யார் கேட்டார்கள்? அவள் எட்டிப்பிடித்தாள். வெள்ளிக் கொடி போல் மின்னிக்கொண்டு, அவள் கையைப் பற்றிக் கொண்டு வந்துவிட்டது அழகிய பூநாகம். கையை உதறினாள். அவ்வளவுதான் நாகம் கடித்துவிட்டது.

"ஐயோ... பாம்பு..." என்று அலறினாள் பூமணம் வாடாத பூங்கொடி. ரங்கன் திகைத்தான். எப்படித் தப்புவோம் எனங் நெளிந்தது பரிசலுக் கடியில் அப்பாம்பு

தோணி அலைமோதுவதை சமாளித்துக் கொண்டான் பொன்னன். பூப்போல், அப் பூநாகத்தைப் பிடித்து வெகு சீக்கிரமாக எட்டித் தண்ணீரில் எறிந்தான். அது தொலைவில் தண்ணீரோடு ஓடிக்கொண்டிருந்த தாழைக்குத் தாவ பாய்ந்து நீந்திற்று!

இதற்குள் கைக்குட்டையைக் கிழித்து, மோதிர விரலில் பலமாகக் கட்டுப் போட்டு விட்டான் மாப்பிள்ளை. இரண்டொரு சொட்டு ரத்தம் நீரில் விழுந்து பல வர்ணங்களாகப் பரவிற்று அந்த நிலவொளியில்.

"என்னமோ செய்கிறதே..." என்ருள் ஹீனசுரத்தில் பூங்கொடி. 'மணக்கோலத்திலே பரிசலில் உல்லாசமாகச் சுற்றவந்தது தவறு. மன்னியுங்கள் எனக் கெஞ்சிக் கேட்பதுபோல கண்ணைச்சொருகி விட்டாள்.

ரங்கன் ஆவல் நிறைந்த முகத்தோடு பார்த்தபடியே இருந்தான். ஆனல், திடீரென்று பொன்னன், பூங்கொடியின் மோதிர விரலைப் பிடித்து துணியை அகற்றிவிட்டுத் தன் கரிய உதடுகளால் உறிஞ்சினன்.

எல்லாம் இமைப் பொழுதில் நடைபெற்ற சம்பவங்கள். "வேண்டாம்—வேண்டா"மெனத் தடுத்தான் ரங்கன். பொன்னன் அதைக்காதில் போட்டானு?

"விஷமாக இருக்குமப்பா... கொப்பளித்துவிடு" என்ருன் ரங்கன். விஷத்தை உறிஞ்சிக் காப்பாற்றலாம் என்ற எண்ணம் தனக்குத் தோன்ருமல் போனதற்காக வருந்தினன்.

அவன் பேச்சைக் கவனிக்காமல், மீண்டும் உறிஞ்சி உறிஞ்சி அப்படியே குடித்து விட்டான்.

பரிசலைத் தன் உடல் தளருமுன் ஜாக்கிரதையாக கரையோரமாகச் செலுத்த அது விரைவாகக் கரையை அடைந்தது. மயங்கி இருந்த பூங்கொடி மெதுவாக மயக்கம் தெளிந்தாள். கரை இறங்கிய தம்பதிகள் பொன்னனைப் பார்த்தார்கள். அவன் கோரமாகச் சிரித்தான். பற்கள் வெளியே தெரிந்தன. கண்களிலே ஒளியில்லை. உடம்பிலே நீலம் பரவிற்று. உயிர் ......ஆம்... அவன் உயிர், அவர்கள் வாழ்க்கையைக் கரையேற்றியது.

பூங்கொடி சுழித்தோடும் காவிரியையும் நீலம் பாய்ந்த பொன்னன் உடலையும் பார்த்தாள். அவள் மனதிலே,

ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்
ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்

என்ற அடிகள் அலைமோதின!

மலரோடு நீயே இருத்தி

[மு. அருணசலம்]

பூவினிடத்து நம்மவருக்குள்ள ஈடுபாட்டை அளவிட்டுச் சொல்ல முடியாது. எப்படி எப்படியோ குடும்பவாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் சமய வாழ்க்கையிலும் பூவுக்கு இடந் தந்து அதை அனுபவித்து மகிழ்கிறோம். குழந்தை பிறந்தது முதல் எல்லா விதமான மங்கலச் சடங்குகளுக்கும், பூவே முதல் இடம் வகிக்கிறது. அழகு, மென்மை முதலான பண்பு களுக்கெல்லாம் பூவே எடுத்துக் காட்டாகிறது. பூப்போன்ற கை, முல்லை போன்ற முறுவல் பூப்போன்ற மெத்தை, தும்பைப் பூப் போன்ற வெண்ணிற வேட்டி பூப்போன்ற மிருதுவான சாதம் என்பதெல்லாம் வாழ்க்கையிலுள்ளது. எதையும் பூவை வைத்தே நாம் அனுபவிக்கத் தயாராயிருக்கிறோம்.

ஆடவரை விடப் பெண்களுக்கு குழந்தை முதல் பெரியவர்கள் வரையில் பூவினிடத்துள்ள ஈடுபாடு மிகஅதிகம். 'பின்னி முடிச்சிடம்மா, பிச்சிப் பூச்சூட்டிடம்மா' என்று கேளாத குழந்தையுண்டா? பெண்கள், சாப்பாடு இல்லாதிருந்தாலும் ஒருவேளை இருந்து விடுவார்கள், பூ இல்லாமல் இருப்பதென்றால், முடியாது. இந்த ஈடுபாட்டையெல்லாம் கருதித்தானே என்னவோ, நம்முடைய பெரியவர்கள், கல்விக்குத் தெய்வமான சரசுவதியையும், செல்வத்துக்கு தெய்வமான லக்ஷ்மியையும், முறையே வெண்தாமரைப் பூவிலும் செந்தாமரைப் பூவிலும் ஏற்றி வைத்து விட்டார்கள்!

பொது வாழ்க்கையில், வரவேற்பு, உபசாரம், பாராட்டுதல் பிரசங்கம் என்றால், பூமாலையில்லாமல் முடியாது. கோயில் வழிபாடென்றால், பத்திர புஷ்பங்களோடு தான் அது தொடங்க முடியும்.

பூக்கள் வேண்டிப் பூச்செடிகளை வளர்ப்பதாகிய பூந்தோட்டங்கள் இக்காலத்தில் எங்கும் வளர்ந்து வருகிறது. பூக்காட்சிகளும் போட்டிகளும் பரிசுகளும் பெருகி வருகிறது மிகவும் சந்தோஷத்துக்கிடமான அம்சம். இக்கலையில் ஈடு படுவோர் இன்று பலர் இருக்கிறார்கள்.

இப்படி இந்தப் பூந்தோட்டக் கலையில் கலையுள்ளத்தோடு ஈடுபட்ட நண்பரொருவர் கேட்கிறார்.

அழகாகத் தோட்டம் போட்டு பூச்செடிகளைப் பயிரிட்டு, அவற்றுக்குக் காலா காலத்தில் நீர் இறைத்துக் கொத்திக் களையெடுத்து எருவிட்டு, ஆடு மாடு மேயாமல் வேலி கட்டி எவ்வளவோ அருமையாகப் பார்த்து வருகிறோம். உரிய பருவத்தில் செடியும் நன்றாய் மலர்கிறது. கிளை தோறும் நுனிக் கொழுந்து தோறும் அல்லது கணுத்தோறும், சரம் சரமாய் அல்லது கொத்துக் கொத்தாய்ப் பூத்துக் குலுங்குகிறது. பூத்திருக்கிற அழகை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம்.

கண்ணும் மனமும் சோர்வடையாமல் பார்த்து அனுபவிக்கலாம். நாமெல்லாம் நம்முடைய இன்ப மிகுதியையும் சந்தோஷத்தையும் சிரிப்பினாலும் குதூகலத்தினாலும் வெளியிட்டுக் கொள்கிறோம். இப்படியே வாழ்க்கையிலே, தாவர உயிர்களான செடி கொடிகள் தாங்கள் பெற்ற இன்ப மிகுதியை வாழ்க்கையின் பயனை தங்கள் மலர்களால் வெளியிடுகின்றன. மலர்களே இவ்வுயிர்களின் அக மலர்ச்சியாகும்.

அப்படியானால், அந்த முகமலர்ச்சியை நாமும் விலகிநின்று பார்த்துப் பார்த்து மகிழ்ந்தால் போதாதா? மலர்களைப் 'பறிப்பதன்' மூலம், செடி கொடிகளின் மகிழ்ச்சிக்குரிய சின்னத்தைப் போக்கி விடுவானேன்? வாழ்க்கையில் நாம் இன்பத்தைத் துறந்துவிடுவோமா? மாட்டோம். ஆனால், மற்றோர் உயிரின் இன்பத்தைத் 'பறிப்பானேன்?' பூவைப் பறித்து நம்முடைய தலையில் சூட்டிக் கொண்டால்தானா அழகு? பூ செடியிலிருந்தால் இன்னும் அழகு அதிகமல்லவா? என்று நண்பர் கேட்கிறார்.

உண்மைக் கலையுள்ளம் சிறிதேனுமிருந்து பார்ப்பவனுக்கு, பூவைப் பறித்துக் கசக்கித் தான் சூடிக் கொள்வதிலோ தன் காதலிக்குச் சூட்டுவதிலோ விசேஷ ஆசையிருப்பதில்லை. அழகே அவனுக்கு ஒரு காதலி. செடி கொடிகளின் அழகிலும் அவை மலர்ந்துள்ள அழகிலும் உள்ளத்தைப் பறி கொடுத்த சிவனுக்கு, மலரைப் பறிப்பதென்பது தெரியாத ஒரு காரியம், சிவனுள்ளமே பறிபட்டு போனபோது, இவனால் எங்கே 'பறிக்க' முடியும்?

மலரைப் 'பறித்து'த் தான் அணிவதோ, காதலிக்குச் சூட்டுவதோ, குழந்தைகளுக்குச் சூட்டுவதோ, அழகுணர்ச்சிக்கே கேடு செய்வதாகும். மற்றோருயிரின் இன்ப வெளியீட்டையே குலைப்பதாகும். இதை ஒப்புக்கொள்வோம். இனி அடுத்த கேள்வி. பூஜைக்குப் பூ வெடுக்கலாமல்லவா? நம்முடைய தெய்வ ஆராதனையில் கோயிலிலாகட்டும், வீட்டிலாகட்டும், பொது இடத்திலாகட்டும் பூவுக்குத்தான் மிகுதியான உபயோகம். பூவினாலே தெய்வ உருவங்களுக்குச் செய்யும் அலங்காரங்களைப் பார்த்தால், எவ்வளவு கவர்ச்சியான காட்சி! எத்தனை விதமான பூக்களையெல்லாம் சேர்த்து, எவ்வளவு அழகாக, பார்த்த கண் பார்த்தது போல் லயித்து நிற்கும்படி, குருக்கள் அலங்காரம் செய்து வைக்கிறார்! இந்த அலங்காரத்தின் அழகைப் பருகும்போது அலங்காரஞ்செய்வதே ஓர் அற்புதமான கலை என்று தோன்றுகிறது. தெய்வ வழிபாட்டினால் வந்த மேலான சிற்பக் கலை, சங்கீதக் கலை முதலியன ஒருபுறமிருக்க, இந்த அலங்காரக் கலையையே நாம் ஊர்தோறும் நடக்கும் உற்சவங்களில் போய்ப் பார்த்து அனுபவிக்கலாம் போலிருக்கிறது.

இந்த அலங்காரங்களுக்காகக் கூடை கூடையாகப் புஷ்பக்காடுகள் வேண்டியிருக்கின்றன. பூஜைக்காகப் பூ வெடுப்பது இன்ன விதம் என்று புஷ்பவிதி, புஷ்ப பலன் முதலான தமிழ் சாஸ்திர புஸ்தகங்களே திட்டமாக வரையறை செய்து வைத்திருக்கின்றன. கீழே விழுந்த பூவை எடுக்கலாகாது. பூச்சி அரித்ததை எடுக்கலாகாது, நேற்று மலர்ந்தது கூடாது, மலராதது கூடாது, அசுத்தமான தரையில் விழுந்தது

கூடாது, என்றெல்லாம் எத்தனை யோ கட்டுப்பாடுகள். இவற்றைப் பார்க்கும்போது நாம் அஞ்சு கிறோம். இப்படி யெல்லாம் ஆராய்ந்தால் நமக்கு ஏதேனும் பூக்கிடைக்குமோ என்பது சந்தே கம். தவிர, இப்படிப் பூ தேட வேண்டுமானால், செடி கொடி யிலிருந்து பூவைத் 'திருகிப்பறிக்க' வேண்டித்தான் வருமே யொழிய, மென்மையாகப் 'பூ எடுப்பதற்கு' இடமேயில்லை. திருகிப் பறிப்பதில் பக்தி வருமோ என்னவோ, கலை யுள்ளம் சாம்பித்தான் போகும். அலங்காரத்தையும் பூஜையையும் பார்க்க ஆசையாய்த் தானிருக் கிறது. ஆனால் பூவைத் திருகு வதற்கு மனம் ஒவ்வவில்லை. சாஸ் திரம் இவ்வளவு கொடுமையா னதா என்று கஷ்டப்படுகிறோம்.

புஷ்பவிதி இப்படிக் கடுமை யான சட்ட திட்டங்களைக் கூறிய போதிலும்கூட, பொதுவாய்ச் சாஸ்திரம் இவ்வளவு கடுமையான தல்ல. வாழ்க்கையில் பக்குவம் பக்தியும் விளையும் பொருட்டுச் சொல்லப் பெற்றதே சாஸ்திரம். பக்தி யுடையவர்களுக்குக் கிரியை யில் சிரத்தை தோன்றும் பொருட் டுச் சொல்லியதே புஷ்பவிதி முத லான சாஸ்திரம். அதன் கருத்தே முடிவான கருத்தல்ல.

தமிழ்ச் சைவ சித்தாந்த சாஸ் திரங்கள் அனைத்திலும் மிக விரிந் தது, சிவ ஞான சித்தியார் என்பது. புறத்தே திரு வுருவத்துக்குச் செய் யும் பூசை, அகத்தே செய்யும் பூசை என்னும் இரண்டையும் கூறுமிடத்து, அந்நூலின் ஆசிரி யர், பூ வெடுப்பதைப் பற்றி ஒருவார்த்தை சொல்கிறார். இறை வனை அகத்தில் ஞானத்தால் பூசிப் பதுதான் விசேஷம். அது வந் தோருக்குப் புறப் பூசனை வேண் டியதில்லை. வேண்டுமானால், செய் யட்டும், ஆட்சேபணையில்லை, என் கிறார். சரி, எப்படிச் செய்வது, பூ எப்படி எங்கே எடுப்பது?

> புறம்பேயும் அரன் கழல்கள்
> பூசிக்க வேண்டில்
> பூ மரத்தின் கீழ் உதிர்ந்த
> போது களும் கொண்டு

என்றார். செடி கொடி மரத்தி லுள்ள பூவைப் பக்குவம் பார்த் துத் திருகவோ, பறிக்கவோ வேண்டாம். தானாகக் கீழே உதிர்ந்து கிடக்கிற பூக்களே போதும். அரன் கழலைப் பூசிக்க வேண்டுவோருக்கு, இது எவ்வ ளவு சௌகரியமானது!

ஆசிரியர் சொல்வதை நாம் ஊன்றிக் கவனிக்கும் போது, பூசைக்குப் புதுப் பூ எடுக்கும் எண்ணத்துடன் செடி கொடிகளை ஹிம்சிப்பது தகாதென்றே அவர் கருதினாரென்று தெரிகிறது.

சாஸ்திரங்களில், ஆரம்ப நிலை அல்லது முதல்ப்படியி லுள்ளவை களும், முதல்படியை வற்புறுத்திக் கூறுபவைகளுமே முன்சொன்ன வைபோன்ற கட்டுப்பாடுகளை அதிமாக விதிக்கும், மேலான ஞான மார்க்கம், இந்தக் கட்டுப் பாடுகளுக்கு அப்பாற் பட்டது. ஞான மார்க்கத்தைக் கூறும் சாஸ்திர ஆசிரியர்களும் ஞானி களும், இந்தக் கட்டுப்பாட்டைக் கடந்து, கலையும் இன்பமும் ஞான மும் ஒன்றாய்க் கலந்த தன்மை யைக் கூறுவார்கள்.

இங்ஙனம் கலந்த நிலைமையி லிருந்து பேசுகிறார் தாயுமானவர். ஒரு சமயம் அவர் பூஜை செய்ய எண்ணினார். பூஜைக்கு மலர் எடுக் கும் நோக்கத்துடன், காலையில் நீராடி முடித்து, நந்தவனத்துக்குச்

சென்றார். கையில் பூக்குடலை முதலிய எல்லாம் தயாராயிருக்கின்றன. நந்தவனத்துட் சென்றவர் ஒரு செடியைப்பார்த்தார். காலை யிளம் பரிதி வீசும் கதிர்களிலே, அச்செடி ஆனந்தமாய்ப் பிரகாசித்துக் கொண்டு, மெல்லத் தவழ்ந்து வந்த இளந் தென்றலில் ஒசிந்தசைந்து கொண்டிருந்த காட்சியில், செடியின் ஆனந்தமான நிலைமையை பக்தர் கண்டார். அதனுடைய அசைவானது, கருணைமூர்த்தியான பரம் பொருளின் ஆனந்த நிர்த்தமாகவே அவருக்குப் பட்டது. செடியில் தெரிந்த பூவினுள்ளெல்லாம் அந்த ஆனந்த நிர்த்தத்தையே கண்டார். கண்டவர், பிறகு பூவெடுப்பதெங்கே? பூசைசெய்வ தெங்கே? உள்ளத்தாலும் கண்ணாலும் கண்ட ஆனந்தத்தை அனுபவித்து மெய் மறந்தபடியே பாடினார்.

பண்ணேன் உனக்கான
  பூசை ஒரு வடிவிலே
பாவித் திறைஞ்ச ஆங்கே
பார்க்கின்ற மலரூடு
  நீயே இருத்தி! அப்
பனிமலர் எடுக்க, மனமும்
நண்ணேன்! அலாமல் இரு
  கைதான் குவிக்க எனில்,
நானும் என் உளம் நிற்றி நீ!
நான் கும்பிடும் போது
  அரைக்கும்பிடு ஆதலால்,
நான் பூசை செயல் முறையோ?

என்று பாடினார். பார்க்கின்ற மலர்தோறும் தெரிகிறான் பரமன். அவனைப் பூசை பண்ண, அம் மலரைப் பறிப்பானேன்? அப்பனி மலர் எடுக்க மனம் வராமல், தாயுமான சுவாமிகள், பூஜையும் பண்ணவில்லை, தாம் பூசை பண்ணல் முறையும் அல்லவென்று முடிவும் செய்து விட்டார்.

கலையுள்ளமும் பக்தியும் ஞானமும் ஒன்றாய்க் கலந்த அவருடைய அனுபவத்தைப் பாட்டின் மூலமாயேனும் உணர்ந்து,

பார்க்கின்ற மலரூடு
  நீயே இருத்தி, அப்
பனிமலர் எடுக்க மனமும்
நண்ணேன்

என்று நாமும் பாடி வருவோமானால், பூவின் வாழ்க்கையை அனுபவித்து அதிலேயே பெரிய ஆனந்தத்தையும் நாம் அறிவோம். இதன் பயனாக, முடிவிலே, தாயுமானவரை ஒத்து,

நான் பூசை செய்யல் முறையோ!
விண்ணே! விண் ஆதியாம்
  பூதமே! நாதமே,
வேதமே! வேதாந்தமே!
மேதக்க வேள்வியே!
  கேள்வியாம் பூமிக்குள்
வித்தே அவ் வித்தின் முளையே!
கண்ணே! கருத்தே என்
  எண்ணே! எழுத்தே!
கதிக்கான மோன வடிவே!
கருதரிய சிற்சபையில்
  ஆனந்த நிர்த்த மிடு
கருணாகரக் கடவுளே!

என்று பாடிப் பாடி, அறிவாகிய கோயிலில் ஆனந்த நர்த்த மிடுகின்ற பரம்பொருளை அனுபவிக்கும் பக்குவம் பெற்றாலும் பெறுவோம்.

★

சிலப்பதிகாரம்

சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்.

நாடுகாண் காதை

(தொடர்ச்சி)

வழிக் காட்சிகள் — காவிரி ஆற்றின் ஒலி

(102—111)

சோழ நாட்டில் காணும் காட்சிகளில் காவேரியாற்றின் காட்சியே மிகச் சிறந்தது. எக்காலத்திலும் வற்றாத நீரையுடைய ஆறு. இது உற்பத்தியாகும் இடம் குடகுமலை. இயற்கை நிகழ்ச்சிகள் மாறு பட்டாலும், இம்மலையில் மழை பெய்வது தவறாது. இம்மலையின் உச்சியில் பெருங் காற்று மோதிக்கொண்டிருக்கும். கடுமையான இடி முழக்கத்தோடு கரு முதிர்ந்த மேகம் பெய்யும் மழையின் வளத்தினால் காவேரியில் வெள்ளம் பெருகும். குடகு மலையிலிருந்து கீழே இறங்கும் போது, அம்மலையிலுள்ள சந்தன மரம், அகில் முதலிய பண்டங்களை அடித்துக்கொண்டு வரும். இப்பண்டங்களோடு புகார் நகரத்திற்குள் நுழையும் போது, கடலின் அலைகள் முத்து, பவளம், சங்கு முதலிய பண்டங்களோடு எதிர்த்துவந்து மோதும். ஆற்றின் புது வெள்ளமும், கடலின் அலைகளும் மதகு நீர் தாங்கும் பலகைகளின் மீது மோதி ஓவென்று ஒலி எழுப்பிக் கொண்டேயிருக்கும். கால்வாய்களின் இரு புறத்திலும் விவசாயிகள் பல கருவிகளைக் கொண்டு வயல்களுக்கு நீர் இறைத்துக் கொண்டிருக்கிறார்கள். காவேரியின் ஒலியின் முன் இந்தக் கருவிகளின் ஓசை கேட்கவும் கேட்காது. இத்தகைய காவேரி வெள்ளத்தின் ஓசை கேட்டது ஒருபுறம்.

102. கரியவன் புகையினும், புகைக் கொடி தோன்றினும்,
விரி கதிர் வெள்ளி தென் புலம் படரினும்,
கால் பொரு நிவப்பின் கடும் குரல் ஏற்றொடும்
சூல் முதிர் கொண் மூப் பெயல் வளம் சுரப்பக்
குடமலைப் பிறந்த கொழும்பல் தாரமொடு
கடல் வளன் எதிர்க் கயவாய் நெரிக்கும்
காவிரிப் புதுநீர்க் கடு வரல் வாய்த்தலை;
ஓ இறந்து ஒலிக்கும் ஒலியே அல்லது,
ஆம்பியும், கிழாரும், வீங்கு இசை ஏத்தமும்,
111. ஓங்கு நீர்ப் பிழாவும் ஒலித்தல் செல்லா;

கரியவன் புகையினும் — சனி என்னும் கோள் மாறு பட்டாலும் (என்றது, அவனோடு கூடிய மீனம், சிம்மம் முதலான ராசிகளோடு மாறு பட்டாலும்); புகைக் கொடி தோன்றினும் — தூம கேது என்னும் வால் மீன் தோன்றினாலும்; விரிகதிர் வெள்ளி — விரிந்த ஒளியினையுடைய சுக்கிரன்; தென்புலம் படரினும் — கீழ்த் திசையில் தோன்றாது தெற்கு திசையில் தோன்றினாலும்; கால் பொரு நிவப்பின் —

பெருங் காற்று மோதுகின்ற உயர்ந்த மலையில்; கடும் குரல் ஏற்றொடும்—கடிய குரலையுடைய இடியினோடும்; சூல் முதிர் கொண்டுமூ — கரு முதிர்ந்த மேகம் (நீர் நிறைந்து நன்கு கருத்த மேகம்); பெயல் வளம் சுரப்ப — தான் மழையைப் பெய்து நல்ல வளங்களைச் செழிக்கச் செய்வதால்; குடமலைப் பிறந்த — மேற்கே குடகுமலையில் விளைந்த; கொழிம்பல் தாரமொடு — கொழுமையான பல பண்டங்களோடு; கடல் வளன் எதிர — கடலில் உண்டாகும் வளங்களும் எதிர்த்து வர; கயவாய் நெரிக்கும் — இதனால் காவிரிப்பூம் பட்டினத்தை நீர் வந்து மோதுகின்ற சிறப்பினையுடைய; காவிரிப் புதுநீர் — காவிரி யாற்றின் புதிய நீர்; கடு வரல் வாய்த்தலை — மிக விரைவாக ஓடி வருகின்ற கால் வாயிடத்தில்; ஓ இறந்து ஒலிக்கும் — மதகு நீர் தாங்கும் பலகையை எதிர்த்துத் துள்ளி, அதனால் ஒலி விளைக்கின்ற; ஒலியே அல்லது — அவ்வொலியே யல்லாமல்; ஆம்பியும் — பன்றிப் பத்தர் என்னும் தண்ணீர் இறைக்கும் கருவியும்; கிழா அரும்—பூட்டைப் பொறி என்னும் இறைக்கும் கருவியும்; வீங்கு இசை ஏத்தமும் — மிக்க ஓசையுடைய ஏத்தம் என்னும் கருவியும்; ஓங்கு நீர்ப் பிழாவும் — மிக்க நீரை இறைக்கின்ற இடா என்னும் கருவியும்; ஒலித்தல் செல்லா — (ஆகிய இற்றின் ஒலி கள்) மேலோங்கி ஒலிக்கா;

குடகு மலையில் தோன்றி பரந்த கடலை எதிர்த்து ஓடி வருகின்ற காவிரி யாற்றின் நீர் அதன் கால்வாய்களில் மிக விரைவாக கடுகி வந்து மதகு நீர் தாங்கும் பலகையை மோதி எழுந்து துள்ள, அதனால் உண்டாகும் ஒலியே பெரிதாக எழுந்து ஒலிப்பதல்லாமல், மிக்க ஓசையோடு நீர் இறைக்கும் ஆம்பி, கிளார் முதலான கருவிகளின் ஓசை மேலெழுந்து ஒலிக்க மாட்டா.

வெள்ளி தெற்கே முளைத்தாலும், வால் மீனம் தோன்றினாலும் காவிரியாறு வற்றாது வளஞ் சுரக்கும். அதாவது இயற்கை நிகழ்ச்சிகள் மாறுபடினும், இது மாறாது என்பது. ஆம்பி, கிழார் முதலியன நீர் இறைக்கும் கருவிகள்.

தாரம் — பண்டம். ஓ — மதகு நீர் தாங்கும் பலகை. கடலின் வளமாவது, முத்து, பவளம், சங்கு முதலியன. இதனால் காவிரி யாற்றின் சிறப்புக் கூறினர்.

★

பறவைகளின் ஓசை

(112 — 119)

வயல்களில் செந்நெல்லும் கரும்பும் செழித்து வளர்ந்திருக்கின்றன. அவ்வயல்களைச் சுற்றிலுமுள்ள குளங்களில் தாமரை நிறைந்திருப்பதைப் பார்த்தால், பசுமையான காட்டைப் போல் காண்கின்றது. இத்தகைய தாமரைக் காட்டிலுள்ள சம்பங்கோழி, நாரை, அன்னம், கொக்கு, காட்டுக் கோழி, நீர்க் காக்கை, உள்ளான், குளுவை, கணந்துள், பெரு நாரை முதலிய பறவைகள் பலவேறுபட்ட ஓசையை எழுப்புவது வெற்றி வேந்தர் போர்க்களத்தில் எழுப்பும் ஓசையைப் போல் கேட்டது.

112. கழனிச் செந்நெல் கரும்பு சூழ் மருங்கின்
பழனத் தாமரைப் பைம் பூம் கானத்துக்
கம்புள் கோழியும், கனை குரல் நாரையும்
செம் கால் அன்னமும், பைங்கால் கொக்கும்,
கானக் கோழியும், நீர் நிறக் காக்கையும்,
உள்ளும், ஊரலும், புள்ளும் புதாவும்
வெல் போர் வேந்தர் முனை இடம் போலப்
119. பல் வேறு குழூ உக்குரல் பரந்த ஓதையும்;

கழனி — வயல்களில் விளைந்த; செந்நெல் கரும்பு — செந்நெல்லும் கரும்பும் ஆகிய இவை; சூழ் மருங்கின் — சூழ்ந்திருக்கும் இடத்தினையுடைய; பழனத் தாமரை — நீர் நிலத்து நிற்கும் வயலில் வளர்ந்த தாமரையாகிய; பைம் பூம் கானத்து — பசுமையான அழகிய காட்டில்; (என்றது தாமரைகள் அடர்ந்த நீர் நிலையில்); கம்புள் கோழியும் — சம்பங் கோழியும்; கனை குரல் நாரையும் — மிக்க குரலை எழுப்பும் நாரையும்; செம்கால் அன்னமும் — சிவந்த காலையுடைய அன்னமும்; பைங்கால் கொக்கும் — பசுமையான காலையுடைய கொக்கும்; கானக் கோழியும் — காட்டுக் கோழியும்; நீர் நிறக் காக்கையும்; உள்ளும் — உள்ளான் என்னும் பறவையும்; ஊரலும் — குளுவை என்னும் பறவையும்; புள்ளும் — கணந்துட்புள் என்னும் பறவையும்; புதாவும் — பெரு நாரையும்; (ஆகிய இவற்றின் ஓசை எல்லாம்) வெல் போர் வேந்தர் — போரில் வெல்லும் வேந்தரின்; முனை இடம் போல — போர்க்களம் போல; பல்வேறு குழூஉ குரல் பரந்த ஓதையும் — பலவேறுபட்டனவாய் ஒன்ருய் இசைக்கின்ற ஓசைகளின் மிக்க ஓசையும்;

★

உழவரின் ஒலி

(120 — 126)

வயலோரத்திலுள்ள களங்களில் நெற் கூடுகள் குவிந்திருக்கின்றன. கூடுகள் கலையாமலிருக்கும் பொருட்டு அவற்றை வைக்கோல் கயிற்ருல் கட்டியிருக்கிருர்கள். சேறு படிந்த உடலும், சிவந்த கண்ணும் உடைய எருமைகள் தினவெடுத்த முதுகை நெற்கூட்டின் மேல் தேய்க்கின்றன. அதனல் கயிறு அறுந்து, கூடுகளிலுள்ள நெல் வயலில் விளைந்திருக்கும் நெற் பயிரின் மேல் சரிந்து வீழ்கின்றது. அதைக் கண்டு பள்ளர் முதலிய உழவர்கள் எருமைகளை அதட்டும் ஒலி ஒரு புறம் கேட்டது.

120. உழாஅ நுண் தொளி உள்புக்கு அழுந்திய,
கழாஅ மயிர் யாக்கை செங்கண் காரான்
சொரி புறம் உரிஞ்சப் புரி ஞெகிழ்பு உற்ற,
குமரிக் கூட்டின் கொழும் பல் உணவு,
கவரிச் செந்நெல் காய்த்தலைச் சொரியக்,
கரும் கை வினைஞரும் களமரும் கூடி,
126. ஒருங்கு நின்ருர்க்கும் ஒலியே அன்றியும்;

உழா அ நுண் தொளி — உழவர்களால் உழப்படாத நுண்ணிய சேற்றில்; உள்புக்கு அழுந்திய — உள்ளே பதிந்து அழுந்திய; கழாஅ மயிர் யாக்கை — கழுவாத மயிர் பொருந்திய உடலையும்; (என்றது நல்ல நீரில் குளிக்காமையால், அழுக்குப் படிந்த மயிர் நிறைந்த உடலையும்;) செங்கண் காரான் — சிவந்த கண்ணையும் உடைய எருமை; சொரி புறம் உறிஞ்ச — தினவு பொருந்திய தன் முதுகை வைத்துத் தேய்த்தலால்; புரி ஞெகிழ்பு உற்ற — வைக்கோற் கயிறு அறுந்து போன; குமரிக் கூட்டின் — அழிவில்லாத நெற் கூடுகளின்; கொழும் பல் உணவு — கொழுமையான பலவகையான நெற் பயிர்; கவரிச் செங்நெல் — கவரி மான் மயிர்க் கொத்துப் போல விளைந்து கிடக்கும் செந்நெல்லின்; காய்த் தலைச் சொரிய — நெல்லின் காய் முதிர்ந்த கதிர்களில் சரிய; (என்றது, எருமை தேய்த்தலால், நெற் கூடு பிரிந்து, அதிலிருந்து வீழ்கின்ற நெல், கவரி மயிர் போல விளைந்து முற்றிய காயையுடைய மற்ற நெற் கதிர்களின் மேல் சரிந்து விழ அது கண்டு); கரும் கை வினைஞரும் — வலிய கையை யுடைய பறையர் பள்ளர் முதலியோரும்; களமரும் கூடி — உழவர்களும் கூடி; ஒருங்கு நின்று ஆர்க்கும் — ஒன்ருகச் சேர்ந்து நின்று ஆரவாரிக்கும்; ஒலியே அன்றியும் — ஒலியல்லாமலும் (என்றது, இவ்வொலியும் இன்னும் பின் கூறப் போகும் ஒலிகளும்;)

தொளி — சேறு; உழா அ நுண் தொழி — உழப்படாத சேறு, அதாவது எங்கும் மகிழி மண் நிறைந்திருப்பதால், உழவு செய்யப் படாத நிலத்திலும் கூட சேறு நிறைந்திருக்கின்றது. இதனுல் சோழ நாட்டின் நீர், நில வளம் இன்னதென்று தெரிகிறது.

★

விவசாயிகளின் பாட்டு

(127 — 139)

எங்கு பார்த்தாலும், விவசாயிகள் களிப் போடு இசைபாடிக்கொண்டு அவரவர் வேலைகளை சுரு சுருப்பாகச் செய்து கொண்டிருக்கிருர்கள்.

கடைசி வகுப்பைச் சேர்ந்த பெண்கள் தங்கள் கூந்தலிலுள்ள மலர்களைப் பிடுங்கி எறிந்து விட்டு, நெல் நாற்றின் முடியிலுள்ள நாற்றை நறுக்கிச் சூட்டிக் கொள்கின்ருர்கள். அவர்கள் தோளிலும் மார்பிலும் சேறு படித்திருந்த போதிலும் அழகு வீசுகின்றது. கள்ளைக் குடித்ததால் அவர்களுடைய கயல் மீன் போன்ற கண்கள் சிவந்திருக்கின்றன. இழி மொழிகளைப் பேசிக் கொண்டு, வாய்க்கு வந்த படி பாட்டுகளைப் பாடுகிருர்கள்.

அறுகம் புல்லும், குவளை மலரும், நெற் கதிரும் சேர்ந்து தொடுக்கப் பட்ட மாலையைக் கலப்பையில் சூட்டி, கடவுளைக் கை தொழுது, உலகம் பிளக்கும்படி உரத்த குரலில் ஏர் மங்கலப் பாட்டு பாடுகின்றனர் உழவர்கள்.

நெற் குவியல்களில் மாடுகளை ஓட்டி சூடடிப்பவர்கள் முகவைப் பாட்டு ஒரு புரம் பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

பறை கொட்டுபவர்கள் களிப்போடு எழுப்பிய முழவின் ஓசை இனிமையாய் ஒலிக்கின்றது ஒரு புரம்.

127. கடி மலர் களைந்து, முடி நாறு அழுத்தித்
தொடி வளைத் தோளும், ஆகமும் தோய்ந்து
சேறு ஆடு கோலமொடு வீறு பெறத் தோன்றிச்
செம் கயல் நெடும் கண் சின் மொழிக் கடைசியர்
வெம் கள் தொலைச்சிய விருந்தின் பாணியும்;
கொழும் கொடி அறுகையும், குவளையும் கலந்து
விளங்கு கதிர் தொடுத்த விரியல் சூட்டிப்,
பார் உடைப்பனர் போல் பழிச்சினர் கைதொழ
ஏரொடு நின்றோர் ஏர் மங்கலமும்;
அரிந்து கால் குவித்தோர் அரிகடா உறுத்த,
பெருஞ் செந் நெல்லின் முகவைப் பாட்டும்;
தெள் கிணைப் பொருநர் செருக்குடன் எடுத்த,
139. மண்கணை முழவின் மகிழ் இசை ஓதையும்;

கடி மலர் களைந்து — (முன்னர் சூட்டிய) மணமுள்ள மலர்களை நீக்கி; முடி நாறு அழுத்தி — நாற்றின் முடிகளிலுள்ள நாற்றை நறுக்கிச் சூடி; தொடி வளைத் தோளும் — வளைந்த வளையலையுடைய தோளும்; ஆகமும் — மார்பும்; தோய்ந்து சேறு ஆடு கோலமொடு — சேறு படிந்த கோலத்தோடே; வீறு பெறத் தோன்றி — அழகு பெறத் தோன்றி; செம் கயல் நெடும் கண் — சிவந்த கயல் மீன் போலும் அழகிய நீண்ட கண்களையும்; சின் மொழி — இழி மொழிகளையும் (உடைய); கடைசியர் — கடைசி வகுப்பு மகளிர்; வெம் கள் தொலைச்சிய — தாம் விரும்பிய கள்ளைக் குடித்து ஒழித்ததனால் (வந்த); விருந்தின் பாணியும் — புதுமையான பாட்டும் (என்றது, இசையோடு பொருந்தாதது, பழக்கமின்றிக் களிப்பால் பிறந்த பாட்டும்)

முடி நாறு — முடியப்பட்ட நாறு; வீறு — அழகு. வெம்மை — விருப்பம். பாணி — பாட்டு. விருந்து — புதுமை.

கொழும் கொடி அறுகையும் — கொழுமையான கொடிகளையுடைய அறுகம் புல்லும்; குவளையும் கலந்து — குவளை மலரும் கலந்து; விளங்கு கதிர் தொடுத்த — விளங்குகின்ற நெற் கதிர்களோடு சேர்த்துத் தொடுத்த; விரியல் — மாலையினை; சூட்டி — ஏரிலே சூட்டி; பார் உடைப்பனர் போல் — நிலத்தினை உடைப்போர் போல; பழிச்சினர் கை தொழ — அவ் வேரைப்போற்றுவோர் கை தொழுது நிற்க; ஏரொடு நின்றோர் ஏர் மங்கலமும் — (பூட்டிய தமது) ஏர்களோடு தாங்களும் நின்ற உழவர்களின் ஏர் மங்கலப் பாட்டும்;

அரிந்து கால் குவித்தோர் — நெல்லை அரிந்து போராகக் குவித்தவர்கள்; அரிகடா உறுத்த — அப்போர்களின் மேல் கடாக்களை விட்டு மிகுத்த; பெரும் செந் நெல்லின் — பெரிய செந்நெல்லைச் (சேர்த்தற்குப் பாடிய); முகவைப் பாட்டும் — ;

தெள் கிணைப் பொருநர் — தெளிந்த ஓசை தருகின்ற கிணை என்னும் பறையைக் கொட்டுவோர்; செருக்குடன் எடுத்த — களிப்போடு எடுத்து எழுப்பிய; மண்கணை முழவின் — மார்ச்சனையுடைய திரண்ட முழவில் உண்டான; மகிழ் இசை ஓதையும் — மகிழ்ச்சி தரும் இசையால் விளைந்த ஓசையும்;

★

மறையோர் இருப்பிடங்கள்
(140 — 147)

இவ்விதமாகக் காவிரியாற்றின் கரையில் முழங்கும் ஓசையும் இசையும் கேட்டு மகிழ்ச்சியடைந்து, சலிப்பில்லாமல் மூவரும் வழி நடந்து அந்தணர் வசிக்கும் இருப்பிடத்தைச் சேர்ந்தார்கள். அந்தணர் ஓமம் செய்கின்றனர். வேள்விச் சாலையில் அவர்கள் எழுப்பும் புகை மேகத்திற்குக் கருப்பத்தைத் தருவது போல் வானத்தில் ஏறுகின்றது. மறையோர் செய்யும் வேள்வியின் சக்தியினால் தான் சோழ நாட்டில் மழை வளம் குன்றாமலிருப்பதும், புலிக்கொடியையுடைய மன்னனுக்கு வெற்றி உண்டாவதும்; நல்லோர் நிறைந்த நாட்டில் செல்வமும் வெற்றியும் நிலைத்து நிற்பதும். வேள்விச் சாலையின் மணம் வீசும் புகை சுற்றிலுமுள்ள மாளிகையின் மேல் படிந்திருப்பதைப் பார்த்தால், மேகம் சூழ்ந்த மலைபோலத் தோற்றம் அளிக்கின்றது. அவ்வளவு உயர்ந்த மாட மாளிகைகள்.

140. **பேர் யாற்று அடை கரை நீரில் கேட்டு, ஆங்கு**
ஆர்வ நெஞ்சமொடு அவலம் கொள்ளார்;
உழைப் புலிக் கொடித்தேர் உரவோன் கொற்றமொடு
மழைக் கரு உயிர்க்கும் அழல் திகழ் அட்டில்
மறையோர் ஆக்கிய ஆவுதி நறும் புகை,
இறை உயர் மாடம் எங்கணும் போர்த்து
மஞ்சு சூழ் மலையின் மாணத் தோன்றும்;
147. **மங்கல மறையோர் இருக்கை அன்றியும்;**

பேர் யாற்று அடைகரை நீரில் கேட்டு—பெரிய அக்காவிரியாற்றின் கரையில் (மேற்கண்ட ஓசைகளை யெல்லாம்) முறையாகக் கேட்டு; ஆங்கு அதனால்; ஆர்வ நெஞ்சமொடு — ஆவல் மிக்க நெஞ்சத்தோடு ஆவலம் கொள்ளார் — வழி நடையால் வருத்தத்தை யடையாராகி;

உழைப் புலிக் கொடித்தேர் — இடமெல்லாம் புலி வடிவு எழுதப் பட்ட கொடியணிந்த தேரையுடைய; உரவோன் — வலிமை நிறைந்த மன்னனின்; கொற்றமொடு — ஆணையோடு; மழைக்கரு உயிர்க்கும் — மழைக்கும் கருப்பத்தை தோற்றுவிக்கின்ற; அழல் திகழ் அட்டில் — அழலை விளக்குகின்ற வேள்விச் சாலையில்; மறையோர் —அந்தணர்கள்; ஆக்கிய ஆவுதி நறும் புகை — உண்டாக்கிய வேள்வியின் மணம் வீசும் புகை; இறை உயர் மாடம் எங்கணும் போர்த்து — இறப்பு உயர்ந்த மாளிகைகள் எங்கும் நிரம்பி; மஞ்சு சூழ் மலையின் — மேகம் சூழ்ந்த மலைபோல; மாணத் தோன்றும் — அழகுடன் தோன்றுகின்ற; மங்கல மறையோர் இருக்கை அன்றியும் — மங்கலத்தன்மையுடையவரான அந்தணர்களின் இருப்பிடங்கள் அல்லாமலும்.

வேளாளர் இருப்பிடங்கள்

(148 — 155)

காவிரியின் மக்களாகிய வேளாளர் தமது உழவினல் சோழ நாட்டிலுள்ள எளிய மக்களைக் காப்பதல்லாமல், நாட்டைக் காப்பவரையும் வளர்க்கிறார்கள். நாட்டின் வறுமையைப் போக்குவதற்கும், அரசாங்கம் நிலைப்பதற்கும் வேளாண்மையே அடிப்படையாகும். சோழ நாட்டில் எந்தக் காலத்திலும் குறைவு படாத செல்வத்தை வேளாளர் உற்பத்தி செய்கின்றார்கள். தூற்றாத நெல், குவியல்குவியலாகக் கிடக்கின்றது. கரும்புப்பால் காய்ச்சும் ஆலையில் கிளம்பும் புகை இந்த நெற்குவியல்களின் மேல் படிந்திருப்பதைப் பார்த்தால், வானளாவிய மலை போல் தோன்றுகின்றது. அவ்வளவு பெரிய நெற் குவியல்கள். வேள்விச்சாலையில் கிளம்பும் புகை மாளிகைகளின் மேல் படிந்திருப்பதும் மேகம் சூழ்ந்த மலைபோல் தோற்றமளிக்கின்றது. அவ்வளவு உயர்ந்த மாட மாளிகைகள். இவ்விதமான மாளிகைகள் நிறைந்த ஊர்களும் நெற் குவியல்கள்கள் நிறைந்த ஊர்களும் இடையிடையே இருக்கின்றன சோழ நாட்டில். அழகு நிறைந்த பட்டினங்களையும், வளம் நிறைந்த கிராமங்களையும் பார்த்துக்கொண்டு, ஆங்காங்கு தங்கி சலிப்பில்லாமல் கவுந்தியடிகள், கோவலன் கண்ணகியுடன் வழி நடக்கின்றார்கள். இவர்கள் நாள் ஒன்றுக்கு ஒரு காதவழிக்குமேல் நடக்கவில்லை.

148. பரப்பு நீர்க் காவிரிப் பாவை தன் புதல்வர்
இரப்போர் சுற்றமும், புரப்போர் கொற்றமும்
உழவு இடை விளைப்போர் பழ விறல் ஊர்களும்,
பொங்கழி, ஆலைப் புகையொடும் பரந்து
மங்குல் வானத்து மலையின் தோன்றும்
ஊர் இடையிட்ட நாடு உடன் கண்டு
காவதம் அல்லது கடவார் ஆகிப்
155. பல் நாள் தங்கிச் செல் நாள் ஒரு நாள்;

பரப்பு நீர்க் காவிரி — பரப்பி வருகின்ற நீரையுடைய காவிரியாயாகிய; பாவை தன் புதல்வர் — பெண்ணின் மக்களாகிய; இரப்போர் சுற்றமும் — வறியவர் சுற்றத்தினையும்; புரப்போர் கொற்றமும் — நாட்டைக் காப்பவரின் ஆணையையும்; உழவு இடை விளைப்போர் — தமது உழவினல் வளர்க்கின்ற வேளாளர்கள் (வாழும்); பழ விறல் ஊர்களும் — பழமையாகத் தலைமையுடைய ஊர்களும்; (என்றது, நெடுங்காலமாகச் சிறந்த ஊர்கள்); பொங்கழி — நெல்லைத் தூற்றாமல் இட்டு வைத்திருக்கும் பொலி; ஆலைப் புகையொடும் பரந்து — கரும்பு ஆலையாட்டுவார் புகையால் மூடப்பட்டு; மங்குல் வானத்து மலையின் தோன்றும் — மேகம் சூழ்ந்த வானளாவிய மலை போலத் தோன்றுகின்ற; ஊர் இடையிட்ட — ஊர்கள் இடையிடையே இருக்கின்ற; நாடு உடன் கண்டு — நாட்டை முழுமையும் கண்டு; காவதம் அல்லது கடவார் ஆகி — (நாளொன்றுக்கு) ஒரு காதத் தொலைவு அல்லாமல் மேற்படப் போகாதவராகி; பல் நாள் தங்கி — அங்ஙனம் பல நாட்கள் இடையிடையே தங்கி; செல் நாள் ஒரு நாள் — செல்லும் நாட்களில் ஒரு நாளில்;

(தொடரும்)

கவிதைப் பெண்

[மு. பெரியசாமி]

மென் மேகம் அவள் ஆடை;
அவள் எழிலோ
மென் மேலும் பெருகியது
கணங்கள் செல்ல
பொன் மேனி சிந்துகின்ற
கதிரின் தாரை
புன் மேகத் திரை கிழிக்கும்
அவளின் தோற்றம்
என் போன்றோர் எழுச்சி யுறும்
இளைஞர் உள்ள
எழில் வண்டு நிதம் மொய்க்கும்
பொழிலின் பூவாம்!
வாயினிலே பேசுதற்கு
வார்த்தை இல்லை; அன்றி
மனத்திலே அவளில்லா
இடம் ஒன்றில்லை; நான்
மயங்கி நின்ற நிலை கண்டு
மாது சொல்வாள்:
"முல்லை மறத் தலைவன்
முயல் வேட்டை ஆடுங்கால்
காட்டு மரத்தடியில்
கண்டெடுத்த கிளிக் குஞ்சை
விட்டுத் தலைவியிடம்
வெகுமதியாய்க் கொடுக்க
மறத்தி தமிழ் கேட்டு
வளர்ந்த பசுங் கிளியின்
பாகு மொழியையும்
பழிக்கும் குரல் சுவையில்
இதயம் பறி கொடுத்து
ஏதும் செய்யாதிருந்தேன்."

பின்னும் தொடர்வாள்; "பெருங்கதையாம் என் சரிதம்
மின்னி உடல் மறையும் மேதைத் தமிழ்க் கவிஞர்
கன்னிக் குமரி நான்; "கவிதைப் பெண்" என் பெயராம்
என்னைப் படைத்தவர்கள், இன்ப அணி பூட்டுபவர்
காலக் கனல் வெம்மையில் கரிந்து உதிர்ந்திடினும்
ஞாலத்தில் தமிழிருப்பின் நாட்டுவேன் அவர் திருப்பேர்!

ஆனாலும் சில வார்த்தை சொல்வேன் கேட்பீர்
அதற்காகவே இன்று உம்முன் வந்தேன்
மேனாட்டில் என் போன்ற கவிதைப் பெண்கள்
மேம் பாட்டு நிலை கண்டீர் என்னைப் பார்ப்பீர்

காலத்திற் கொவ்வாத கயமை ஏடு
கலைப் பேரால் இனக் கொலைசெய் கவிதை நூல்கள்
சிலத்தை வளர்க்காத புராணக் குப்பை
செகமெல்லாம் முன்னேற்றம், சீர்கே டிங்கே!

மக்களது வாழ்க்கையிலே மாறுதல்கள்
மனத்தினிலே சிந்தனையில் புதுமைச் சாயல்
புத்தகமும் புராண மெலாம் பழைமை என்னில்
புது நூல்கள் தோன்றுவது பொருத்த மன்றோ?"

"கருதியதைத் தமிழன் மகன் முடித்தே தீர்வான்
கவலை ஒழி கவிதைப்" பெண் என்று கூறி
உறுதி மொழி சொல் வதற்கு ஆரம்பித்தேன்
உடன் மறைந்தாள் பேரழகி மின்னல் போல!

கதைக் கோவை: (4-ம் தொகுதி)
பிரசுரம்: அல்லயன்ஸ் கம்பெனி, மைலாப்பூர், சென்னை; விலை: ரூ. 10—8—0.

தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் பலர் பலவிதமாகத் தொண்டாற்றி வருகிறார்கள். அதில் அல்லயன்ஸ் கம்பெனியாருக்கு நல்ல பங்கு (கொஞ்சம் நிறையவே) உண்டு. அவர்கள் தொகுத்து வெளியிட்டு வரும் கதைக் கோவைகள் ஒவ்வொன்றும் தமிழரின் உள்ள உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் ஒப்புயர்வற்ற ஓவியங்களாக விளங்குவது (தமிழ்) 'நாடே அறிந்த சேதி!'

சமீபத்தில் வெளி வந்திருக்கும் கதைக் கோவை 4ம் தொகுதியைப் படித்து முடித்ததும் மனதில் ஒரு இன்பக் கிளர்ச்சி ஏற்பட்டு தமிழ் நாட்டில், தமிழில் இவ்வளவு நன்றாகக் கதை எழுதுபவர்கள் இத்தனை பேர் இருக்கின்றார்களா என்ற வியப்பும், மகிழ்வும் ஏக காலத்தில் ஏற்படுகின்றன வெவ்வேறு வகைப்பட்ட பல உள்ளங்கள் ஒன்று சேர்ந்த கற்பனைச் சோலையில் எப்படி எப்படியெல்லாம் மலர்கள் பூத்துக் குலுங்கி அந்தச் சோலையின் அழகுக்கு அழகு செய்கின்றன என்பதை இத்தொகுதியில் காணமுடிகிறது.

தமிழ் நாட்டில் இன்றைய நிலையில் சிறுகதைகளுக்குள்ள சிறப்பையும், அவற்றின் வளர்ச்சியையும் யாராவது பார்க்க விரும்பினால் கண்ணை மூடிக்கொண்டு வாய் பேசாமல் அவர் கையில் இதுவரை வந்திருக்கும் கதைக் கோவைத் தொகுதிகள் நான்கையும் தந்து விட்டால் அதுபோதும்; வேறொன்றும் வேண்டாம்.

●

"பாசரசு" (தீபாவளி மலர்)
வெளியீடு: 'பாசரசு' காரியாலயம், பெரம்பூர், சென்னை; விலை: ரூ 2—0—0.

அரசியல் வாதிகளின் அரிய கட்டுரைகளை விசேஷ அம்சமாகத் தாங்கி வழக்கமான சிறுகதை, கட்டுரைகளுடனும், பல வர்ணப் படங்களுடனும், அதிகமான பக்கங்களுடனும் வெளி வந்திருக்கிறது. 'பாசரசு, நிர்வாகிகளின் முயற்சி நல்ல பயனளித்திருக்கிறது.

●

"சிவாஜி" (தீபாவளி மலர்,)
வெளியீடு: சிவாஜி காரியாலயம், பெரிய கடைத்தெரு, திருச்சிறாப்பள்ளி; விலை: ரூ. 1—4—0.

மறுமலர்ச்சி எழுத்தாளர்களின் சிறந்த சிருஷ்டிகளை ஏந்தி பெரிய அளவில், நல்ல முறையில் வெளி வந்திருக்கும் இந்த மலருக்கு எவ்வளவு விலை கொடுத்தாலும் தகும் என்று படித்தவர்கள் ஒப்புக் கொள்வார்கள்.

கார்த்திகைச் சுடர்

சுகி

கார்த்திகை மாதத்து மழையிருட்டு, மாலையிலே கவிந்து விட்டது. திண்ணையின் மாடங்களில் அகல் விளக்கு ஏற்றிக்கொண்டிருந்தாள் மேனகை.

"ஒரு கலையை இன்னொரு கலையால் விளக்கிவிட முடியாது. அப்படி விளக்கிவிடக் கூடுமானல் அது கலையே அல்ல" என்று ஜயராமன், படத்தைப் பார்த்தபடியே, மேனகாவிற்குச் சித்திரத்தைப் பற்றிச் சொன்னன்.

"சொல்லுக்கும் வர்ணனைக்கும் அடங்காத அந்தச் சித்திரத்தை நான் பார்த்து விடுகிறேன்."

மேனகை பத்திரிகையைப் புரட்டிப் பார்த்தாள். கண்ணையும் கருத்தையும் கவர்ந்த அந்தச் சித்திரம்,

"நில்லென்று போனர், என்
நெஞ்சை விட்டுப் போகாரே"

என்ற வரிகளுக்கு விளக்கமாக அமைந்திருந்தது. காதலன் வரவிற்காக ஏங்கி நிற்கும் பாவம் நிறைந்த சித்திரம், அழகின் பிம்பமாக ஆதர்சத்தின் விளக்காக இருந்தது. வளையம் வளையமான சுருட்டை ரோமங்கள் பின்னி முடியப்பட்டு கருநாகம் போலத் தொங்கிற்று. தெரிந்தும் தெரியாமலும் இருந்த முல்லை மலர்களின் அடுக்கு வரிசை, காலில் கொஞ்சிய செம்பஞ்சுக் குழம்பின் வர்ணம், காதள வோடிய குறுகுறு விழிகளின் ஏக்க சுபாபம், துவளத் துவள உடுத்தியிருந்த வெண் துகில்.........

படத்தைக் கூர்ந்து நோக்கிய மேனகையின் முதுகில்த் தட்டி, "அதோ தூரத்தில் மேகங்கள் சஞ்சரிப்பதைச் சைத்திரிகன் சித்தரித்திருக்கிறன். மேகம், அவளுடைய மனத்தின் சஞ்சலத்தைக் காட்டுகிறது" ஜயராமன் விளக்கம் செய்தான்.

வைத்த கண் வாங்காது பார்த்த மேனகை, "ரொம்பவும் உயர்ந்த படம்" என்றுள்.

"கோடுகளின் ஜீவ இயக்கம், நெளிவு சுளிவு உணர்ச்சி பாவம், ரொம்பவும் கலாரஸனையுடன் இருக்கிறது."

"உங்களைப் போல் எனக்குச் சொல்லாட்சி வராது. இருந்தாலும் ஒரு குறை இருக்கிறது! என்னவென்றல் கண்களை இயற்கைக்கு மாருக அவ்வளவு நீளமாகவும், கைகளில் அவ்வளவு குழைவும் விரல்களிலே கனிவும் ஏன் இருக்க வேண்டும்?"

ஜயராமன் சிரித்தான். அவனுக்கு மேனகையின் விமர்சன உள்ளம் தெரிந்த விஷயம். அவள், அவனைப்போல படித்துப் பட்டம் பெற்றவள் அல்ல. இலக்கியம், சங்கீதம், சித்திரம் முதலான அருங் கலைகளைப் பற்றிப் படித்தவளும் அல்ல.

"மேனகா, உன்னை 'மான்' என்றல் கோபித்துக் கொள்வாயோ?"

மான் என்றால் அவள் ஏன் கோபிக்கிறாள். அவள் கண்களில் மருட்சியில்லையா? கண்ணைச் சுழற்றி சிறியதோர் புன்முறுவல் கண்ட அவன், "உன் முகம் தாமரை போன்றது என்றால் கோபித்துக் கொள்வாயோ?" என்றான். அர்த்தமற்றது என்று புன்னகை பூத்தாள் மேனகை.

"சபாஷ்! மேனகா. கவிதையில் காணும் மானையும், மலரையும் ஓவியத்தில் காணும் போது நீ யேன் மிரட்சி அடைகிறாய்? உன் முகம் ஏன் வாடுகிறது? கவிக்குள்ள சுதந்திரம் சைத்திரிகனுக்கு இல்லையா?"

மேனகைக்கு வார்த்தை வரவில்லை. என்னபதில் சொல்லலாமென யோசனையில் சூழ்ந்த சமயம், "மேனகா, 'எந்தப் பெரிய வெற்றிக்கும் படைப்புக்கும் ஒரு ஏக்கமோ அல்லது ஒரு ஏமாற்றமோதான் காரணமாகும்' என்று சொன்னான் ஒரு கவி. அதே ரீதியில் இந்த ஓவியப் பெண்மணி—இதை எழுதிய சைத்திரி கனை நிராகரித்திருக்க வேண்டும். நீ என்ன சொல்லுகிறாய்?"

மனிதன் விதியோடு விளையாடுவது போல, மின்மினி விளக்கில் மயங்குவது போல், அவள் சித்திரத்தில் ஏன் மனம் செலுத்தி விவாதிக்க வேண்டும்?"

மேனகை, "அப்படியானால் உங்கள் கருத்து கைகூடாக் காதல் தான் அழியாச் சித்திரமாக இருக்க முடியும் என்பது உங்கள் கட்சி. சரி, தாஜ்மஹால் என்ன?" என்று வெற்றிக் கொடி நாட்டியவள் முறைப்பாகக் கேட்டாள்.

"தாஜ்மஹால்!" என எக்காளம் பேசியவன், "தாஜ்மஹால் பரிபூரணக் காதலின் கனவு என்று நினைக்கிறாய்?" என்று கேட்டான்.

"தாஜ்மஹால், ஷாஜஹானின் காதற் கோவில்."

பெண்களுக்கு நம்பிக்கையுடன் பேசுகிறதிலே எவ்வளவு அழுத்தம் கொடுக்க முடியும் என்று ஜயராமன் பார்த்ததும், "கட்டடம் கட்டியது ஷாஜஹான். ஆனால் மும்தாஜ் மீது இளமையில் காதல் கொண்டு, பின்னர் விரக்தியடைந்த ஒரு சிற்பியின் இதயத்தில்தான் இன்றைய தாஜ்மஹால் கோவில் கொண்டிருந்தது. இது உனக்குத் தெரியாது." என்றவன் அவள் அறியாமையைக் கண்டு நகைத்தான்.

"அப்படியானால் இதை எழுதிய சைத்திரிகனையே கேட்டு விடுங்கள்!"

பாவம், வரப்போகிற விதிக்கு அவள் வழி செய்து விடுகிறாள் என்பதை யார் கண்டது? படத்தின் லாவண்யத்தில் சொக்கிப் போன ஜயராமன் "இவள் கற்பனையோ? இல்லை உண்மையின்

உருவமா எனத் தெரிந்தால்?......" என்று நிறுத்தினன்.

" தெரிந்தால்?"

"கோபிக்க மாட்டாயே. நான் இவளை — மணமாகாதவள் ஆனல் மணந்து கொள்ளுவேன் !"

"அப்படியானல் என் மீது அரைகுறைக் காதல்; ஆகவே தாங்கள் ஒரு காவியமோ, இல்லை சித்திரமோ எழுதுவீர்கள்! அவ்வளவு தானே. பத்திரிகையில் வந்த படத்திற்கு இவ்வளவு சண்டையேன்?" என்று சமாதானம் சொல்லி, அங்கிருந்து நகர்ந்தாள்.

கார்த்திகை மாதத்துக் கரிய இருட்டு வீட்டுக்குள் கவிந்தது. பால் போல விளங்கிய விளக்குகள், மண் அகல்களை யெல்லாம் எடுத்து ஒளியேற்றியவள், பூக்காரி வைத்துவிட்டுப் போன வாழையிலே சுற்றிய பொட்டலத்தைப் பிரித்தாள். கை வழியே நெடு நெடுவென பிச்சிப் பூச்சரம் அவள் முன் தொங்கிற்று. அறையெங்கும் மணத்தின் சுகந்தம்.

குத்துவிளக்குக்கு, சிவந்த குங்குமப் பொட்டிட்டு, பிச்சிப் பூச சரத்தையும் சாற்றிய அக்குடும்ப விளக்கு, மண்டியிட்டு அஞ்சலி செய்தாள். பயபக்தியுடன், ஜயராமனிடம் நாலு கண்ணிப் பூவைக் கொண்டுவந்து தளிர்க் கரத்தால் கொடுக்க, "எது மலர்? எது கை?" என்று காவிய ரீதியில் சிரித்தபடி சொன்னன்.

வீட்டில் விளக்கின் சுடர் சிரித்துக் கொண்டிருந்தது.

2

அன்று கார்த்திகைத் தீபம். வீடெங்கும் விளக்குச் சுடர்களின் நர்த்தனம். மத்தாப்பு ஒளி கொண்ட பட்டுடை தன்னை அலங்கரிக்க, விதவித விளக்குகளின் (குத்து விளக்கு, அகல் விளக்கு, சர விளக்கு, மெழுகுவர்த்தி முதலான) ஒளியோடு ஒளியை ஒன்றுபடுத்தித் தூண்டா விளக்காக வீட்டுக்குள் வளைய வந்து கொண்டிருந்தாள்.

இதைவிட வாய்ப்பான சந்தர்ப்பம், ஒரு சைத்திரிகனை வரவேற்க

வேறு எப்போது வரும்? தன்னறையி லிருந்தபடியே அடிக்கடி எட்டிப் பார்ப்பதும், அழகாக கண்ணாடி போட்டு மாட்டப் பட்டிருந்த படத்தைப் பார்ப்பதுமாக இருந்தான்.

மேனகை, அங்கங்கே விளக்குகள் குதித்துக் குதித்துத் துள்ளி விளையாடுவதையும், சுடர்களின் மோகன அசைவையும் கண்டு, எண்ணெய் ஊற்றி அவைகளுக்கு உயிரூட்டி வந்தாள்.

"மிஸ்டர் ஜயராமன்" என்றது அந்தக் குரல்.

ஜயராமன் வெளியே வந்தான். தன் கட்சி உண்மையா, இல்லை மேனகையின் கட்சி உண்மையா என்று சொல்ல வந்துள்ள சைத்திரிகனைக் கண்டு, அன்போடு உள்ளே அழைத்தான். அவனோ எரியும் விளக்குகளையும், சுடர்களின் காந்தியையும், இட்டிருந்த மாக் கோலங்களின் வண்ணச் செம்மையையும் கண்டு அப்படியே நின்றவனை, "மேனகா, இவர்தான் அந்தச் சைத்திரிகர்.", என்றான் ஜயராமன்.

எங்கும் ஒளி வெள்ளம். காற்றில் சிவந்த சுடர்கள் அலைமோதி தலைவணங்கிக்கொண்டு எழுந்தன. சுடரே போல கை கூப்பி மேனகை வணக்கம் செய்தாள். வீட்டிற்குள், பெரிய குத்து விளக்கின் முன் வாசனைப் பத்தியின் நறுமணப் புகையும் தேங்காய் பழம் தளிர் வெற்றிலை இவற்றோடு மா விளக்குகள் எரிந்த காட்சி! சைத்திரிகன் உள்ளத்திற்கு நல் விருந்து.

அறைக்குள் போய் அமர்ந்தனர். கார்த்திகைப் பொரியும், தேன் கொண்டு பிசைந்து பசு நெய்யில் திரியிட்டு தீபமேற்றிய, தினைமாவும் இரு தட்டுகளில் வந்தன.

"பெண்களுக்குப் பண்டிகை என்றாலே கொண்டாட்டம்; அதிலும் கார்த்திகைத் தீபம் என்றால் வீடே ஒரே ஜோதி வெள்ளம். அநேக கலைகள் அழியாமல் இருப்பது பெண்ணால்தான்."

"கலையை அனுபவிக்கிறவர்கள் ஆண்கள்; கலையாக இருப்பவர்கள் பெண்கள். ஆனால் ஆண்களில் முக்காலே மூன்று வீசம் பேர்வழிகளுக்கு கலையென்றால் அப்படி அப்படித்தான். தங்கள் அபிப்பிராயம்?" என்றான் ஜயராமன்.

"தங்களைப் போன்ற ரஸிகர்கள் இருப்பதால்தான் கலைஞன் உயிர் வாழ்கிறான். என் வரையில் தங்கள் ரஸிகத்தன்மையைப்பாராட்டுகிறேன்."

ஜயராமன் புகழ்ச்சியால் நாணமடைந்து தலையைக் கவிழ்த்தான். பிறகு, "புகழ்ச்சி இருக்கட்டும் நான் தங்களிடம் ஆயிரந் தடவை கேட்டும் இப்படம் கற்பனையா? இல்லை உண்மையின் பிரதிபலிப்பா என்று கேட்டும், தாங்கள் உண்மையை என் சொல்லத் தயக்கம் அடைய வேண்டும்?"

"தாங்கள் சொல்லிய பதில் தான் என்னைத் திக்கு முக்காடச் செய்கிறது. இன்னும் தங்கள் பதில் அது தானே?"

ஜயராமன் நிமிர்ந்து, "ஆம். விளையாட்டல்ல. இப்பெண் கலியாணம் ஆகாத பெண்ணாக இருந்தால் மணந்து கொள்ளுவேன். இது நிச்சயம்." என்றான். அது அவன் சொல்லிய வேடிக்கைச் சொல்லா? இல்லை விதியின் விபரீதமா?

"அப்படித்தான் செய்து கொண்டிருக்கிறீர்கள்!"

திக்பிரமை யடைந்தவள் மேனகைதான். ஜயராமன் வெறித்து வெறித்து அந்தச் சித்திரத்தையும் மேனகையையும் பார்த்தான். ஏதோ ஒரு ஒற்றுமை அவன் கண்ணில் படர்ந்தது.

"மேனகையைத் தாங்கள் எப்போது கண்டது?"

ஜயராமன் மனதிற்குள் புகுந்துவிட்ட சைத்திரிகன், "இவரை நான் சிறு வயசில் பார்த்தது. பால்ய வயதில் பார்த்த உருவத்தை வாலைப் பருவத்திற்குக் கற்பனை செய்து வரைந்தேன்." என்றான். அவன் குரலில் கம்பீரமும் அழுத்தமும் நிறைந்திருந்தது.

மேனகையின் உள்ளம் கொந்தளித்தது. சில நாட்களுக்குமுன் ஜயராமன் சொன்ன 'எந்தப் பெரிய வெற்றிக்கும், சிருஷ்டிக்கும் ஒரு ஏக்கமோ அல்லது ஒரு ஏமாற்றமோதான் காரணமாகும்' என்ற சொற்கள் மன வட்டத்திலே நிழலாடிற்று. அடுக்களைப் பக்கம் திரும்பினாள்.

அவள் காதிலே மங்கியபடி, "நான் பாக்கியம் செய்தவன்" என்ற ஜயராமன் குரலும், "கொஞ்சம் புகையிலை இருக்குமா?" என்ற சைத்திரிகன் குரலும் விழுந்தன. உடனே செருப் போசை தேய்ந்து போவதைக் கேட்டவள், ஜயராமன் அறையை விட்டு எழுந்து போனதை உணர்ந்து அடுக்களையிலிருந்து வந்தாள். அவள் மனசிலே பொங்கிப் புகைந்து கொண்டிருந்த எரிமலை, புகைக்கு அப்புறம் நெருப்பைக் கக்குவது போல, பொல பொலவெனக் கண்ணீர் வடித்து, அந்த அறைக்குள் வந்தாள்.

எங்கும் வெளிச்சத்தின் ஜோதிச் சுடர்கள். அதில் லயித்திருந்த சைத்திரிகன், மேனகையின் சாம்பிய உள்ளத்தின் விக்கல் கேட்கவே திடுக்கிட்ட அவன், "ஏனம்மா அழுகிறீர்கள்?" என்றான் புரியாமல்.

"மடத்தனமாக, ஒரு பெண்ணைப்பற்றிப் பேசுகிறோம் என அறியாமல், உளறிக் கொட்டிவிட்டீர்கள். என்னைப் பார்த்தது எங்கே? எனக்குத் தங்களைத் தெரியுமா? உங்களுக்கு என்னைத் தெரியுமா? என் கணவர் என்ன நினைப்பார்?"

காலடியில், சாம்பல் மேடு என நினைத்து மிதிக்க எரிமலையின் நெருப்புக் குழம்பு கக்குவதைக் கண்ட பெண்மையின் பேச்சுக்கு என்ன பதிலென உணர்ச்சி அவனை உறுத்திற்று.

"தங்களைக் காப்பாற்றத்தான் அப்படிச் சொன்னேன்."

"புருஷன் – மனைவி இல்வாழ்க்கைப் பந்தத்திற்கு இதைவிட விஷக் கனல் வேறு என்ன வேண்டும்? அவர்கள் வந்தவுடன் மரியாதையாக 'உண்மை'யைச் சொல்ல வேண்டும். இது என் வேண்டுகோள்."

பெண்மையின் இதயத்தை, அதிலும் நொறுக்கி விடும்படியாக அவன் சொன்ன போது அர்த்தம் தொனிக்கவில்லை. பித்துப் பிடித்த அவனைப் பார்த்து "அவர் மனத்திலே விஷம் தோய்ந்தால் என் வாழ்வு என்னாகும்?" என்று கம்பீரமாகக் கேட்டாள்.

"அம்மா, நான் உண்மையைச் சொன்னால் தங்கள் வாழ்வு நரகமாகும். அதைக் காப்பாற்றத்

தான் நான் பொய் சொன்னேன்." என்றான் சைத்திரிகன், குரலில் இளக்கமும், இதயத்தில் மன்னிப்பும் நிறைந்திருந்தது.

மேனகையின் கண்களிலே கோபம் ஏற்பட்டு அந்தப் படத்தைப் பார்த்தாள். வீட்டுக்குள் எரிந்து கொண்டிருந்த விளக்குச் சுடர்கள் பல நிழலாடிக் கொண்டிருந்தன.

மீண்டும், "உண்மையைச் சொல்லுங்கள்?" என்றாள்.

"சொல்லுகிறேன். பேதையுள்ளம் புண்பட நான் பேசவில்லை. இந்தப் படத்தில் உள்ள பெண் தஞ்சாவூர்ப் பக்கத்தில்..."



சைத்திரிகன் சொல்லி வந்த குரலின் ஏக்கத்தையும், உள்ளத்தின் தூய்மையையும், சொல்லின் வாய்மையும் கேட்டு வந்தவள், "வேண்டாம் வேண்டாம். என்னைவிட என் கணவரின் இதயத்தை நன்கு அறிந்து கொண்டீர்கள். என்னை மன்னியுங்கள். நான் தப்பர்த்தம் செய்ததற்கு என்னை மன்னிக்கக் கோருகிறேன்." எனத் தயங்கினாள்.

கோபம் துடித்த கண்களிலே சாந்தியும், துயரம் தோய்ந்த குரலிலே துக்கமும் நிறைந்திருந்தது.

"உமது கணவரிடம் உண்மையைச் சொல்லி விடுவேன்."

"வேண்டாம். வேண்டாம்."

புகையிலை வாங்கி வந்து கொண்டிருந்த ஜயராமன் காதில் இப்பேச்சு அரை குறையாகக் கேட்டது. செருப்போசை கேட்கவே மேனகை தன்வாழ்வைக் காப்பாற்றிய சைத்திரிகனை மனதார வாழ்த்திக் கொண்டு அடுக்களைப் பக்கம் வந்தாள்.

ஜயராமன் புகையிலையைக் கொண்டுவந்து மேஜையில் வைத்தான். சலனமற்றிருந்த அவன் உள்ளத்திலே அரை குறைப் பேச்சு விஷம் தோய்த்தது. உபசாரமாக, "இதற்காகவா, கடைக்குப் போனீர்கள், புகையிலை வாங்கப் போயே இருக்க வேண்டாம்" என்றான் சைத்திரிகன்.

"மேனகை!" அந்தக் குரலில் எவ்வளவு கடுகடுப்பு. சந்தேகம் பாம்பின் விஷத்தை விடக் கொடிய வேகம் நிறைந்தது. "இந்த விளக்கைத் தூண்டு" என்றான் ஜயராமன். அழுது கண்ணீர் கலங்கிய முகத்தில் மகிழ்ச்சியும், குதூகலமும் வரவழைத்தபடியே வந்து கொண்டிருந்தாள். அதற்குள் விளக்கு அணைந்தது.

சிரித்தபடியே, "இந்தப் படம் இவளைப் பார்த்தா வரைந்தீர்கள்?' என்றான் ஜயராமன்.

உண்மையைச் சொல்லுவதா வேண்டாமா எனத் தயங்கி முடிவில், "இல்லை" என்றான்.

"அடேயப்பா அதற்குள் எவ்வளவு பொய்?"

"பொய்யல்ல, மிஸ்டர் ஜயராமன். அப்போது சொன்னது தங்கள் மனைவியைக் காப்பாற்ற."

"இப்போது சொல்லும் பொய் யாரைக் காப்பாற்ற?"

"என்னைக் காப்பாற்றிக் கொள்ளத்தான்" என்று சைத்திரிகன் சொல்லுமுன் மேனகை குறுக்கிட்டாள்.

"என்னைச் சிறு பிள்ளையில் பார்த்துத்தான் வரைந்தார். தங்கள் இதயத்தில் பூசல் படரக் கூடாதே யென மாற்றுகிருர்."

"பொய் மிஸ்டர் ஜயராமன். இது பொய். இதோ அப்பெண்ணின் விலாஸம். உம் வாழ்க்கையைக் காப்பாற்ற நினைத்தேன். ஆனல் முடியவில்லை." என வெறியன் போலக் கூறியவன் ஒரு கடிதத்தில் விரைவாக விலாசம் எழுதித் தந்துவிட்டு, வெளிப் பக்கம் ஓடினன்.

தெருவிலே பல்லாயிரக் கணக்கான கார்த்திகை விளக்குகள் சுடர்விட்டுக் கொண்டிருந்தன. ஜயராமன் பெருமூச்சு விட்டபடியே விலாசத்தைப் பார்த்தான். மேனகை சிலை போல படத்தை வெறிக்கப் பார்த்தபடியே சுவரில் சாய்ந்து நிற்க, திண்ணையிலும் வீட்டுக்குள்ளும், வெளியிலும் சுடராடிக் கொண்டிருந்த நெருப்புப்பொறிகள் மடிந்து விட்டன.

கார்த்திகை மாதத்துக் காரிருள் எங்கும் தன் கரிய போர்வையை விரித்தது.

3

கார் காலம் போய், முன்பனி பின்பனி யெல்லாம் வந்தது. ஜயராமன் வரக் காணும். அவனைத் தேடி, சைத்திரிகன் கொடுத்த விலாசத்தில் மேனகையின் தந்தை எல்லோரும் போய் விசாரித்தார்கள். சுவடே தெரியக் காணும்.

சைத்திரிகன் கொடுத்த விலாசத்தில் இருந்தவளும், படத்திற்கு உருவகமானவளும் ஒரு தாசி என்று அவர்களுக்கு எப்படித் தெரியும்?

ஆனல் சைத்திரிகன் தீர்க்கதரிசி!

இந்தக் கார்த்திகை சமயம் வீட்டைப் பார்த்தேன். விளக்குகள் இல்லை. செஞ்சுடர்களின் ஒளியலை இல்லை. விளக்கப்படாத எண்ணற்ற ஒளியிழந்த விளக்கோடு விளக்காக அந்த வீட்டில் இருக்கிருள் மேனகை.



இலக்கிய ஆராய்ச்சி:

மறுமலர்ச்சி

வித்வான் அ. கிருஷ்ணமூர்த்தி

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் பொது மக்கள் படிக்கக்கூடிய மாதிரித் தமிழில் இருந்த நூல்கள் மிகவும் குறைவு. ஆங்கிலம் படித்தால் — ஆங்கிலத்தில் எழுதினால் ஒரு பெருமையாகக் கருதினார்கள் மக்கள். ஆங்கிலம் படித்தவர்கள் தமிழ் பேசுவதும், தமிழில் எழுதுவதும், ஆங்கிலம் தெரியாதவரோடு பழகுவதும் கௌரவக் குறைவாகக் கருதினார்கள். ஆங்கிலம் படிப்பதால், உத்தியோகம் பெறலாம்; அந்தஸ்து உயரும் என்ற நம்பிக்கையும் இருந்து வந்தது. பள்ளிக் கூடங்களிலும், பொது மேடையிலும், அன்றாட நிகழ்ச்சிகளிலும் தமிழ் ஒரு புறக் கணிக்கப்பட்ட மொழி. சுருங்கச் சொன்னால் தமிழ் இருந்தது ஒரு இடம்; படிப்பாளிகளின் ஆவல், முயற்சி, எழுத்து, பேச்சு, எண்ணம் எல்லாம் இருந்தது இன்னொரு இடத்தில். இந்த இரண்டு இனத்திற்கும் சரியான தொடர்பு கிடையாது.

ஆங்கிலம் நமது நாட்டில் நன்கு பரவத் தொடங்கிய காலத்திலிருந்து சிறிது சிறிதாக வளர்ந்து, சிறப்பாக 1915 க்கு மேல் 1935 வரையில் முன்பு விவரித்த நிலைமையில் மிகவும் உச்சத்தில் இருந்தது. அப்பொழுது புத்தகம் எழுதுவோரிடத்தில் ஒரு தப்பான அபிப்பிராயம் இருந்தது. அதாவது ஆங்கிலத்தில் தாங்கள் படித்த எல்லாச் சேதிகளையும் தமிழில் எழுதி விளக்க முடியாது என்று நினைத்தார்கள். பொது மக்களுக்காக எழுதுவது, சமூக இலக்கியங்களை வளர்ப்பது என்ற எண்ணம் பரவவில்லை. எழுதினால் வாங்குவோரும், படிப்போரும் மிகவும் குறைவு. ஒரு பொருளுக்கு இருக்கிற தேவையை ஒட்டித்தான் அதன் உற்பத்தியும் இருக்கும். அல்லது உற்பத்தியைப் பெருக்க வேண்டுமானால், மக்களிடத்தில் தேவையை அதிகரிக்கக் கூடிய சக்தியும் திறமையும் எழுத்தாளரிடத்தில் இருக்க வேண்டும். இந்த இரண்டும் இல்லாத நிலைமையில் பலர் புத்தகங்கள் எழுதினார்கள்.

எழுதியவை பெரும்பாலும் நாவல்களே. இவை பல பேர் விரும்பி வாங்கக்கூடியவை. எழுதுகிறவருக்கும அதிகத் தொந்தரவு கிடையாது. விஞ்ஞானத்தையோ, அல்லது பொருளாதாரச் சமூக தத்துவங்களையோ மக்கள் வாழ்வோடு சம்பந்தப் படுத்தித் தமிழில் விளக்கிக் காட்டக் கூடிய சக்தியும் திறமையும் அந்த எழுத்தாளர்களுக்கு இல்லை. ஏதேனும் கொஞ்ச நஞ்சம் இருந்தால், எழுதக்கூடிய உணர்ச்சி வேகம் கிடையாது. எனவே நாவல்களை எழுதினார்கள்; சொந்தமாக அல்ல; ஆங்கில நாவல்களைத் தழுவி, அல்லது மொழி பெயர்த்து! அதுவும் காதல் நாவல்களே; தவறினால் துப்பறியும் நாவல்களே. சமூகத்தின் எண்ணத்திற்கும், எழுச்சிக்கும் ஏற்றம் தரக்கூடிய எத்தனையோ பல நாவல்கள் இருந்தும் (அவற்றை மறக்கவில்லை, ஆனால் நீக்கி விட்டு) எழுத்தாளர் கைப்பற்றியது காதல்! அடுத்தது துப்பறியும் நாவல். நீதி மன்றத்தில் வேலையில்லாத நேரத்தில் வக்கீல்கள்

எழுதியது துப்பறியும் நாவல். காதல் எல்லாருக்கும் பொது. எனவே எல்லாரும் பொதுவாகவே காதற் காவியத்தில் கருத்துச் செலுத்தினர்கள். பழைய காலத்துப் புத்தக விலைப்பட்டி (கேட்டலாக்) இதற்கெல்லாம் ஒரு தெளிவான உதாரணம் "ஆயிரம் தலை வாங்கிய அபூர்வசிந்தாமணி, கும்பகோணத்து வக்கீல், சிதம்பர ரகசியம், அந்தப்புர மர்மம் இவை — தமிழில் ஆங்கிலப் படிப்பாளிகளால் எழுதப்பட்ட இலக்கியங்கள். "பிறநாட்டு நல்லறிஞர் சரித்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்" இவர்கள் பெயர்த்த வேலை இந்தக் காதல் நாவல்கள்தான். பழைய காலத்து விக்கிரமாதித்தன் கதை, பெரிய எழுத்து மதனகாமராஜன் கதை, மன்மதன் எரிந்தவுடன் ரதி புலம்புவது, எமதர்மன் தர்பார் இவைகளுக்கும் இந்த நாவல்களுக்கும் அதிக வேறுபாடு கிடையாது.

இப்படி ரகசியம், மர்மம், தர்பார், மதனம், புலம்பல், காதல் "காதலுக்காகத் தியாகம்" இவையெல்லாம் எழுதி முடிந்த காலத்தில் பத்திரிகைகள் பெருகத் தொடங்கின. இது வரையில் அரசியல் சேதிகளில் மட்டும் கருத்துச் செலுத்தி வந்த பத்திரிகைகள் கதைகள், கட்டுரைகள், ஆராய்ச்சிக் கருத்துகளோடும் வெளி வந்தன. ஆண்டுதோறும் பத்திரிகைகளின் தொகை வெள்ளம்போல் பெருகிற்று. மாதம் ஒரு முறை, இரு முறை; வாரம் ஒரு முறை, இரு முறை, மும்முறை இப்படி விதம் விதமான பத்திரிகைகள்! வரும்போதே "ஓர் உயர்தர மாதப் பத்திரிகை" என்று ஒன்று வெளிவரும். இன்னும் கொஞ்சம் புரியாத வார்த்தையில் "மாசிகை" "வார சஞ்சிகை" என்று சொல்லிக் கொண்டு வருவன சில. இன்னும் இரண்டு மாதத்தில் நமது சஞ்சிகை மீண்டும் வெளி வரும் என்று உள்ளே போன பத்திரிகைகள் சில. ஒரு முறையும் இனி வருவதில்லை என்று ஓடிப் போனவை சிலவல்ல; பலப் பல. பத்திரிகை எங்கே? ஆசிரியர் எங்கே?.........எங்கே?...... விடை கிடையாது.

சொற்ப காலத்திற்குள் சினிமாக்கள் அதிகமாகப் பரவிவரவே பெரியவர்கள் நாவல் என்று பெரிய கதைகளைப் புத்தகமாக எழுதுவதை விட்டு விட்டார்கள். இளைஞர்கள் — அதாவது — பள்ளிக்கூடத்தை முடித்தவர்களும், நடுவில் விட்டவர்களும், வேலை கிடைக்காதவர்களும், வேடிக்கை விரும்புவோரும் தமது சிந்தனைக் கெட்டிய மட்டில் சிறு கதைகள் எழுதத் தொடங்கினர்கள்.

இவர்களுக்கு இது எழுதுவது எளிதாயிற்று. எப்படி? நாலு படம் பார்த்ததும் கதையின் அமைப்பு, அளவு கற்பனையழகு ஆகியவை பிடி படுகின்றன. ஆங்கிலம், இந்தி முதலான நாவல்களையும் படித்துக் கொண்டால் இன்னும் வசதி அதிகமாகிறது. உதவிக்குப் பத்திரிகைச் செய்திகள், விமரிசனங்கள்! வெளியிடுவதற்கும் பத்திரிகைகள் உண்டு. கட்டுரைகளுக்கு அவை பணமும் தரும். இன்னும் முன்பெல்லாம் தமிழில் பத்திரிகை என்ருல், தினசரியோ, வாரப் பத்திரிகையோ, கூடிய மட்டும் நல்ல அரசியல் அறிவும், அதிகப் படிப்பும் உள்ளவர்களால்தான் நடத்த முடிந்தது. இப்பொழுது கதைகளைப் பற்றியும், படங்களைப் பற்றியும் எழுதும் பத்திரிகைகள் அந்தத் தொந்தரவுகள் இல்லாமல், இந்தச் சேதிகளுக்கு வேண்டிய கொஞ்ச

பக்குவம் இருந்தாலே போதும் என்று ஆகி விட்டதால், பத்திரிகையும், பத்திரிகாசிரியர்களும் அதிகமானார்கள். அதாவது அரசியல், சமூகம், பொருளாதாரம்— என்ற இந்த அடிப்படையின்மேல் இளைஞர்கள், ஏழைகள், பெண்கள், சமூகக் கட்டுப்பாடு, மௌடீகம், தீண்டாமை, வேலையில்லாமை முதலான பொருள்களைப் பற்றி எவ்வளவோ எழுத வேண்டியிருக்க, அதையெல்லாம் விட்டுவிட்டு, வெறும் காதற்கதைகளை மட்டும் வெளியிடும் பத்திரிகைகள் பெருகின.

இந்தப் பத்திரிகைகளில் எழுதத் தொடங்கியவர்கள் இளைஞர்கள். அன்றியும், எழுதுவோர், படிப்போர், நினைப்போர், பார்ப்போர் எல்லோருக்கும் காதல் இன்பந் தரக்கூடியது. இதனல் பத்திரிகையும் அதிகம் செலவாகும். நமது பெண்கள் அதிகம் படிக்காததோடு, வீட்டுக்குள்ளேயே இருப்பதால் இந்த மாதிரிப் பத்திரிகைகள் அவர்களைக் கருதி அதிகமாக விற்பனையாகின்றன. அதிகக் கல்வியறி வில்லாதவர்களுக்கு இந்தக் காதல் நினைவும், பேச்சும் ஒரு வேடிக்கை விளையாட்டாதலால், அங்கும் நல்ல விற்பனை. ஆபீசிலும், வெளியிலும், ஆங்கிலத்தில் எழுதிப் பேசிப் படித்துவிட்டு, வீட்டில் ஓய்வாக இருக்கும் உத்தியோகஸ்தருக்குத் தமிழில் புதிய நல்ல இலக்கியங்கள் இல்லாததாலும், இருப்பவை புரியாததாலும் இந்தக் கதைகளைக் கட்டியழுகிறார்கள். அப்படியானல், இளைஞரைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

இப்படிப் பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகள் முதலில் சிறு சிறு புத்தகங்களாக வெளிவந்தன. இதே சமயத்தில் வங்காள மொழியையும், இந்தியையும் படித்தவர்கள் அந்த மொழிகளிலுள்ள கதைகளையும் மொழிபெயர்த்துத் தமிழில் நாவல்கள் எழுதினர்கள் — அல்லது — தழுவிப் புதுக் கதைகள் அதிகமாக எழுதத் தொடங்கினர்கள். அதாவது 1936 க்குப் பிறகு. அதே சமயத்தில் தமிழ் நூல்களை அழகாக ஆங்கில நூல்களைப்போல வெளியிடும் மனப்பான்மை நடைமுறையில் வந்தது.

உயர்ந்த தாள்களில், சிறந்த அட்டையோடு, விலையுயர்ந்த பதிப்புகள் வெளிவரத் தொடங்கின. இப்படிச் சிறு கதைகளும் பெருங்கதைகளும், படக்கதைகளும், உரையாடலும், நாடகமும் கற்பனைக் காட்சிகளும், கவிகளும் பெருகின.

இதே சமயத்தில் அதாவது 1935—40 க்குள், இசைக் கச்சேரிகளும், ஒலி பரப்பி நிலையங்களும் இன்னிசை விருந்தை தினந்தோறும் இரவு பகலாக மக்களுக்கு வழங்கி வந்தன. நாளடைவில் இவை இன்னும் பெருகின. இந்த இசைப் பாட்டுகள், பாடகர்கள், பத்திரிகைகள், ரசிகர்கள் இவர்களுக்குள் ஒரு தொடர்பும் விளம்பரமும் அதிகமாயின.

எனவே தமிழ் படிக்கும் பொது மக்களிடையே அன்றாடச் செய்தித்தாள்கள் தவிர, வேறு ஏதேனும் படித்தால், அல்லது கேட்டால், அவையெல்லாம் எங்கு தொடங்கினலும், எங்கு போனலும், சுற்றிச் சுற்றி இந்தக் காதலுக்குத்தான் வந்து சேரும். இவ்வாறு நாவல்களும், படக்காட்சியும், பாட்டுகளும், கதையும், கட்டுரையும், கவியும் — இவைகளை அச்சிடும் பத்திரிகை

யும் — வெளி வந்த புத்தகங்களும் படிப்பவரிடையே ஒரு 'காதல் மனப்பான்மையை' வளர்த்து விட்டன. ஒரு பையன், ஒரு பத்திரிகையில் கட்டுரையை எழுத நினைத்தானனல், அவன் முதலில் அந்தக் காதல் வழியில் காதற் கட்டுரை எழுத நினைப்பானே தவிர வேறு எதுவும் எழுதத் தெரிவதில்லை; வருவதுமில்லை. காதலை எழுதுவது என்பது அவ்வளவு சாதாரணமாகி விட்டது! ஏன்? பத்துப்பேர் ஒரு பொருளைப்பற்றி எழுதினல் அடுத்தவன் அம்மாதிரி ஒரு புத்தகம் எழுதுவது ஒரு கடினமல்ல! அதாவது ஊசிபோன வழியில் நூல் போவதுபோல. சுருங்கச் சொன்னல், பத்திரிகை அல்லது புத்தகம் முழுவதும் காதற் சேதிகளாக இருந்தாலல்லாமல், அவைகளுக்கு விற்பனையில்லை என்ற நிலைமை உண்டாகி விட்டது.

இந்த மனப்பான்மையை அதிகப் படுத்துவதுபோல இயற்கையை வருணிப்பதும், இயற்கையைக் காதலிப்பதும் பெருகத் தொடங்கிற்று. சென்ற ஐந்துஆண்டுகளுக்குள் இந்த இயற்கை வருணனை நமது எழுத்தாளர்களிடத்தில் காதற் கற்பனைகளைக் கிளறி விட்டிருக்கிறது. இந்த இயற்கையை ஒட்டிக் கிராமக் காட்சிகளைக் கண்டு களிப்பதும், வருணிப்பதும், பாடுவதும் பெருகின.

இயற்கையை வருணிப்பதென்ருல் என்ன? அந்திவானம், மலையின் அமைதி, கடலின் பெருமை, வெள்ளை வெண்ணிலா, சிலு சிலு வென்று வழியும் அருவி, மந்த மாருதம், பறவையின் பாட்டு, சோலையின் குளிர்ச்சி, மலரின் மணம், இந்தக் காட்சியில் காணப்படும் அமைதி, இன்பம், அழகு எல்லாவற்றையும் கற்பனை செய்வது. இந்த இயற்கை மயக்கத்தில் காதலும் கலந்து விட்டால், அது பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல.

நமது நண்பர்கள் பலபேர் இந்தப் பக்குவத்தில் இருக்கிருர்கள் இன்று. அதாவது பழம் பாலோடு சேர்ந்து வாயில் விழுமா என்று!

நான் எட்டியிருந்து பார்க்கிறேன், அதற்கு வழியில்லை பலருக்கு! பாட்டைக் கேட்டால் கேட்பதோடு சரி; கட்டுரையைப் படித்தால், அதனேடு அதுவும் சரி; படத்தைப் பார்த்தால், அன்று இரவோடு அதுவும் மறக்கிறது. ஆனல் எழுத்தாளர்கள் ஓயாமல் அது பற்றிய சிந்தனைச் சிற்பங்களை வளர்த்த வண்ணமாயிருப்பவர்கள். ஏன்? எழுத வேண்டுமல்லவா? பேசினல், நினைத்தால், எங்கேனும் கண்டால் எழுதினல் நின்ற இடத்திலேயே எப்படி அனுபவிக்கிருர்கள் தெரியுமா?

அழகு மயக்கம் அறிவு மயக்கமாகி விட்டது. கலை என்ருல் காதல் என்ருகி விட்டது. காதல் இல்லையானல் கட்டுரைக்குப் பொருளே இல்லை! அதாவது இலக்கியத்தின் பொருள் காதற் கற்பனைதான் என்பது. இப்படிப் பட்ட நிலையில் தமிழில் "மறுமலர்ச்சி" ஏற்பட்டதாக நண்பர்கள் உணர ஆரம்பித்தார்கள்.

ஆம்! மறு மலர்ச்சி ஏற்பட்டது! என்ன மறுமலர்ச்சி!

இலக்கியத்திற்கு வேண்டிய சுவைகள் ஒன்பது. நவரசங்கள். நண்பர்கள் வீர ரசத்தை எழுதுவார்கள். எப்படி? காதலுக்காகச் செய்த தியாகத்தின்மேல் வந்த

வீரம்! சோகரசம் வரும்! எப்பொழுது? காதல் கைகூடி விட்டால், அவர்கள் எழுதும் சிருங்காரத்தை நான் சொல்லவும் வேண்டுமா? எழுத்தாளர் உண்மையாக மனம் அநுபவித்து எழுதுவதால், அந்த இன்ப துன்பங்கள் அவருக்கே வந்து விடும்! ரசிகரல்லவா?

இப்படி ஒவ்வொரு சுவையாக வந்துவிட்டுப்போகும். ஒன்பது சுவைகளையும் அமைத்து இலக்கியம் எழுதுவதாக அவர்கள் நினைப்பு! ஒரு திருப்தி. ஆனால் எல்லாச் சுவைகளும் காதலோடு கலந்து அந்த அடிப்படையில் வந்த வேறு வேறு சுவைகள். ஆகவே எல்லாம் காதற் சுவை தான்! உதாரணமாக, கோபத்தில் சிரிப்பு வரும், கோபத்தில் அழுகைவரும், கோபத்தில் அச்சம் வரும் — இருந்தாலும் எல்லாம் கோபத்தின் அடிப்படையில் வந்தால் எல்லாம் கோபச் சுவை தான்! இப்படி ஆதிக்கமான (Dominant Emotion) ஒரு சுவையோடு மற்றச் சுவைகள் கலந்து வருவதுண்டு. அது கதையின் இடத்தையும், சூழ் நிலையையும் பொறுத்தது. சில இடங்களில் ஒரே சமயத்தில் பல ரசங்கள் மனதில் புகுந்து ஆட்டிவைக்கும். ஆனால் அங்கு ஆதிக்கமுள்ளதாக ஒரே சுவைதான் இருக்க முடியும். மற்றவை இரண்டாந்தரம் மூன்றாந்தரமே! அந்தத் தத்துவங்களை மேலும் விவரிக்க வேண்டாம், கட்டுரை விரியும்.

ஆகவே, காதற்கதையானாலும் அங்கு மற்றச் சுவைகளும் உண்டு என்று வாதிக்க முடியாது. காதலில் ரிக்‌ஷாக்காரன் காதல் முதல், ஜமீன்தார் காதல் வரையில் வருணித்தாய் விட்டது. ஏன் இவ்வளவு விவரம்? அதற்கு மேலும் போய் விட்டார்கள்!

உண்மையிலேயே இவையெல்லாம் காதல்தானா? அல்ல, ஒரு மனக்குறை; எழுதுவோர் மனத்தின் வேகம். மக்களின் பணத்தை எளிதாக வாங்குவதற்கு ஒருவழி. இது காதலல்ல, காமம். கலையல்ல, கானல். வெளித் தோற்றம்! வெறி!

இனி இயற்கை. இயற்கையின் இனிமையை எடுத்துரைக்க முடியாது. அது அவ்வளவு ஆழமான சக்தியும் பெருமையும் உடையது. ஆனால் அதைக் காதலுக்கு மட்டுமே நமது நண்பர்கள் பயன்படுத்திக்கொண்டார்கள். இயற்கையை அனுபவிப்பதில் அது ஒரு துறை. அதுவே முடிவானதல்ல.

இனி கிராமம். இயற்கையழகை நினைத்து நண்பர்கள் கிராமத்தை நாடினார்கள். முதலில் இயற்கைக்கும் கிராமத்துக்கும் என்ன வேறுபாடு? சுருக்கமாகச் சொல்லுகிறேன். இயற்கையில் இருக்கிற எல்லாம் கிராமத்திலும் உண்டு. ஆனால், கிராமத்தின் மக்கள் அவர்கள் வாழ்க்கை, நடமாட்டம், வீடுவாசல்களைக் கிராமந்தவிர மற்ற இயற்கைக் காட்சியுள்ள வேறு எங்குங் காண முடியாது. அதாவது நகரத்தையும், கிராமத்தையும் தவிர வேறு எங்கு போனாலும் அங்கு இயற்கை உண்டு.

எனவே, கிராமத்துக்கு முக்கியமான சிறப்பு அங்கு வாழும் மக்கள். அவர்கள் ஏழ்மையாயிருப்பதால் இயற்கையோடு கலந்து வாழ்கிறார்கள். அவர்களுக்குச் செல்வம் வாய்க்குமானால், நிச்சயமாக அவர்கள் நகரத்தாரைப் போல வாழ்வார்கள்; அல்லது நக

ரத்திற்கே போய் விடுவார்கள். அவர்கள் கிராமத்தில் இருப்பது ஏழ்மையால். இன்னொரு காரணம் பரம்பரையாக ஒரே இடத்தில் இருப்பது. இன்னொரு காரணம் குடியேறும் பழக்கமும் மனப்பான்மையும் இல்லாதது. இன்னொரு காரணம், நகரத்தோடு அவர்களுக்கு அதிகத் தொடர்பு கிடையாது. கடைசிக் காரணம் நகரத்தில் வாழ அவர்களுக்குச் செல்வமில்லை.

ஆகவே அவர்கள் கிராமத்தில் இருப்பது ஒரே காரணத்தால் — அது ஏழ்மையும் அறியாமையுமே! கிராமத்தில் இருப்பது ஒரு காரணத்தால் அல்ல. அதாவது இயற்கையின்பம் நுகர்வதற்காக அல்ல.

அவர்களை இழுக்கக்கூடிய மாதிரி ஏராளமான சம்பளத்தைக் கொடுத்ததும், போர் செய்ய நேற்றுத் தயாரானவர்கள் கிராமத்து மக்கள். சண்டையிலிருந்து திரும்பியதும் அவர்கள் கிராமத்துக்குப் போகத் தயாராயில்லை. இது என் கருத்துக்கு ஒரு உதாரணம்.

எழுத்தாளர்கள் நினைக்கிற மாதிரி கிராமத்து மக்கள் இன்பகரமாக இல்லை. நகரத்தில் ஏற்பட்ட சலிப்பினால் எழுத்தாளர்கள் இயற்கையை நாடினார்கள். இயற்கையை நாடிய வழியில் கிராமத்திற்குப் போனார்கள். ஏன்? மக்கள் நடமாட்டம், இயற்கை இரண்டையும் அனுபவிக்க. நகரத்தில் ஏற்பட்ட வெறுப்பு கிராமத்தில் அமைதி தருகிறது. உலக முயற்சிகளில் தோற்றவர்கள் — சலித்தவர்கள் — ஏமாந்தவர்கள் தன்னந்தனியான இடத்திற்குப் போவது இயற்கை. இது வேலை செய்து அலுத்தவர்கள், வாழ்க்கையில் கீழே வீழ்ந்தவர்கள் செய்வது. நகரத்துச் செல்வந்தர் சிலர் வாரந்தோறும் நாட்டுப் புறத்துக்குப் போய் வருவதுண்டு. அதாவது உல்லாச ஓய்வுக்காக. அது போல, நமது எழுத்தாளர்களுக்குக் கிராமம் ஆறுதல் தரலாம். ஆனால் கிராமத்தானை நினைக்கும் போது — அவனுடைய நன்மையை நாம் நினைத்தால் — அவனுக்கு, அந்த வாழ்க்கை இன்பந்தரவில்லை. உண்மையில் கிராமம் இன்பம் நிறைந்தது என்றால், ஏழுநூறாயிரம் கிராமங்களையுடைய இந்தியாவைவிட — உலகத்தில் வேறு எந்த நாடும் இன்பமானதல்ல! ஆனால் நிலைமையோ நேர் மாறு.

இந்தக் கிராம உணர்ச்சி அதிகமானதற்கு இன்னொரு காரணம் "கிராமத்திற்குப் போ" என்ற அறிவுரை. இந்த அறிவுரை அரசியற் கிளர்ச்சியில் தோன்றிற்று. இருந்தாலும் நமது அடி மனதில் (Sub-Conscious State) அது மறைமுகமாகத் தூண்டுதல் செய்திருக்கிறது. கோல்டுஸ்மித்தின் "பாழடைந்த கிராமம்" என்ற பாட்டையும், மற்றும் சில ஆங்கிலக் கிராமியப் பாட்டு, வருணனை, கட்டுரைகளைப் படித்தவர்களுக்கு இன்னும் அதிகத் தூண்டுதல். பழமையான சேதியும், பாட்டும், ஆட்டமும், காட்சியும் காண விரும்புவோருக்கு அதைவிட அதிகத் தூண்டுதல்.

இப்படிப்பட்ட எண்ணமெல்லாம் சேர்ந்து நண்பர்களைக் கிராமத்தில் கொண்டுபோய் விட்டது. அப்படி விட்டும் என்னயிற்று? அங்கும் வந்து விட்டது காதல். கிராமியக் கட்டுரை, கவி, கதைகள் இதற்கு உதாரணம்.

பழைய தமிழ் இலக்கியங்களில் சிலவற்றையும், பாரதியார் முத

லான தற்காலத்துப் புலவர்களின் இலக்கியங்களையும் படித்து, பாட்டெழுதத் தொடங்கினர் பலபேர். பாட்டுக்களின் தத்துவங்களைப் பற்றி, இங்கு நான் எதுவும் குறிப்பிடவில்லை. ஆனால் பாடப்பட்ட பொருள், இயற்கையில் தவழுந் தனிமை — தனிமையில் வீசும் நிலா — நிலாவை மறைக்கும் மேகம் — அதனைப் பழிக்கும் அவள்!

முதலில் நாவலில் தொடங்கிப் படம் — பத்திரிகை — சிறு கதை — கட்டுரை — இயற்கை — கிராமம் — கவிகள் எல்லாம் காதல் மயமாகவே இதுவரை போயிருக்கின்றன. இந்தப் போக்கில் இந்த இடத்திலேயே நின்று விட்டால் நமது "மறு மலர்ச்சி" என்ற சொல்லே மிகவும் கீழ்த்தரமான பொருளில் போய்விடும். இந்த விழிப்பு சிறிதளவு எழுத்தாளரிடத்தில் ஏற்பட்டிருக்கிறது. இதன் பயனாக நல்ல விளைவுகள் இலக்கியவுலகில் ஏற்படும் என்று உறுதியாக எதிர்பார்க்கலாம்.

எனவே ஏற்படும் என்பதில் ஐயமில்லை. ஆனால் எப்பொழுது? அருகிலா — தூரத்திலா என்பதே கேள்வி. இவ்வளவு குறைகளோடு மறு மலர்ச்சி வளந்திருந்தாலும் அதில் சிறப்புக்கும், பெருமைக்கும், திறமைக்கும் அடையாளமான இடங்களை நமது நண்பர்கள் எவ்வளவோ இடங்களில் காட்டியிருக்கின்றனர். அந்தத் திறமைகள் வீணாகாமல் — தனக்கெழுதுவது போய்ச் சமூகத்திற்கு எழுதுவதாக மாற்றி — உண்மையான மறு மலர்ச்சியைக் காண்பது, எழுத்தாளர் கடமை.

மறு மலர்ச்சி மணம் வீச வேண்டுமானால், காதலைக் குறைக்க வேண்டும் (கை கழுவச் சொல்லவில்லை!) மனத்தில் மாற்றம் — புதிய புதிய எண்ணங்கள் — எழுச்சியின் வேகம் (ஆனால் வெறியல்ல) இவை தென்பட வேண்டும் ஏட்டில், எழுத்தில். இவற்றோடு ஒரு பக்கம் காதலும் கலந்து வந்தால், இலக்கியம் இலக்கியம்தான்!



கலர்க் குங்குமம்

விசுவம்

"இதென்னடியம்மா அழகு! சதா குங்குமமும் கையுமாக கண்ணாடி எதிரிலே என்னதான் இருக்குமோ? புருஷன் வீட்டிலே நாளைக்கு இப்படி நின்றால் அழகாகத்தான் இருக்கும்! இரு, இரு. ஒரு நாளைக்கு சிமிழைப் பிடிங்கி தூர எறிஞ்சாத்தான் நீ வழிக்கு வருவாய்'' என்று கண்டித்தாள் பாட்டி.

கண்ணாடிக்கு எதிரில் நின்று கொண்டிருந்த கமலாவின் முகம் சுண்டியது. வழக்கம்போல அவளை சமாதானப்படுத்த சுவாமிநாதன் தான் வந்தான். தங்கை கமலாவிடம் அவனுக்கு அலாதி வாஞ்சை. அவள் கேட்பதை வாங்கிக் கொடுத்து, முகத்தில் மலரும் புன்சிரிப்பைக் காண்பதில் அவனுக்குத் தனியான ஆனந்தம்.

கலர்க் குங்குமம் என்றாலே கமலாவுக்கு அலாதி பிரியம். அதிலும் பாக்குக் கலரில் அவளுக்கிருந்த மோகம் சொல்லி முடியாது. சமயம் கிடைத்த போதெல்லாம் கண்ணாடிக்கு எதிரில் நின்று கொண்டு பைசா அகலத்திற்கு நெற்றியிலே குங்குமம் இடுவதும், அழிப்பதும், இட்டு முகத்தைத் திருப்பித் திருப்பி அழகு பார்த்துக்கொள்வதும் தான் அவளுக்கு வேலை.

கமலாவுக்குப் பதினாறு வயசு. உள்ளுக்குள்ளேயே கம்மென்று மணம் நிரம்பி, அந்தி மயக்கத்திலே இதழ் விரிக்கும் மல்லிகை மொக்குப்போலிருந்தாள் அவள். புதுக்கிளையில் நிற்கும் ஜீவ சத்துப் போல, அவளுடைய ஒவ்வொரு அங்கத்திலும் இளமையின் ஜீவகளை நிரம்பி யிருந்தது. அதன் கொந்தளிப்பினால் அவளுடைய நடையிலும், பார்வையிலும் ஒரு குதிப்பும் துள்ளலும் இருந்தன.

வளர்பிறை போல நாளுக்கு நாள் புதியதோர் எழிலுடன் கட்டுக்கடங்காத சோபையுடன் விளங்கும் கமலாவைக் கண்டு, பாட்டி அங்கலாய்த்தாள். காட்டில் மலரும் மலரைப்போல, யாரும் சீண்டாதவளாகவே கமலா தன் பாட்டியுடன் ஒரு சின்ன வீட்டில் வசித்து வந்தாள். சிறு வயதிலேயே தாய் தந்தையரை இழந்தவள், தாயைப்பெற்ற பாட்டியின் பாதுகாப்பில் வளர்ந்தாள். அண்ணன் சுவாமிநாதனும் பாட்டியும்தான் அவளுக்கு உறவினர்கள். பிரமாதமாக சீர்செனத்தி செய்து, கமலாவின் கல்யாணத்தை நடத்த சக்தியில்லாத குடும்பம். அதனால் தானோ என்னவோ அவளை யாருமே மணம் செய்து கொள்ள முன் வரவில்லை. வாசல் வழியாக கல்யாணக் கொட்டு முழக்கும், ஊர்வலங்களும், அவைகளுக்குப் பின்னால் அணிவகுத்துச் செல்லும் பெண்களின் கலகலகப்பான பேச்சும் சிரிப்பொலியும் கமலாவின் உள்ளத்தைக் கிளறி விடும். அந்தக் கேளிக்கையில் தானும் கலந்து கொள்ள வேண்டுமென்று துடிதுடிக்கும் பேராவலைப் பாட்டியின் சாட்டைக்குப் பயந்து, அரும்பாடு பட்டு அடக்கிக் கொள்வாள்.

வழக்கம்போல அந்த வருஷமும் முகூர்த்த மாதங்களெல்லாம் போய், தை பிறந்தது. சுவாமி நாதனும் வரனுக்காகப் பகீரதப் பிரயத்தனம் செய்து வந்தான். வரன் அமைந்தால் பொருத்தமில்லை பொருத்தம் அமைந்தால், லௌகீக விஷயம் இழுத்த இழுப்புக்கு இவனால் சமாளிக்க முடியவில்லை. அந்த வருஷமும் வீணாகிவிடுமோ என்று துடி துடித்துக்கொண்டிருந்தான் சுவாமிநாதன்.

அன்று வெள்ளிக்கிழமை விளக்கேற்றும் சமயம். "சுவாமி குத்தாலம் போயிருக்கான். ஒரு வரன் எட்டும்போலிருக்கு. ஈஸ்வர கிருபை எப்படியிருக்கோ" என்று பாட்டி கவலைப்பட்டுக் கொண்டிருந்த சமயம் வாசலில் குதிரைவண்டி வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

கமலா வாசலில் வந்து எட்டிப் பார்த்தாள். முதலில் அண்ணாவும், பின்னால் ராணுவ உடை தரித்தவர் ஒருவரும் இறங்குவதைக் கண்டு, வெட்கத்துடன் உள்ளே குதித்தோடினாள்.

பெட்டி படுக்கையுடன் உள்ளே வந்தான் சுவாமிநாதன். பின்னால் ராணுவ உடை தரித்தவர் வந்தார். "பாட்டி, இதோ இவனை உனக்கு அடையாளம் தெரியுதா, பாரு, பாட்டி," என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தான் சுவாமிநாதன். வந்தவனை, பாட்டி அருகில் வந்து உற்றுப் பார்த்தாள்.

"ஏண்டா ரங்குதானேடா நீ?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் பாட்டி.

"ஆமாம், பாட்டி. என்னோட சேர்ந்து படிச்சானே, அதே ரங்கு தான்," என்று நினைவுறுத்தினான் சுவாமிநாதன்.

"இதென்னடாப்பா அடையாளமே தெரியவில்லையே. முந்திக்கு இப்போ ரொம்ப மாறியிருக்கே" என்று அதிசயத்துடன் ஏற இறங்க ரங்கநாதனைப் பார்த்தாள் பாட்டி.

ரங்கநாதன் சிரித்துக்கொண்டே பதில் சொன்னான். "நான் மிலிடரியிலே சேர்ந்திருக்கேன் பாட்டி இந்த 'ட்ரெஸ்லே' என்னை அடையாளம் தெரியாம இருக்கலாம். நான் அவ்வளவு மாறவில்லையே" என்றான்.

பாட்டி அவர்களுக்குப் பலகாரமும் காப்பியும் தயார்பண்ண சமையல்க் கட்டுக்குப் போனாள். ஆனால் அவளை முந்திக்கொண்டு அங்கே கமலா சுறுசுறுப்பாக இருந்தாள். கூட்டத்திலே சுவாமி நாதனும் தன் பால்ய நண்பனுடன் பழைய கதைகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தான்.

ரங்கநாதன் நல்ல குடும்பத்தில் பிறந்தவன். சுவாமிநாதனுடன் காலேஜில் படித்த அத்யந்த நண்பன். படிப்பை முடித்துக் கொண்டு ஊருக்கு போனவன் பிறகு அவனுடைய தொடர்பு அற்றுவிட்டது.

"என்னபா சாமி நீ எங்கேயப்பா வேலைபார்க்கிறாய்?" என்று கேட்டான் ரங்கநாதன்.

"பட்டாளத்திலே ஒரு கம்பெனி சர்வீஸ். ஏதோ சாதாரண வாழ்க்கைதான். அதிருக்கட்டும், ரங்கு, உன் அஞ்ஞாதவாசக் கதையைச் சொல்லேன் கேட்கலாம்."

ரங்கநாதன் கலகலப்பாகப் பேசுவான். சிரிப்பும் விளையாட்டும் கூடத்தில் ரகளைப்பட்டது. மிலிடரி வாழ்க்கையைப்பற்றி ரங்கநாதன் வெகு சுவாரஸ்யமாக

177237

சொல்லிக் கொண்டிருந்த சமயம் கமலா பலகாரமும் காப்பியும் கொண்டுவந்து வைத்தாள். வரும் போதே, ரங்கநாதனை கடைக்கண்ணால் பார்த்தாள்! அதேசமயம் ரங்கநாதனும் பேச்சைப் பாதியில் நிறுத்திவிட்டு, கமலாவை நிமிர்ந்து நோக்கினான். கமலா வெட்கத்துடன் சிரித்துக்கொண்டுதிரும்பிப் போய்விட்டாள்.

"டேய் சாமி, உனக்கு கல்யாணம் ஆய்விட்டதாடா?" என்று கேட்டுக்கொண்டே சுவாமிநாதன் பக்கமாகத் திரும்பினான். சுவாமிநாதன் குறும்பாகச் சிரித்துக் கொண்டிருந்தான்.

"இப்போது போனவள் யாரு, என்று தெரியவில்லையா உனக்கு?" என்று கேட்டான் சுவாமிநாதன். ரங்கநாதன் சற்றுவிழித்தான்.

"எனக்கு எப்படித்தெரியும்? உன்னுடைய......"

"ஏண்டா என் தங்கை கமலாவைக் கூட உனக்கு ஞாபகமில்லையா?"

"யார்? உன் தங்கை, கமலாவா அவள்?"

ஆமாம், அவளேதான்!

"அடையாளமே தெரியலையே! ஏன் சாமி, அவளுக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா?" ரங்கநாதன் குரலில் ஆவல் நிறைந்திருந்தது.

அதுவரை பால்ய நண்பனைச் சந்தித்த ஆனந்தத்தில் மலர்ந்திருந்த சுவாமிநாதன் முகத்தில் கவலையின் சாயை திடீரென்று படர்ந்தது. வருத்தம் நிறைந்த குரலில், "கல்யாணம் இனிமேல் தான் நடக்கவேண்டும். அதற்காக நானும் இரண்டு வருஷமாக அலையாத இடமில்லை. குற்றாலத்தில் ஏதோ ஒரு வரன் இருப்பதாகக் கேள்விப்பட்டு அங்கு போனேன் சுவையில்லாமல் திரும்பும்பொழுது தான், உன்னை ஸ்டேஷனில் சந்தித்தேன்:

"நான் வந்ததும் சரியான சமயம்தான் போலிருக்கிறது. சாமி, இனிமேல் உனக்குக் கவலை வேண்டாம்" என்று சிரித்துக்கொண்டு சொன்னான் ரங்கநாதன். நண்பன் சொன்னதின் அர்த்தம் புரியாமல் சற்று தயங்கினான் சுவாமிநாதன். "கமலாவுக்கு வரன் நான் 'ஸெட்டில்' பண்ணித் தரட்டுமா?" என்று கேட்டவுடன்தான் சுவாமிநாதன் புரிந்து கொண்டான்.

"வரன் யாரப்பா? எங்கிருக்கிறான் பையன்?" என்று ஆவலோடு கேட்டான்.

"வேறெங்குமில்லையப்பா, உன் எதிரிலேயே இருக்கிறான் மாப்பிள்ளை. உனக்குச்சம்மதம்தானே? என்று புன் சிரிப்புடன் சொல்லிக் கண்களைச் சிமிட்டினான். சுவாமிநாதன் இதை நம்பமுடியாதவன் போல் சந்தேகத்துடன் பார்ப்பதை அறிந்து "உண்மையாகத்தான், சாமி. எனக்காகத்தான் கமலா காத்திருக்கிறாள். பிராப்தம், தெய்வசித்தம் எனக்கு இருக்கும் போது, நீ எங்குபோய் அலைந்தென்ன?" என்றான் ரங்கநாதன்.

"உண்மையாகவா?" என்று சந்தேகத்துடன் கேட்டான் சுவாமிநாதன்.

"இதிலே விளையாட்டு என்னப்பா இருக்கிறது?"

"எங்கள் குடும்பநிலை உனக்குத் தெரியாததல்ல"

"சாமி, நீ ஒன்றுக்கும் யோசனை செய்யாதே. இப்பொழுது நானே வந்து அண்டியிருக்கிறேன். நிபந்

தனையின்றிச் சரணாகதி. உங்கள் இஷ்டம்போல் என்னை நடத்தலாம்.'' என்று சொல்லிச் சிரித்தான், ரங்கநாதன்.

சுவாமிநாதனுக்கு ஏற்பட்ட சந்தோஷத்திற்கு அளவேயில்லை. ''எல்லாம் வேளையும் பொழுதும் வந்தால் தன்னாலே நடக்கிறது. எங்கெல்லாமோ போய் அலைந்தோமே, சாமி, பிராப்தம் இங்கேயல்லவா இருக்கிறது'' என்று ஆனந்தப்பட்டாள் பாட்டி. கமலா பேசவே இல்லை. கண்கள் பேசிய பின் கருத்துக்கு இடமேது கல்யாணத்திற்கான ஏற்பாடுகள் துரிதமாகி, இருதரப்பிலும் அதிக கைப்பிடிப்பு இல்லாமல் ரங்கநாதன் கமலாவைப் கைப்பிடித்தான்.

ஒரு நாள் கல்யாணம். கமலாவின் எழில் வதனம் அந்த ஒரு நாளில் கண் கொள்ளாததாய் இருந்தது. அமுதக் கடலிலே தோய்ந்தெழுந்த பனிநிலவுபோல் அது பிரகாசித்தது. தாம்பத்ய வாழ்க்கையின் இனிய மதுவைப் பருகிய மயக்கத்திலே இருந்தாள் கமலா.

குழந்தைக்குப் பிரியமான பொருளை அதனிடம் காட்டி, அது அதை வாங்கிக்கொள்ள ஆவலுடன் கைவிரித்துத் தாவி வரும் போது, அந்தப்பொருளை மறைத்துக்கொண்டு, குழந்தையைச் சிணுங்கவைத்து, வேடிக்கை காண விரும்பும் தாயைப் போல விதியும் மனித உள்ளங்களைக் கிளறிவிட்டு வேடிக்கை பார்க்கிறதா?

கல்யாணத்திற்குப் பின், அதிக நாள் ரங்கநாதன் தங்க முடியவில்லை. விடுமுறை நீடிக்கவும் சட்டதிட்டங்கள் அனுமதிக்கவில்லை. அவன் புறப்பட வேண்டிய நாள் வந்தது. ஆண்கள் இதயத்தைக் கல்லாக்கிக் கொண்டு எதையும் செய்து தீர்த்துவிடலாம். ஆனால் பெண் இதயம் மலரல்லவா, பிரிவினால் வாடத்தானே செய்யும்?

பாட்டியும், சுவாமிநாதனும் எவ்வளவோ ஆறுதல் சொன்னார்கள். மண்ணிலே வளர்ந்து மேலே வந்த செடி மண்ணையா நினைக்கிறது? அருகே நிற்கும் செடியை அல்லவா பற்ற ஆசைப்படுகிறது. ரங்கநாதன் புறப்பட்டவன் புறப்பட்டவன்தான்.

கல்யாணத்திற்குப் பிறகு ஏதோ பெரிய கவலை நீங்கிவிட்டதாக எண்ணி அகமகிழ்ந்திருந்தான் சுவாமிநாதன். நிம்மதியோடு வேலைக்குப் போனான். ஆனால் அந்த நிம்மதி நீடித்திருக்கவில்லை.

ஒருநாள் கமலா எழுதிய கடிதம் அவனை மறுபடியும் சஞ்சலத்திற்குள் ஆழ்த்தியது. பாட்டிக்கு உடம்பு சுகமில்லையென்று அவள் எழுதியிருந்தாள். பிறகு உடல் நலப்பட்டதாகவும் கடிதம் வந்தது.

இருந்தாலும் சாமிநாதன் அந்த வாரத்திலேயே புறப்பட்டான். புறப்படுமுன், கமலாவுக்குத் தேவையான சாமான்களை வாங்கிக் கொண்டான். கலர்க் குங்குமத்தை மறக்கவில்லை. எப்படி மறக்கமுடியும்? அவனுடைய அறையின் அலமாரியை அலங்கரித்துக்கொண்டிருந்த கலர்க் குங்குமச்சிமிழ் கமலாவை ஞாபகப் படுத்திக் கொண்டிருக்கும் போது? கலர்க் குங்குமத்தைக் காணும்போதெல்லாம் கமலாவின் நினைவுதான் அவனுக்கு.

வந்தவன், ''பாட்டி கமலாவுக்கு என்ன உடம்பு? ஏன் இளைத்துப்

போயிருக்கிருள்?'' என்று பதை பதைப்புடன் கேட்டான்.

''அண்ணு, பாட்டிக்குத்தான் உடம்பு அசௌக்யம். எனக்கில்லே அண்ணு'' என்று சொல்லிச் சிரித்தாள் கமலா.

''நான் என்னத்தைச் சொல்வேன், சாமி. மலர்ந்த பூ நாரோடு இருந்தால்தானே மணமாக இருக்கும். தொடுக்க பூ அழகாக இருக்கும். உதிரிப் பூ அழகு படுமா?'' என்று கமலாவின் முகத்தைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே சுவாமிநாதனிடம் விஷயத்தைச் சொன்னுள் பாட்டி.

''அடி அசட்டுப் பெண்ணே, ரங்கனுக்கு எத்தனை அலுவல்களோ. அவகாசம் கிடைத்தால் எழுதாமலா இருப்பான்? கடிதம் கட்டாயம் வரும். இன்று அல்லது நாளை வருகிறதா இல்லையா, பார்'' என்று சுவாமிநாதன் கனிவுடன்சொல்லித் தேற்றின பிறகுதான் கமலாவின் மனதிலே நம்பிக்கை பிறந்தது, முகமும் சற்று பிரகாசமடைந்தது.

''எங்கே கமலா, தலையை வாரிக்கொண்டு, முகத்தை அலம்பி வேறே 'ட்ரெஸ்' பண்ணிக்கொண்டு வா நீ. ஒரு பரிசு வைத்திருக்கிறேன், வேணுமா வேண்டாமா?'' என்று பரிவுடன் கேட்டான் சுவாமிநாதன்.

''என்ன வாங்கி வந்திருக்கிருய், அண்ணு?''

அவள் குரலில் பழைய தெம்பும் தெளிவும் இருந்தது. சுவாமிநாதன் மனதும் ஆறுதலடைந்தது. ''இப்போது சொல்லமாட்டேன். பொறுத்துப்பார். முதலில் நான் சொன்னபடி வந்து சேரு, போ'' என்றுன்.

அதே சமயம் ''கலர்க் குங்குமம் பட்டுக்கயிறு, அரணக்கயிறு, சீப்பு ரிப்பன்'' என்று ஒரு குரல் தெருவிலே கேட்டது. அவனைக் கூப்பிட்டான் சுவாமிநாதன் ஜன்னல் வழியாக.

கமலா உள்ளே ஓடினாள். சற்று நேரத்தில் பழைய பிரகாசம் முகத்தில் சுடர் வீச வந்து நின்றாள். சுவாமிநாதன் பெட்டியைத் திறந்து ஒரு பெரிய வெள்ளிச்சிமிழை எடுத்துக் கமலாவிடம் நீட்டினான். அதில் நிறைய பாக்குக் கலர் குங்குமம் இருந்தது. அதை ஆவலுடன் வாங்கிக் கொண்டாள் கமலா.

அதே சமயம் "ஸார் போஸ்ட்" என்று வெளியே குரல் கேட்டது. கமலாவின் பேருக்கு வந்திருந்தது கடிதம். கமலா துள்ளியோடிப் போய் அதை வாங்கிக் கொண்டாள். ஆனால் கடிதத்தின் கையெழுத்தைக் கண்டு சற்று ஏமாற்றத்துடன் தான் அதைப் பிரித்தாள். உள்ளே ஒரு லெட்டரும் ஒரு செக்கும் இருந்தன. ஒன்றும் புரியாமல் அதை சுவாமி நாதனிடம் கொடுத்தாள்.

சுவாமிநாதன் வாங்கிப் பிரித்துப் பார்த்தான். அவ்வளவு தான், அப்படியே அசைவற்று உட்கார்ந்து விட்டான். அந்த அறையே சுற்றுவது போலிருந்தது அவனுக்கு. கண்களிலே நீர் தாரை தாரையாக வழிந்தது. அதைக் கண்டு பாட்டி பதை பதைத்தாள்.

"என்னடா சாமி, என்ன சேதி! செல்லேண்டா," என்றாள் பாட்டி படபடப்பாக.

"பாட்டி ... ஒரு மாசத்துக்கு முந்தி... சண்டையிலே ரங்கநாதன் ... என்று தயங்கினான். துக்கம் நெஞ்சை அடைத்து விட்டது. பாட்டி புரிந்து கொண்டாள்.

"அட பாவி ..." என அலறினாள் பாட்டி. விம்மல்களுக்கிடையே, "ஐயோ, என் செல்லமே, இந்த வாழ்வுக்காகவா கல்யாணம் பண்ணிக் கொண்டே..." என்று அலறிக் கொண்டே, கமலாவைக் கட்டியணைக்க வந்தாள் பாட்டி.

ஆனால் அதற்குள் கமலா துவண்டு தரையில் சாய்ந்து விட்டாள். கையிலிருந்த வெள்ளிச் சிமிழ் தரையில் விழுந்து, அதிலிருந்து பாக்குக் கலர்க் குங்குமம் நாலா பக்கமும் சிதறிப் பறந்தது.

அதே கணம், "ஸார், தந்தி" என்றான் தந்திச் சேவகன் முன் வாசலில். ஆவலோடு வாங்கிப் பிரித்துப் பார்த்த சுவாமி நாதன் ஆனந்தத்தில் கூச்சலிட்டு விட்டான். ஓடோடியும் உள்ளே வந்து, உரக்க வாசித்தான். "ரங்கநாதன் தவறி விட்டதாக அனுப்பப்பட்ட செய்தி தவறு. பிடிக்கப் பட்ட எதிரிப் படையில் அவர் இருக்கிறார் என்று தெரிய வருகிறது. தவறுதலுக்கு மன்னிக்கவும்."

பித்துப் பிடித்துப் பதுமையாக இருந்த கமலாவின் முகத்தில் மீண்டும் ஜீவகளை பிறந்தது. வெயில் பட்டு வாடித் துவண்டு கிடக்கும் கொடியின் மேல் மழைத்துளி பட்டதும், அது பொங்கிப் பூரித்துக் கிளம்புவது போல், கமலா எழுந்தாள். ஆனந்தத்துடன் குங்குமத்தை எடுத்து முகத்தில் அப்பிக் கொண்டாள். அது புதியதோர் ஒளி விட்டு, அவள் முகமண்டலத்தைச் சுடர்விட்டுப் பிரகாசிக்கச் செய்தது.

"கலர்க் குங்குமம், அம்மா; கலர்க்குங்குமம் கேட்டீங்களே," என்று வியாபாரி வாசற் படியிலே வந்து கூவினான். அது யார் காதிலும் விழ வில்லை.

சந்திரோதயம்

[கே. ஸி. எஸ். அருணாசலம்]

அமுதத்தின்கலை கொண்டு அழகான மதியே
குமுதத்தை மலர்வித்த கோலத்தைக் கண்டேன்
தமிழுக்கு இணையாமுன் தண்கலைகள் எல்லாம்
கமலத்தின் நெஞ்சுக்குக் கனலான தேனோ?

மருங்காக விண் மீன மங்கையர் கணங்கள்
சிருங்கார உணர்வோடு கண்சைகை செய்ய
பெருங்காவியங்களிசை பேசிட உதித்தாய்
விரும்பாத உயிர்க்குல மிவ்விரியுலகிலுண்டோ?

பாடிவரும் நதியெல்லாம் பால்வெள்ளம்செய்தாய்
தேடிடு சகோர முணத் தேன் நிலவு பெய்தாய்
காடுமலை எங்கணும் களித்துலவும் மான்போல்
ஈடற்ற கற்பனைகள் துள்ளிட எழுந்தாய்!

ஆசிரியர் :
சரத் சந்திர சட்டர்ஜி

சாவித்திரி

மொழிபெயர்ப்பு :
ஆர். ஷண்முகசுந்தரம்

அறைக்குள் நுழைந்ததும் ஷஷாங்கமோகன் சரோஜினியிடம் கை குலுக்கிக் கொண்டு க்ஷேமங்களை விசாரித்தான். தான் திடீரென வந்த காரணத்தை யாரும் கேட்காமலேயே கூறத் தொடங்கினன். "கல் கத்தாவில் என்னல் இருக்கவே முடியவில்லை. யாரிடமும் சொல்லாமல் ஸ்டேஷனிற்டி வந்து முதல் வகுப்பு டிக்கெட் வாங்கி விட்டேன். இதற்கு என்ன காரணம் என்று எனக்கே பெரியவில்லை" என்று கூறி விட்டு பாயுஸ்டர் நாற்காலியை அருகில் இழுத்துப் போட்டு உட்கார்ந்து கொண்டார். பிறகு தீளமாக பிரசங்கம் செய்ய ஆரம்பித்து விட்டார். ஆனல் சரோஜினி இரண்டொரு வார்த்தைகளுக்கு மேல் பேசவில்லை.

ஒரு பத்து நிமிஷம் கழித்து சதீஷ் மௌனமாக எழுந்து போவதைக் கண்டு ஷஷாங்க மோகன் அவன் பக்கம் திரும்பினன். பிறகு சரோஜினியிடம் மெதுவாக, "இவரை எங்கோ பார்த்திருக்கிறேன். நன்ருக ஞாபகமில்லையே" என்ருன்.

"எங்கே பார்த்தோம் என்று நீங்களே சொல்லுங்கள்" என்ருள் சரோஜினி.

சிறிது நேரம் கழித்து ஜகத்தாரணி, சதீஷை சாப்பாட்டிற்கு அழைத்து வரும்படி ஆள் அனுப்பினள். ஆனல் சதீஷ் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் போய் விட்டான் என்பது தெரிய வந்தது.

அதற்கப்புறம் இரண்டு மூன்று நாட்கள் சதீஷ் இவர்கள் வீட்டுப் பக்கம் வராமல் போகவே ஜகத்தாரணி அதிக வருத்தமடைந்தாள். மகனைத் தனியாக அழைத்து, "சஷாங்கன் இன்னும் எவ்வளவு நாளைக்கு இங்கு இருக்கப் போகிருன்? அவனுக்கு இங்கு ஒரு வேலையும் கிடையாதென்பதை அவனிடம் சொல்லி விடுவதற்கென்ன!" என்ருள்.

ஜோதிஷ் தனது தாயாரின் உத்தரவை எவ்வாறு நிறைவேற்றினன் என்பது நமக்குத் தெரியாது. ஆனல் சஷாங்கனே புறப்படும் போது இனிமேல் இங்கு வருவதில் பிரயோஜனமில்லை என்பதைத் தெரிந்து கொண்டான். அந்த பாக்கியம் சதீஷுக்குத்தான் கிட்டுமென்பதையும் நன்கு உணர்ந்தான்.

பாரிஸ்டரின் முகம் வெளுத்துப் போய் விட்டது. இருந்தாலும் அதைச் சாமர்த்தியமாக சமாளித்துக் கொண்டான் புறப்படும் பொழுது அவன் சரோஜினியை சந்திக்கக்கூட முயற்சிக்கவில்லை.

ரயிலில் உட்கார்ந்து கொண்டு விடை பெற்றுக் கொள்ளும் பொழுது ஜோதிஷிடம் "சதீஷ்

பாபு டாக்டருக்குப் படித்துக் கொண்டிருந்ததே படிப்பு முடிந்ததா" என்றான்.

ஜோதிஷ் தலையை அசைத்துக் கொண்டு "முடியவில்லை! போலிருக்கிறது. கொஞ்ச நாள்தான் ஏதோ ஒரு ஹோமியோபதிக் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தான்" என்றான்.

"ஓ! ஹோமியோபதிக் பள்ளிக்கூடத்திலா!" என்று கூறிவிட்டு சஷாங்கமோஹன் மறுபடியும் சதீஷைப்பற்றி ஒன்றும் பேசாமல் வண்டி புறப்படும் வரையில் வேறு எதை எதையோ பேசிக் கொண்டிருந்தான்.

அவனை வழியனுப்பி விட்டு ஜோதிஷ் மிகுந்த துக்கத்துடன் திரும்பி வந்தான். வழி நெடுகிலும் நிராசையடைந்த காதலைப் பற்றியும் சமூகத்தின் மூடப் பழக்க வழக்கங்களைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டே வந்தான்.

அத்தியாயம் முப்பத்தெட்டு

ஜகத்தாரிணியினுடைய தமையனுக்கு உடம்புக்குக் குணமில்லை எனத் தந்தி கிடைத்ததும் ஜகத்தாரிணி உடனே ஷாந்திபூருக்குப் புறப்பட்டு விட்டாள். இதனால் சதீஷிடம் விவாகத்தைப் பற்றி தெரிவிக்கச் சந்தர்ப்பம் இல்லாமற் போய் விட்டது. இன்று அவனுக்கு நன்கு விருந்து வைத்துக் கலியாணத்தைப் பற்றிப் பேசலாமெனக் கணக்குப் பிள்ளையை சதீஷைக் கூட்டி வரும்படி அனுப்பி வைத்தாள். ஆனால் இதற்கிடையில் எதிர்பாராமல் இப்படி நேர்ந்து விட்டது. யார் வரலாகாது என எண்ணியிருந்தாளோ அந்தச் சஷாங்க மோகனே காலை ரயிலில் திடீரென வந்து சேர்ந்தான். இதனால் அவள் அளவு கடந்த கோபமடைந்தாள். மனிதன் தான் விரும்பும் வஸ்துவை அடைவதற்கு முன் தடைகள் ஏற்பட்டால் எதைக் கண்டாலும் அவனுக்குச் சந்தேகம் ஏற்படும். இதனால்தான் சரோஜி வெளியில் வருவதைப் பார்த்ததும் அவளுக்கு சஷாங்க மோகன் இங்கு வருவது சரோஜினிக்கு இஷ்டம்போலும் என எண்ணிக் கொண்டாள். தனது மகன் பேரில் எப்போதும் இவளுக்குப் பூரண நம்பிக்கை கிடையாது. உண்மையில் அவன் மேல் ஒன்றும் குற்றம் சாட்ட முடியாது.

பெண்ணைத் திட்டி விட்டு, சமையல் அறைக்குச் சென்று சாமான்களை எடுத்து வைக்கும்படி வேலைக்காரிக்கு உத்திரவிட்டுவிட்டு குளிப்பதற்குச் சென்றாள். பிறகு திரும்பி வந்து சரோஜினியைப் பார்த்ததும் அவள் கண்ணையே அவள் நம்ப முடியவில்லை. தாயாருக்கு முன் சரோஜினி குளித்து வெண்பட்டுப் புடவையைக் கட்டிக்கொண்டு காய் நறுக்கிக் கொண்டிருந்தாள். வேலைக்காரி அருகில் உட்கார்ந்து சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

ஜகத்தாரிணி சிறிது நேரம் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு "பிராமணப் பெண்ணுக்கு இதைவிட வேறு என்ன அழகு தரப் போகிறது? அம்மா, இதற்கு முன் எப்போதும் உன்னைப் பார்த்து நான் இவ்வளவு ஆனந்தம் அடைந்ததில்லை" என்றாள்.

சரோஜினி வெட்கத்தால் தலை குனிந்து கொண்டிருந்தாள். தாயார் அவளைப் பார்த்து "என க்கு எல்லாம் தெரியும் அம்மா, தெரியும்! அவன் எவ்வளவுதான் பாஸ் செய்திருந்தாலும் நான் அவனைக் குரங்கு என்றுதான் சொல்வேன். அவனை யார் வர வழைத்தாலும் சரி, என் உயிரு ள்ள வரையிலும் அதொன்றும் நடக்காது" என்றாள்.

சிறிது கழித்து "சிறு பிராயத் தில் போதிக்கப்படும் கல்வியை அனுசரித்துத்தான் மனது பக்கு வப் படும் என்று ஜோதிஷ் சொல் கிறான். அதை நான் ஒத்துக் கொள்ள மாட்டேன். ஹேட் சூட் போட்டுக் கொள்ளாதவன் உபயோகமற்றவன் என்று எந்த சாஸ்திரத்தில் சொல்லியிருக்கி றது?" என்றாள்.

ஹேட், சூட்டைப் பற்றி சாஸ் திரத்தில் எழுதியிருப்பதும் எழு தாதிருப்பதும் சரோஜினிக்குத் தெரியாது. அவள் தலை குனிந்த படியே மௌனமாக இருந்தாள்.

சாமான்களை எல்லாம் தயார் செய்து கொண்டு ஜகத்தாரிணி சமையல் செய்ய உட்கார்ந்தாள். பிறகு "நான் எண்ணியிருப்பது போல நடந்து விட்டால் எவ்வ ளவோ நல்லது" என்றாள்.

சரோஜினி தாயார் கூறுவதைக் கேட்பதற்குத் தயாராக இருந் தாள். ஆனால் ஜகத்தாரிணி ஒன் றும் கூறாமல் மௌனமாக சமை யல் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தாள். சஷாங்கனி டம் தான் அன்பு கொண்டிருப்ப தாகத் தவறாகத் தாயார் எண்ணிக் கொண்டிருப்பதை போக்க முயற்சித்திருக்கலாம். ஆனால் முன் கோபக் காரியான ஜகத்தாரிணி முன் இதைப் பற்றிப் பிரஸ்தாபிக் கவே சரோஜினிக்குத் துணிவு உண்டாகவில்லை. பத்து மணிக் குக் கணக்குப் பிள்ளை எங்கிரு ந்தோ ஒரு பெரிய மீனை வாங்கிக் கொண்டு வந்தான். ஜகத்தாரிணி சமையல் அறையிலிருந்து மீனை எட்டிப் பார்த்தாள். பார்த்ததும் மிகுந்த சந்தோஷத்துடன் "சபாஷ், ரொம்ப நல்ல மீன்தான். ஆனால்......"

அதற்குள் சரோஜினி "சதீஷ் பாபு வருவதற்கு இன்னும் நேரம் ஆகும், அம்மா! இப்போது மணி பத்துத்தானே ஆகிறது" என்றாள்.

ஜகத்தாரிணி புன்முறுவலுடன் "மணி ஆகிவிட்டது என்று நான் சொல்லவில்லை. இன்று ஏகாதசி ஆச்சே. நான் கையால்கூட மீனைத் தொடமாட்டேனே! உனக்குச் சமைக்கத் தெரியுமா?'! என்றாள்.

வேலைக்காரி வெளியில் போன தும் சரோஜினி "உனக்குத் திரு ப்தியானால் நான் சமைக்கத் தயார்" என்றாள்.

ஜகத்தாரிணி ஆச்சரியத்துடன் "உனக்குச் சமைக்கத்தெரியுமா?" என்றாள்.

"நீ சமைக்கச் சொல்லு. நான் சமைக்கிறேனா இல்லையா பார்" என்றாள்.

இவ்வளவு பெரிய மீன் சமைக் கத் தெரியாதவர்கள் கையில் கெட் டுப் போய்விடும் என்ற பயத் தால் வேலைக்காரி "வேண்டாம். அப்படிச் செய்யக் கூடாது. கெட்டுப்போய் விட்டால் என்ன செய்வது?" என்றாள்.

ஜகத்தாரிணி "சதீஷ் நமக்கு அந்நியனல்ல, நம் வீட்டுப்பையன் தான். சுகேஷி நீ போய் மீனைக் கழுவிக் கொண்டுவா. சரி,

அம்மா, நீ ஒரு காரியம் செய். பட்டுப்புடவை கட்டியிருப்பதால் பரவாயில்லே. இன்று உனது வித்யாப்யாசம் ஆரம்ப மாகட்டும். இன்றிலிருந்து நீ எப்போதும் மீன் சமைத்துக் கொண்டிரு என்று ஆசீர்வதிக்கிறேன்'' என்ருள்.

இந்த ஆசீர்வாதத்தைக் கேட்டு சரோஜினி தலே குனிந்து கொண்டாள். சிறிது நேரத்திற்கப்புறம் தாயாரிடம் ஏதோ கேட்பதற்கு சமையலறைக்கு வந்த ஜோதிஷ் ஆச்சரியத்தால் திடுக்கிட்டுப் போனன் ''யாரம்மா, சரோஜினியா சமைப்பது?'' என்ருன்.

தாயார் சிரித்துக் கொண்டு, ''ஏன் உனக்கு அடையாளம் தெரியவில்லேயா?'' என்ருள்.

''தெரியவில்லேப் போலத்தான் இருக்கிறது அம்மா! நிஜமாகவே இவள் சமைக்கிருளா? அல்லது நீ அவளேக் கட்டாயப் படுத்திச் சமைக்க வைத்திருக்கிருயா?'' என்ருன்.

''சமைப்பதற்கு ஹிந்து பெண்ணுக்குச் சொல்லியா கொடுக்க வேண்டும்? நாங்கள் பிறக்கும் முன்பே கற்றுக் கொண்டு வருகிருேம். ஆனல்.........''

''ஆனல் என்ன?''

மகனேத் தனியாக அழைத்துப் போய் ''அவள் சமைத்தது என்ருல் சதீஷ் சாப்பிடாமலாபோய் விடுவான்? பின் எதற்காகப் பயப்பட வேண்டும்?'' என்ருள்.

ஜோதிஷ் பலமாகச் சிரிக்கவே சரோஜினி நிமிர்ந்து பார்த்தாள். ஜோதிஷ் ''அம்மா, நீ சதீஷை மனு, பராசரர் என்று நினேக்கிருயா?'' என்ருன்.

''என்னமோ அப்பா, அவன் உங்களெல்லோரையும்விட நன்ருக இருக்கிருன்''

''என்ன நன்ருக இருக்கிருர்? அன்று இரவு சரோஜினி சமைத்துப் போட்டிருக்கா விட்டால் பட்டினி கிடந்திருப்பான்''

தாயார் அளவற்ற ஆனந்தத்துடன் ''எப்போது எப்போது?'' என்ருள்.

ஜோதிஷ், தாயாருக்கு அன்று இரவு நடந்த விபரமனேத்தையும் விரிவாகச் சொன்னுன். இதைக் கேட்டு புளகாங்கித மடைந்து, ''மகராசியாக இரு அம்மா நான் என்னவெல்லாமோ நினேத்துத் தடுமாறிக் கொண்டிருக்கிறேன். நீ பேசாமலேயே இருக்கிருயே'' என்ருள்.

ஜோதிஷ் புன் முறுவலுடன் ''நீ மனதிற்குள்ளாகவே நினேத்து தடுமாறிக் கொண்டிருப்பது அவளுக்கு எப்படித் தெரியும்? ஆனல் அன்று என்னல் சாப்பிட முடியவில்லே. இன்று சாப்பிட்டு விட்டுச் சொல்கிறேன்'' என்று கூறி விட்டு ஜோதிஷ் போய் விட்டான்.

வெட்கத்துடன் தலே குனிந்து கொண்டிருந்த மகளேப் பார்த்து ''ஏன் வெட்கமடைகிருய்? மிகவும் நெருங்கிய ஒருவருக்குச் சமைத்துப் போடுவதைவிட ஒரு பெண்ணுக்கு வேறு என்னவேண்டும்? நான் போய் பூஜை செய்துவிட்டு வருகிறேன்'' என்று கூறி விட்டு வெளியில் சென்று விட்டாள்.

பகல் வெகு நேரமாகியும் சதீஷ் வரவில்லே. வராததிற்குக் காரணமும் யாரிடமும் சொல்லிவிடவில்லே; நாள் முழுதும் ஜகத்தாரிணி எதிர்பார்த்துக் கொண்டிருந்

தாள். சாயங்காலம் ஜோதிஷிடம் "அவனுக்கு உடம்புக்குச் சரியில்லையோ என்னவோ! நீ ஏன் ஒரு ஆளை அனுப்பி பார்த்து வரச் சொல்லக்கூடாது?" என்றாள்.

ஜோதிஷ் அவள் கூறியதைப் பொருட்படுத்தாமல் "யாரை அவ்வளவு தூரம் அனுப்புவது அம்மா?" என்றான்.

ஜகத்தாரிணி ஆச்சரியத்துடன் "ஏன், வேலைக்காரனை அனுப்பி வைக்கக் கூடாதா?" என்றாள்.

"எதற்கு அம்மா?"

"ஜோதிஷ், நீ பேசுவது எனக்கு விளங்க வில்லை. அவளுக்கு ஒரு வேளை உடம்புக்குச் சரியில்லையோ என்னவோ, நமக்குத் தெரிய வேண்டாமா?"

"அது நமக்கு அவசியம் தெரிந்தாக வேண்டுமா? அவர் நமக்குப் பந்துவுமல்ல. நல்ல நண்பரும் அல்ல. அவரைப் பற்றி அவ்வளவு தூரம் கவலைப்படுவது எனக்குப் பிடிக்க வில்லை" என்று கூறி விட்டு ஜோதிஷ் வெளியில் போய் விட்டான்.

தன் மகன் சதீஷைப் பற்றி அவ்வாறு கூறியதைக் கேட்டு ஜகத்தாரிணி திகிலடைந்து விட்டாள்.

இதற்குள் சதீஷ் அந்நியனாகி விட்டானா! அது அவளுக்கு சகிக்க முடியாமலிருந்தது. அவள் அங்கேயே பதுமை போல நின்று கொண்டிருந்தாள்.

மெதுவாக மேல் மாடிக்குச் சென்று தான் படுத்துக் கொண்டு சரோஜினியை அழைத்து வரும்படி சொன்னாள். சரோஜினி அறைக்குள் வந்ததும் அவள் முகத்தைப் பார்த்து மேலும் திகைப்படைந்தாள். சரோஜினியின் முகம் ஒரே அடியாகக் கறுத்துப் போயிருந்தது. சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டு "சரோஜினி, சதீஷ் ஏன் வரவில்லை? உனக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"தெரியாது" என்று சரோஜினி பதில் அளித்தாள்.

இந்தப் பதிலைக் கேட்டதும் அவள் எழுந்து உட்கார்ந்து கொண்டு "தெரியா விட்டால் ஆள் அனுப்பி ஏன் அறிந்து வரக் கூடாது? இதெல்லாம் நான்தான் சொல்ல வேண்டுமா?" என்றாள்.

சரோஜினி மெதுவாக "ஆள் அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை என்று அண்ணா சொல்லி விட்டான்" என்றாள்.

"ஏன் அவசிய மில்லாமல் போயிற்று, இது எனக்குத் தெரிய வேண்டும். போய் வேலைக்காரனை அனுப்பு"

"அவன் இல்லை அம்மா. உபேந்திர அண்ணாவுக்குத் தந்தி கொடுப்பதற்காக அவனை தபாலாபீசிற்கு அண்ணா அனுப்பியிருக்கிறான்";

"உபேந்திர பாபுக்கா! திடீரென அவனுக்கு எதற்காகத் தந்தி?"

"அம்மா, எனக்கு ஒன்றும் விபரமாகத் தெரியாது. அண்ணாவையே கேட்டுக் கொள்" என்று கூறி விட்டு சரோஜினி எழுந்து போய் விட்டாள். அவள் போனதும் ஜகத்தாரிணி மனதில் ஒரு சந்தேகம் உதித்தது. சதீஷை வராமல் தடுத்திருக்கிறார்கள் என்று நம்பினாள். இதற்கு என்ன காரணம்? இதை அவளிடம்கூற விரும்ப வில்லை போலும்! இருந்

தாலும் என்னமோ முக்கிய காரணம் இருக்கக்கூடும். இந்தக் கெட்ட புத்திக்கு முக்கிய காரணம் சஷாங்கமோகன் என்பதில் அவளுக்குத் துளியும் சந்தேகமில்லை. எவ்வளவு முக்கியமான காரணமாக இருந்தாலும் மகளும் மகனும் அவளுக்குத் தெரியாமல் சதீஷை வரவொட்டாமல் தடுத்திருக்கிறார்கள். இவ்வாறு எண்ணவே அவளுக்கு அளவு கடந்த கோபம் உண்டாயிற்று.

அவள் உடனே சுகேஷி மூலம் ஜோதிஷைக் கூப்பிட்டு அவனிடம் "நீ சதீஷை வராமல் தடுத்தாயா?" என்றாள்.

ஜோதிஷ் ஆச்சரியத்துடன் "இல்லையே! இப்படி யார் உன்னிடம் சொன்னது?" என்றான்.

"சதீஷ் சம்பந்தமாக நீ உபேந்திரனுக்குத் தந்தி அடித்திருக்கிறாயா?"

"ஆமாம்"

"ஏன்? சதீஷ், என்ன செய்து விட்டான்?"

ஜோதிஷ் சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டு "அவன் செய்தது என்னமாகவோ இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் அது உண்மையானால் நாம் அவனிடம் சம்பந்தமே வைத்துக் கொள்ளக் கூடாது" என்றான்.

"உனக்கு இது யார் சொன்னது சஷாங்க மோகனா? அவன் துஷ்டன், அற்பன். அவன் கூறுவதை நான் எள்ளத்தனையும் நம்ப மாட்டேன்"

"நான் நம்புகிறேன். அவன் கூறியதில் பாதி உண்மையாக இருந்தாலும் அவன் நிழல்கூட நம்மீது விழக்கூடாது"

ஜோதிஷின் கோபத்தைக்கண்டு ஜகத்தாரிணி சிறிது பொறுமையுடன் "சரி, என்னிடத்தில் ஏன் உள்ளதைச் சொல்லக்கூடாது? அப்பா! என்ன நடந்தது? அவன் நிழலைக் கண்டுகூட நாம் அருசைப் படுவதற்கு அவன் என்ன எங்காவது கன்னம் வைத்து விட்டு ஓடி வந்து விட்டானா? அல்லது யாரையாவது கொலை செய்து விட்டு ஓடி வந்து விட்டானா? வயது வந்த பையன். மனக் கோளாறினால் ஏதாவது சிறு தப்பு செய்திருப்பான். எத்தனை பேர் தவறுவதில்லை, அப்புறம் திருந்துவது இல்லை?" என்றாள்.

"இல்லை அம்மா! அந்தக் குற்றத்தை மன்னிக்கவே முடியாதே. யார் மன்னித்தாலும் சரோஜினி மன்னிக்க மாட்டாளே. இதை உன்னிடம் நிச்சயமாகக் கூறுவேன்"

ஜகத்தாரிணி சிறிது யோசனை செய்து விட்டு "சரி, என்ன குற்றம் செய்தான். அதைத்தான் சொல்லு கேட்கிறேன்" என்றாள்.

"நாளை சொல்கிறேன் அம்மா உபேந்திரன் கடிதம் வருமுன். அதைப் பற்றிப் பேசுவதில் பிரயோசனமில்லை" என்று கூறி விட்டு ஜோதிஷ் அப்புறம் போய் விட்டான்.

இவ்வளவு நேரம் வரையிலுமாவது சுய நினைவுடன் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தாள். ஆனால் மகன் போனவுடன் உணர்ச்சி இழந்தவள்போல படுத்துக் கொண்டாள். சிறிது நேரம் கழித்து "ஆண்டவா! இந்தக் கலியுகத்தில் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் யாரையுமே நீ படைக்கவில்லை!" என்றாள்.

சதீஷைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போது எத்த

னேயோ விஷயங்களை ஊகித்துக் கொண்டாள். அதோடு கணவனை நினைத்துக் கொண்டும் கண்ணீர் விட்டாள்.

இரவு மகளை அழைத்து வரும்படி சுகேஷியை அனுப்பினுள். ஆனல் அவள் திரும்பி வந்து சரோஜினி தூங்கி விட்டதாகக் கூறினுள்.

ஜகத்தாரிணி இரு கரங்களாலும் தலையில் மோதிக் கொண்டு இந்த விஷயத்தைக் கேட்ட பிறகும் கவலையின்றித் தூங்கினுளானல், அப்போது அவள் சதீஷை விட அந்தக் குரங்கைத்தான் அதிகமாக விரும்புகிருள்" என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள். மகளிடம் அவளுக்கு உண்டான கோபத்திற்கு அளவேயில்லை.

அடுத்த நாள் மூன்று மணி சுமாருக்கு சதீஷ் சைக்கிளை வெளியில் வைத்து விட்டு வீட்டிற்குள் பிரவேசித்தான்.

சதீஷின் வாடிய முகம் அனைவருடைய திருஷ்டியையும் கவர்ந்தது. சரோஜினி நிமிர்ந்து பார்த்தாள். ஆனல் ஒன்றும் பேசவில்லை.

"உங்களுக்கு உடம்புக்குச் சரியில்லையா, சதீஷ்பாபு?" என்றுன் ஜோதிஷ்.

சதீஷ் புன்முறுவலுடன் "இல்லை" என்றுன்.

அதற்கப்புறம் யாரும் ஒன்றும் பேசவில்லை. இதைக் கண்டு சதீஷ் ஆச்சரியமடைந்தான். தான் வந்ததும் வராததுமாய் விதவிதமான குற்றச்சாட்டுகள் சாட்டுவார்கள் என்று எண்ணிக் கொண்டு வந்தான். அதனல் தான் அவன் வீட்டிற்குள் நுழையும் போதே "நான் நேற்றய குற்றத்திற்காக முதலில் அம்மாவிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். அதற்கப்புறம் தான் மறு வேலை" என்று சொல்லிக்கொண்டு வந்தான்.

இது வரையிலும் சதீஷையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த சஷாங்க மோகன் "அம்மா, தூங்கிக் கொண்டிருப்பார்கள். இவ்வளவு அவசரமாக அம்மாவை எழுப்பி மன்னிப்பு வாங்க வேண்டியதில்லை. சிறிது உட்காருங்கள். உங்களிடம் சில விஷயம் பேச வேண்டும்" என்றுன்.

அவன் பேசிய விதத்தைக் கண்டு சதீஷ் வியப்படைந்தான்.

"என்னிடமா? என்ன விஷயம்?" என்றுன்.

"கூறுமலும் இருக்க முடியவில்லை" என்றுன். பிறகு ஜோதிஷ்பாபுவைச் சுட்டிக் காண்பித்து "நான் இவளுடைய நெருங்கிய உறவினன் என்பது உங்களுக்கு நன்கு தெரியும். வேண்டாம் ஜோதிஷ்பாபு எழுந்து போகாதீர்கள். நீங்கள் எழுந்து போன பிறகு எதற்காகப் பேச வேண்டும்? உங்கள் முன்னல்தான்கூற விரும்புகிறேன். நீங்கள் இருவரும் உட்காருங்கள்" என்று சொல்லி விட்டு சரோஜினியைக் கடைக் கண்ணல் பார்த்தான். ஆனல் தலை குனிந்து உட்கார்ந்து கொண்டிருந்த சரோஜினி இதைக் கவனிக்கவில்லை.

சஷாங்கமோகன் எதிரில் இருந்த மேஜை மீது கையை ஊன்றிக் கொண்டு "நான் நேசிப்பவர்களை எப்போதும் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொண்டிருப்பேன். இது எனது சுபாவம். இதனல் நேற்று இவருடைய ரகசியங்களைக் கேட்டு வருத்தமடைந்

தேன். சதீஷ்பாபு தன்னந்தனியாக வசிப்பதற்குக் காரணம் தெரிந்தாக வேண்டும். நீங்கள் ஒரு வேளை கோபமடையலாம் சதீஷ்பாபு. ஆனாலும் எனது இயற்கைக்கு மாருக என்னல் நடக்க முடியாது. என்ன சொல்கிறீர்கள் சதீஷ்பாபு?'' என்ருன்.

ஜோதிஷ்பாபு தலை குனிந்தபடி உட்கார்ந்து கொண்டிருந்தான். சதீஷும் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இந்த மௌனத்தில் சஷாங்க மோகனுடைய வேகமும் தடைபட்டது. ''ஜோதிஷ், எனது நெருங்கிய பந்து. ஆகையால் உங்களிடம் சில கேள்விகள் கேட்க எனக்கு உரிமை உண்டு. உங்களுக்குத் தெரியுமல்ல.........''

சதீஷ் ''தெரியாது. நீங்கள் உறவினர் என்பது எனக்குத் தெரியாது. நீங்கள் என்ன கேட்கிறீர்கள்?'' என்ருன்.

''நீங்கள் இங்கு எதற்காக வருகிறீர்கள்? இது எனக்குத் தெரிய வேண்டும்!''

''நீங்கள் இன்னும் ஏதாவது கேட்க விரும்புகிறீர்களா?''

ஜோதிஷின் முகத்தைப் பார்த்துக் கொண்டு ''சதீஷ்பாபு, கல்கத்தாவை விட்டு வந்து விட்டதால் எனக்கு எவ்வளவு சிரமமாயிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா? ராகால்பாபுவை உங்களுக்குத் தெரியுமா? அவர் சொன்னர்.....''

சதீஷின் இரு கண்களும் இரத்தம் போலச் சிவந்தன ''ராகால்பாபு தொலையட்டும்! நீங்கள் உங்கள் விஷயத்தைக் கூறுங்கள்'' என்ருன்.

இந்தத் தடவை ஜோதிஷ் தலை நிமிர்ந்து ''சதீஷ், என் வேண்டுகோளின்பேரில்தான் சஷாங்கன் உங்களிடம் இவைகளைக் கேட்கிருர். உங்களுக்கு இஷ்டமில்லாவிட்டால் பதிலளிக்க வேண்டாம். அதற்காக அவரை அவமரியாதை செய்யாதீர்கள். எங்களிடம் நீங்கள் நடந்து கொண்டதிற்கு உங்களிடம் ஒன்றுமே கேட்க வேண்டியதில்லை. ஆனாலும் அம்மாவுக்காக உங்களைக் கேட்க வேண்டியிருக்கிறது. சரி, நானே கேட்கிறேன். சாவித்திரி என்பது யார்? அவளுடன் உங்களுக்கு என்ன சம்பந்தம்?'' என்ருன்.

சதீஷ் சிறிது நேரம் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு ''சாவித்திரி யாரென்பது எனக்குத் தெரியாது ஜோதிஷ்பாபு. அவளுடன் எனக்கு என்ன சம்பந்தம் என்பதை தெரிவிக்க வேண்டியது அவசியமில்லை என நான் நினைக்கிறேன்'' என்ருன்.

''ஏன்?''

''சொன்னல் உங்களுக்குப் புரியாது''

''எப்படியானலும் எங்களுக்கு அவசியம் தெரிந்தாக வேண்டும். சரி, அவளை எங்கு அழைத்து வந்து வைத்திருக்கிறீர்கள்?''

சதீஷ் மிகுந்த கோபத்துடன் ஜோதிஷைப் பார்த்துக்கொண்டு ''ஜோதிஷ்பாபு, நான் உங்களிடம் எப்போதும் நெருங்கிய உறவு கொண்டாட முயன்றதில்லை. வீணுக வாதங்கள் செய்வதும் எனக்குப் பிடிக்கவில்லை. விஷயம் என்ன என்பதை நான் புரிந்து கொண்டேன். ஆகையால் உங்களுக்குத் தெரிய வேண்டிய அளவு கூறுகிறேன். சாவித்திரி

எங்கு போனுள் என்பது எனக்குத் தெரியாது. உங்களுக்கு இது எதற்காகத் தெரிய வேண்டும்? இந்த விஷயங்கள் முற்றிலும் உங்களுக்குத் தேவையில்லை. சாவித்திரி யாராயிருந்தாலும் சரி. அவளாக என்னை விட்டுப் போகாமலிருந்திருந்தால் நான் உயிருள்ள வரையிலும் அவளைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொள்வேன். இதை உங்கள் முன்னுல் மட்டும் அல்ல, இந்த உலகத்து முன்னுலே சொல்லுவேன். இதற்காக நான் துளிகூட வெட்கமடைய மாட்டேன். இனி நீங்கள் ஒன்றும் கேட்க வேண்டி இருக்காது என்று நினைக்கிறேன். இருந்தாலும் நான் பதில் அளிக்க மாட்டேன்'' என்ருன்.

சதீஷ் இவ்வாறு தெளிவாகப் பேசியதைக் கேட்டு அனைவரும் திகைப்படைந்தார்கள். வெகு நேரத்திற்கப்புறம் ஜோதிஷ் ''இல்லை, உங்களிடம் இனி ஒன்றும் கேட்க வேண்டியதில்லை. வேறு ஏதாவது தெரிய வேண்டியிருந்தாலும், உபேந்திரபாபு கடிதத்தில் வெளியாகி விடும்'' என்று கூறிவிட்டு உறையிலிருந்த தந்தியை எடுத்து சதீஷிற்கு முன் எறிந்தான்.

''உபேந்திர அண்ணுவின் கடிதமா? எங்கே பார்க்கலாம்'' என்று கூறிக் கொண்டு கடிதத்தை எடுத்தான். கடிதம் முழுதும் படித்து விட்டு அவன் ஒன்றும் பேசவில்லை. அதற்கப்புறம், ''அனைத்தும் உண்மைதான். எனது உபேந்திர அண்ணு எப்போதும் பொய் பேசமாட்டார். உண்மையிலேயே நான் நல்ல மனிதன் அல்ல, என்னிடம் யாரும் சம்பந்தம் வைத்துக் கொள்ளத் தகாது தான். நானே இதைப்பற்றி யோசித்திருக்கிறேன். அதனுல் தான் இந்தக் காட்டிற்கு ஒரு நாள் ஓடி வந்து விட்டேன்'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவனது தொண்டை அடைத்துக் கொண்டது. யாரும் ஒன்றும் பேசவில்லை. சதீஷும் மௌனமாக இருந்து கொண்டான்.

நேற்று ஜகத்தாரிணியின் அழைப்புக் கிடைத்தபோது எத்தனை எண்ணங்கள் தோன்றின! சரோஜினியின் அன்பைப்பெற அவனது உள்ளம் துடித்தது. ஆனுல் இப்போது அது ஞாபகத்திலில்லை. ஆனுலும் அது உள்ளத்தின் ஆழத்தில் புதைந்திருக்க வேண்டும். இம்மாதிரி ஏன் நிகழ வேண்டும்? இந்த அமுதம் எந்தக் கடலில் கடைந்து எடுத்தது? நான் விரோதிகளுக்கு மத்தியில் இந்த அமிர்தத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வேன்? இந்தப் பொங்கும் கடலை எவ்வாறு ஆற்றுவேன்? இந்த எண்ணம் இத்தனை நாளாக என்னை ஏன் வாட்டுகிறது? பெண்ணின் மனத்தை வசப்படுத்துவது ஒரு தனிக் கலை என்பது சாவித்திரியைத் தேடும்போது தெரிய வந்தது. அதோடு அவளுடன் ஈடுபடுவதும் ஒரு தனிக்கலைதான் வசப்படுத்துவதற்குச் செய்யும் முயற்சிகளெல்லாம் ஆண், பெண்ணின் மனதில் ரகசியமாக இருக்கிறது. இது வெளியார்களுக்குத் தெரியாது. வெளியார்கள் சாஸ்திரத்தையும் உலக வழக்கத்தையும் வைத்துக் கொண்டு குதிப்பார்கள். அவர்கள் அவசியம் அப்படிச் செய்ய வேண்டியிருக்கிறது. சரோஜினியை அடைய வேண்டும் என்ற அவா அவன் உள்ளத்தில் எழுந்திரா விட்டால் அவன் மனது ஏன் இவ்வளவு துன்பமடைய வேண்டும்?

(தொடரும்)

சோகக் கதைகள்

[ரா. நா]

சோகக் கதைகளைப் படிப்பதிலும், கேட்பதிலும், நாடகங்களைப் பார்ப்பதிலும் தனி இன்பம் இருக்கிறது. ஹரிச்சந்திர நாடகம், பிரஹலாத சரித்திரம், துருவ நாடகம் முதலியவற்றைப் பன்முறை பார்த்து, உள்ளமுருகி கண்ணீர் வடித்த பிறகும் பன்முறை பார்க்க விரும்புகிறோம்.

ஹரிச்சந்திர நாடகத்தில் மயானகாண்டத்தில் லோகிதாஸன் சடலத்தை குச்சியால் ஹரிச்சந்திரன் தள்ளி அது கண்டு சகியாமல் சந்திரமதி உள்ளம் வெடித்துப் புலம்பும் சோகக் காட்சியை எத்தனை தரம் பார்த்திருக்கிறோம். இன்னும் எத்தனை தடவை பார்க்க விரும்புகிறோம்? கோவலன் சிற்றின்ப வாழ்க்கையில் சிக்குண்டு, மாதவியின் மையலில் மயங்கி, விழித்தெழுந்து கண்ணகியை நாடிச் சென்று வறுமையால் வாடி, சொல்லொணாத் துயரம் அனுபவித்து கடைசியில் தன் உயிரையே இழக்கும் கட்டத்தை எத்தனை தடவை பார்த்துப் பரதவித்திருக்கிறோம், இன்னும் பார்க்க விரும்புகிறோம்?

அழுவதில், துயரப்படுவதில் நாம் ஆனந்தம் கொள்வதன் காரணம் என்ன?

ஹரிச்சந்திரன் ஒரு லட்சியத்திற்காக தெரிந்து தியாகம் செய்கிறான். அதே மாதிரி தியாகம் செய்வதற்கு நாம் தயாரா யில்லாமலிருக்கலாம். ஆனல் அப்படித் தியாகம் செய்வது கஷ்டமாயிருப்பதும் சாத்தியம். நாம்செய்யமுடியாத ஒரு தியாகத்தை மற்றொருவன் சுலுவில் செய்வதைப் பார்த்தவுடன் நம் மனம் மகிழ்ச்சியடைகிறது, கண்ணில் நீர் பெருகினாலும்.

கோவலன் தன் தர்ம பத்தினியை மறந்து விலைமாதர் வலையில் சிக்குண்டு விடுகிறான். வினைப்பயன் அவனை விடவில்லை. விழிப்படைந்தவுடன் பழைய தீய வாழ்க்கையை விட்டு மனைவியுடன் புனிதமாக இல்லறம் நடத்த வருகிறான். ஆனல் விழிப்படையுமுன் அவன் தனமெல்லாம் விரயமாகிறது. புது வாழ்க்கையில் கஷ்டமேற்படுகிறது. அநியாயமான பழி வந்து சேருகிறது. திருட்டுக் குற்றம் சாட்டப்படுகிறது. எல்லாக் கஷ்டங்களையும் உறுதியுடன் அனுபவிக்கிறான். மனைவிக்காக மனமுருகுகிறான். நாமும் உருகுகிறோம். கோவலனின் பழைய வாழ்க்கையை மறந்து விடுகிறோம். அதற்காக அவன் பிராயச்சித்தம் செய்கிறான். அச்சமயம் அவனுக்கு நாம் அனுதாபத்தை அள்ளிக் கொடுக்கிறோம்.

மற்றொரு விதமான சோகக் கதைகள் இருக்கின்றன. அமரர் கு. ப. ராவின் "விடியுமா" எனும் கதையை விமர்சகர்கள் யாவரும் ஒரே மாதிரியாகப் புகழ்கிறார்கள்.

அன்னியோன்யமாக வாழ்ந்துவந்த கணவன் மனைவி. கணவன் நோயுற்று ஆஸ்பத்திரியில் கிடக்கிறான். அயலூரிலிருக்கும் மனைவி ஓடோடியும் தன் கணவனைப் பார்ப்பதற்கு வருகிறாள். ஆனால் கணவன் இறந்து விடுகிறான். பொழுது விடிகிறது. ஆனால் மனதுக்கு விடியவில்லை.

இன்னொரு கதை வேறொரு ஆசிரியருடையது. ஏழைக் குடும்பத்தில் பிறந்து ஒரு பாபமும் அறியாச் சிறுவன் வீட்டிற்குவேண்டியன கொண்டுவர நதியைத் தாண்டி அக்கரை செல்லுகிறான். திரும்பி வரும் பொழுது மழையும் புயலும் அடிக்கிறது. இருட்டி விடுகிறது. மரப்பாலத்தில் நடந்து நதியைக் கடக்கையில் பாலம் முறிந்து விழுந்து விடுகிறது. பையன் உயிர் துறக்கிறான்.

சமீபத்தில் படித்த மற்றொரு கதை. மூன்று நாள் பட்டினியாயிருந்து குழந்தைகளுக்கு அன்னமளிக்கிறாள் தாய். ஒரு நாள் தான் பட்டினியாயிருந்து தாயைச் சாப்பிடும்படி வற்புறுத்துகிறான் மகன். தர்க்கம் செய்து விட்டுப் பிறகு சாப்பிடுகிறாள். மறு நாள் கிளம்புகிறாள் தாய் உணவுதேட. திரும்பி வரத் தாமதம் ஆகிறது. ஆனால் உணவு — சிறந்த உணவு கிடைக்கிறது. ஆனால் வீடு வந்து சேருவதற்குள் மகன் இறந்து விடுகிறான். தாய் அடித்துக் கொண்டு அழுகிறாள்.

பிந்திய மூன்று கதைகளில் நிகழ்ந்த சம்பவங்கள் இயற்கையாக நடக்கக் கூடியவைகள். அவைகளைப் படிக்கையில் கண்ணீர் விடுகிறோம் என்பது வாஸ்தவம். ஆனால் ஹரிச்சந்திரன் கோவலன் நாடகங்களைப் பார்க்கையில் ஏற்படும் மன எழுச்சி பிந்திய கதைகளைப் படிக்கையில் ஏற்படுகிறது. முதல் கதைகளைப் படிக்கையில் மனம் வேதனைப் படவில்லை. சகிக்க முடியாத வேதனை ஏற்படுகிறது பிந்திய கதைகளைப் படிக்கையில். அவைகளை மறுமுறை படிக்க மனம் ஓடவில்லை.

ஒரு பாவமும் அறியாதவர்கள் கஷ்டத்திற்காளாவதைப் பார்த்தால் மனம் சங்கடப் படுகிறது. சிருஷ்டி கர்த்தா மீது கோபம் ஏற்படுகிறது என்பது வாஸ்தவம். ஆனால் இன்பமோ மன எழுச்சியோ ஏற்படுவதில்லை.

எழுத்தாளர்கள் பின்கூறப் பட்ட மாதிரி சோகக் கதைகளை எழுதி வாசகர்களை பயனில்லா சோகத்தில் ஆழ்த்த வேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

கடிதக் கதை:

ய்யாக்கியின் கடிதம்

[ர. சி. டேவிட்]

ரங்கூன்,

31—8—45

அன்புள்ள ஷிங்கியோ,

நாம் இருவரும் வெகு காலமாக ஒன்ருகவே கடமை ஆற்றி வந்துள்ளோம். நாம் எவ்வளவு அன்னியோன்யமாகப் பழகினலும் சிற்சில சமயங்களில் நாம் வேறுபட்டு, பின் கூடி இருக்கிருேம். நாம் கொரியாவில் கடமையாற்றும் காலத்தில் ரங்கூன் வீழ்ச்சி அடைந்ததையும், நம்மவர் ஆதிக்கம் அங்கு ஓங்கினதையும் முன்னிட்டு ஓர் வெற்றி தினம் கொண்டாடினேம். அன்று நான் மட்டும் வாட்டமுற்றிருந்ததைப் பற்றி நீ காரணம் தெரியாமல் சந்தேகித்தாய். என்னைப் பர்மா முனைக்கு மாற்றுமாறு மேல் அதிகாரிகளுக்கு நான் செய்த விண்ணப்பங்களை எல்லாம் நீ கிழித்தெறிந்தாய். சகல சௌகரியங்களுடன் இருந்தும் நான் என் ஓர் சோக நாடகத்தைக் கண்டு ரசிப்பவன் போல் துக்கத்தில் ஆழ்ந்திருக்க வேண்டுமென்பதை அறிய ஆவலுற்ருய். வாய்விட்டும் கேட்டாய். ஆனல் நானே எல்லாவற்றிற்கும் மௌனம் சாதித்தேன். அன்று நான் உன்னிடத்தில் எதை மறைத்தேனே, எதை உன்னிடம் சொல்லாமல் மூடி வைத்தேனே அதையே இன்று நான் உனக்கு எழுதியுள்ளேன், இக்கடிதத்தின் வாயிலாக. அதுவே என் வாழ்க்கைச் சரித்திரத்தின் "சுவர்க்க வாழ்க்கை" என்னும் தலைப்புள்ள ஒரு அத்தியாயம்.

பல ஆண்டுகளுக்கு முன் நான் ரங்கூனில் வியாபாரம் செய்து வந்தேன். அக்காலத்தில் வியாபாரத் தொழில் அதிக மந்த நிலையில் இருந்து வந்தது. நானும் ஜவுளி மூட்டையைச் சுமந்து ஊர் ஊராகச் சுற்றி வியாபாரம் செய்து வந்தேன். நாட்டுப்புறங்களிலுள்ள எளிய மலாய் ஜனங்களிடையே என் வாழ்கை கழிந்து வந்தது. அவர்களின் சொற்ப ஊதியத்திற்குத் தக்கவாறு என்னிடம் வியாபாரம் செய்து வந்தார்கள். ஆதலால் நானும் பெருத்த லாபம் அடைய வழியின்றி எளிய வாழ்கை நடத்தி வந்தேன்.

எனக்கென்று சொந்தமான ஓர் இருப்பிடம் இருந்ததில்லை. சோறு கண்ட இடம் சுகம் என்பது போல் வாய்த்த இடத்தில் தங்கி விடுவேன். அவ்வெளிய ஜனங்கள் எனக்குச் செய்யும் உபகாரங்களுக்குக் கைமாருக அவர்களுக்குப் புடவை ஏதேனும் கொடுத்து என் கடனைக் கழித்து விடுவேன். இச்சிறு உதவிக்குப் பணம் வாங்குதல் பாவம் என்று அவர்கள் சாட்டுச் சொல்வார்கள். இப்படியே என் ஜீவ வாழ்க்கை நாடகம் நடந்துவந்தது.

"அஜ்ஜி" (மலாய் வாசிகள் கொண்டாடும் ஒரு பண்டிகை)

பெருநாளுக்குச் சில தினங்களுக்கு முன் ரங்கூனுக்குச் சில மைல்களுக்கப்பால் உள்ள ஒரு கிராமத்தின் சிறு தெரு வழியாக "ஜவுளி ஜவுளி" என்று உரக்கக் கூவிக் கொண்டு போனேன். மாலை நாலுமணி இருக்கும். ஒரு சிறு குடிசையிலிருந்து ஓர் பெண் என்னைக் கூப்பிட்டாள். ஆம்! அவளும் ஓர் மலாய்ப் பெண்தான். வயது நாற்பத்தைந்துக்குக் குறைவிராது. என் ஜவுளிகளைப் பார்க்க விரும்புவதாகச் சொன்னாள். ஜவுளி மூட்டையை இறக்கி மூட்டையை அவிழ்த்துக் காண்பித்தேன். கண்ணைக் கவரும் பட்டுப் புடவை ஒன்றை எடுத்து "இது நல்ல புடவை" என்று தோன்றிய படி ஏதேதோ வர்ணித்தேன். அப்புடவையை விற்ருல் எனக்கு நாலைந்து வெள்ளி லாபம் உண்டு. ஆனல் அந்தப் பெண் அதை வாங்கத் தகுதி இல்லை என்பது போல் என்னைப் பார்த்தாள். அவள் கரம் ஓர் சேலையை எடுத்தது. நாவு அதன் விலையை வினவிற்று. அதற்குள் வாசலில் தொங்க விட்டிருந்த திரைக்கப்பாலிருந்து ஓர் இனிய குரல் பட்டுப்புடவையைத் தருமாறு கேட்டது. அவள்தான் ஜுபேதா; என்னை அழைத்த பெண்ணின் மகள். எனது வாழ்கைத் துணைவி, அழகின் உருவம். இன்று என் சோகத்தின் சிகரம். சரி கதையைக் கேள்.

ஜுபேதா தன் தாயாரைப் பார்த்து "அம்மா! இது நல்ல புடவை. அழகிய நிறம்" என்ருள்.

"ஆம்! ஆனல் அதை உனக்கு வாங்கிக் கொடுக்கும் நிலைமை எனக்கில்லையே" என்று பெருமூச்சு விட்டாள் அவள் தாயார்.

இவ்வளவுடன் அவர்கள் சம்பாஷணை நின்று விட்டது. தாயின்

நிலைமையை அறிந்த மகள் மௌனம் சாதித்தாள். சமூகக் கட்டுப்பாட்டின்படி ஜுபேதா திரை மறைவிலேயே நின்றுள். தாய் எடுத்த மலிந்த சேலையைத் திரைக்கப்பால் நீட்டி அவளுக்குப் பிடிக்குமா வென்று வினவினள்.

உண்மையில் நான் காண்பித்த பட்டுப் புடவையைக் கண்ட ஜுபேதாவுக்கு இது பிடிக்காது. என்றுலும் நிலைமையை உத்தேசித்துத் தாயை சமாதானப் படுத்துவதற்காகவோ என்னவோ " இதுவும் நன்றுகத்தான் இருக்கிறது" என்று ஒப்புக் கொண்டாள். விலையும் சொன்னேன். புடவையை வாங்கிக் கொண்டு அதன் கிரயத்தைக் கொடுத்தார்கள். எளிய குடும்பமாக இருந்தாலும் கொஞ்சம் தாராள மனசு உடையவர்கள். என்னுடன் பேரம் பேச வரவில்லை. நான் சொன்ன விலையைக் கொடுத்து விட்டார்கள். நான் மூட்டையைக் கட்டிக்கொண்டு புறப்பட்டேன்.

மப்பும் மந்தாரமுமாக இருந்த வானம், மழை வருவதை எச்சரித்தது. நான் வெளியே புறப்பட்ட சமயம் பெரிய மழை வந்து விட்டது. "சற்றுப் பொறுத்துப் போகலாம்; கனத்த மழை வரும் போலிருக்கிறது" என்று அந்த வீட்டு அம்மாள் சொன்னுள்.

மூட்டையை இறக்கி வைத்து சற்று அங்கேயே உட்கார்ந்திருந்தேன். மணி ஆறுகி இருளும் மூண்டுவிட்டது. மழை விட்ட பாடில்லை. அதற்குள் தாய் மகளை அழைத்து எனக்கும் சேர்த்துச் சமைக்கச் சொன்னுள். நான் எவ்வளவோ கேட்டுக் கொண்டும் அவர்கள் என்னை விட்டபாடில்லை.

அன்றிரவுதான் முதல் முதல் நான் அங்கு தங்கினேன். எனக்கு அதிக மரியாதைகள் நடந்தன. தங்களால் இயன்ற உதவி செய்வதில் அவர்கள் பின்வாங்கவில்லை. நானும் அவர்கள் குடும்ப வரலாறுகளைத் தாய் சொல்ல வெகு நேரம் வரை கேட்டுக்கொண்டிருந்தேன்.

ஜுபேதாவின் தகப்பன் ஓர் ரப்பர் தோட்டத்தில் உத்தியோகம் வகித்தாராம். அவருக்கு நல்ல வருமானம் இருந்ததாம், குடியிலும், அபினிலுமே தன் வருமானத்தை யெல்லாம் செலவழித்து விட்டு திடீரென்று ஒரு நாள் மாரடைப்பால் காலமானுராம். அவர் சாகும் போது தாயின் சாமர்த்தியத்தால் நூறு வெள்ளிகள் மட்டும் கையிருப்பிலிருந்ததாம். அதைக் கொண்டு தகப்பனின் அந்திய கிரியைகளை முடித்துக் கொண்டு மூன்று வருஷங்களுக்கு முன் இந்தக் குடிசைக்குக் குடி வந்தார்களாம்.

ஜுபேதா தையல் தொழில் தெரிந்தவள். அவள் தைத்துக் கொடுக்கும் துணிகளை வாடிக்கையாக ஓர் வியாபாரிக்கு விற்று அதனுல் கிடைக்கும் பணத்தைக் கொண்டு கஷ்ட ஜீவனம் செய்து வந்தார்கள். இவர்களின் துக்ககரமான சரித்திரத்தைக் கேட்ட எனக்கு அவர்கள் மேல் இரக்கம் உண்டானது. என்னுல் இயன்ற உதவியைச் செய்வதாக வாக்களித்தேன். அதோடு அன்று முதல் ஜுபேதாவின் தையல் வேலைகளை யெல்லாம் நானே வாங்குவதாக ஒப்புக் கொண்டேன். மறுநாட் காலையில் எழுந்து தேநீர் பருகி விட்டுப் புறப்படுமுன் மூட்டையை அவிழ்த்து முதல் நாள் நான் காண்பித்த அதே பட்டுப் புடவையை எடுத்து ஜுபேதாவுக்குப் பரிசாகக் கொடுக்கும்படி கொடுத்து விட்டு, அவளுடைய

தையல் வேலைகளை எனக்கே விற்க வேண்டுமென்று முன் பணமாகப் பதினைந்து வெள்ளியும் கொடுத்து விட்டுப் போய் விட்டேன்.

அது முதல் வாரம் ஒரு முறை நான் அக்குடிசையை நோக்கிப் போவேன். ஜுபேதா தைத்து வைத்திருக்கும், மேசைத்துணி, படுக்கை விரிப்பு, பூ வேலைகள் அமைந்த ஜன்னல் திரை முதலிய வைகளைப் பணம் கொடுத்து வாங்குவேன். புதுவிதமான ஆர்டர்களும் கொடுப்பேன்.

ஒருநாள் வழக்கத்துக்கு மாருக திரை விலகிற்று. ஜுபேதா நேரில் என்னுடன் உரையாடினாள். என் மனக்கண் முன் நின்ற திரையும் விலகிற்று. நான் அநேக நாட்களாக ஆவலுடன் காண்பதற்காகக் காத்திருந்த அவ்வுருவம் தங்கப் பதுமை போல் என் முன் நின்றது. அவள் அழகிய முகத்தையும், கரிய விழிகளையும் கண்டுகளித்தேன். உண்மையில் நான் அவள் மேல் காதல் கொண்டேன். அவள் தன் தாய்க்குச் சற்று உடல் நிலை குணமில்லையென்று சொன்னாள். அதோடு ஒரு அழகிய சித்திரத்தை என்னிடம் காண்பித்து அதைத் தைப்பதற்கு வெவ்வேறு நிறங்களில் நூல் வேண்டுமென்று சொன்னாள். அவள் எழிலைக் கண்டு கிளர்ச்சியுற்ற என் கண்கள் மட்டும் வேலை செய்ததேயல்லாமல் செவிகள் வேலை செய்ததாகத் தெரியவில்லை. நான் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

கடைசியாக "என்ன விளங்கினதா?" என்றாள். நான் கனவிலிருந்து விழித்தவன் போல் திடுக்கிட்டு "ஆம். விளங்குகிறது. அதற்கு என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?" என்றேன். அவள் சிரித்துக் கொண்டு, "நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம். இந்த நிறங்களில் நூல் வாங்கி வாருங்கள் மிகுதியை நான் செய்து கொள்கிறேன்" என்று வினயமாகச் சொன்னாள். என் மனம் அவளை நாடினது. என் கால்கள் அவ்விடத்தை விட்டகல மறுத்தன. ஆனால் அங்கு தங்குவதற்கும் காரணங்கள் ஒன்றுமில்லை. பாழாய்ப்போன மழையும் அன்று வரவில்லை.

இரண்டு நாட்கள் கழித்து நான் எதிர்பார்த்த வண்ணம் ஜுபேதா வாசலில் நின்று கொண்டிருந்தாள். அவள் கண்களில் நீர் நிரம்பி வடிந்து கொண்டிருந்தது. என்னைக் கண்டதும் தன் தாயின் அபாயகரமான நிலைமையை என்னிடம் சொன்னாள். நான் உள்ளே சென்று பார்த்தேன். நான் பயந்தே போனேன். தாய்க்கு உடம்பு கவலைக்கிடமான நிலைமையிலிருந்தது. உடனே அருகாமையிலிருந்த ஓர் சீன வைத்தியரை அழைத்து வந்து காண்பித்தேன். அவர் பார்த்துவிட்டு "காப்பாற்றுவது கஷ்டம்தான்" என்று சொல்லி ஒரு மருந்து கொடுத்துப் போனார். அன்றிரவு அங்கேயே தங்குமாறு ஜுபேதா கேட்டுக் கொண்டாள். அவளுக்குத் துணையாகவும், ஜுரத்தினால் உளறிக்கொண்டிருக்கும் தாய்க்கு நேரத்துக்கு நேரம் மருந்து கொடுப்பதற்காகவும் அங்கு தங்கி விட்டேன்.

நடுநிசி வரை நாற்காலியிலிருந்தவாறு ஏதோ பொருள் சுற்றி வந்த ஒரு பழைய பத்திரிகையை பார்த்துக் கொண்டிருந்தேன். அதற்கு மேல் அப்படியே மேசையில் சாய்ந்து தூங்கி விட்டேன். காலை மூன்று மணியளவில் யாரோ

என்னைத் தட்டி எழுப்பினார்கள். வேறு யாருமில்லை ஜுபேதாதான். அவள் தாயார் என்னைப் பார்க்க விரும்புவதாகச் சொன்னாள். நான் எழுந்து நோயாளியின் படுக்கையருகில் சென்றேன். அவள் கெஞ்சிய பான்மையாய் என்னையும், ஜுபேதாவையும் மாறி மாறிப் பார்த்தாள். ஏதோ சொல்ல எத்தனித்தாள்; ஆனால் வார்த்தை வாயைவிட்டு வரவில்லை. அதிகக் கஷ்டப்பட்டு "ஜுபேதா ......நீ...காப்பாற்று. பாவம்...... அவள்...... அனாதை" என்றாள். பிறகு ஜுபேதாவைப் பார்த்து ஏதேதோ சொன்னாள். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஜுபேதாவைத் தன் இரு கரங்களாலும் கட்டி யணைத்துக் கொண்டாள். நான் ஜுபேதாவைக் கைவிட மாட்டேன் என்று வாக்களித்தேன். அதன்மேல், அவள் உயிர் அவள் உடலை விட் டகன்றது.

ஜுபேதா அனாதையானாள். என்னைத்தவிர அவளை அறிந்தவர்கள் யாவருமிருந்ததாகத் தெரியவில்லை. அவளை விட்டகலவும் இயலாத நிலை எனக்கு ஏற்பட்டு விட்டதுபற்றி சந்தோஷமடைந்தேன். மறுநாள் நாங்கள் இருவரும் கணவனும் மனைவியுமானோம்.

என்னிடமிருந்த சொற்ப பணத்தைக் கொண்டு ரங்கூனில் ஒரு சிறு வீடு வாங்கினேன். அதில் இருவரும் குடியேறினோம். ஜுபேதாவின் அதிர்ஷ்டமோ, என்னவோ? எனக்கு ஓர் சீனி மில்லில் வேலையுமாயிற்று. எங்கள் வாழ்க்கைப் படகு குதூகலமாக ஓடியது.

ஆரம்பத்தில் எனக்கு ஐம்பது வெள்ளி சம்பளம் கிடைத்தது. நான் அதிகப் பிரயாசையுடனும், உண்மையுடனும் கடமை யாற்றினேன். மானேஜர் என் பிரயாசையைக் கண்டு என் சம்பளத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்தினார். ஒரு வருஷத்துக்குள் என் சம்பளம் எழுபத்தைந்தாகி விட்டது. நல்ல செல்வாக்கும் ஏற்பட்டது. மாலைப் பொழுதில் நானும் ஜுபேதாவும் உலாவப் போவோம். நாடகம், நடனம், சினிமா முதலியவைகளைப் பார்ப்பதில் ஜுபேதாவுக்கு அதிக விருப்ப முண்டு. கூண்டில் அடைபட்டுக் கிடந்த பறவை, வெளியில் தப்பி குதூகலமாகப் பறந்து திரிவது போல் ஜுபேதாவின் வாழ்க்கையும் மறுமலர்ச்சியடைந்தது. தான் ஒரு மலாய் மங்கை என்பதைக்கூட மறந்து விட்டாள்.

ஒரு நொடியில் ஒரு வருடம் பறந்து சென்றது. ஜுபேதா கர்ப்பம் தரித்து ஓர் அழகிய ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அவனுக்குப் பெயர் வைப்பதில் எங்கள் இருவருக்குள்ளும் ஒரு சிறு வாக்குவாதம் உண்டாயிற்று. ஆனால் அவள் இனிய வார்த்தைகளாலும், நடத்தையாலும் என்னை வென்று விட்டாள். கடைசியாக அவள் இஷ்டப்படியே அவள் பாட்டன் பேரை அக்குழந்தைக் கிட்டோம். எங்கள் வாழ் நாட்களிலேயே இந்த ஒரே ஒரு முறை மட்டும் நாங்கள் சிறிது வேறு பட்டோம். ஆனால் நீரில் குமிழி போல் அது உடனே மறைந்து விட்டது.

சிறிது சிறிதாக எங்கள் செல்வத்தையும் செல்வாக்கையும் உயர்த்தினோம். அக்கம் பக்கங்களிலுள்ள நிலங்களை வாங்கி ஓர் அழகான சிறிய பங்களாவாக மாற்றி ஓர் பூந்தோட்டத்தோடு அழகு

பெறச்செய்தோம். என் மகனைக் கவனித்துக்கொள்ள ஓர் பையனை நியமித்தோம். காலச் சக்கரம் எங்கள் சார்பாகவே சுழன்றது. எல்லாம் சந்தோஷமாகவே நடந்தது. எங்கள் புதல்வனின் மூன்றும் பிறந்த நாளையும் அதி விமர்சையாகக் கொண்டாடினேம். அக்காலத்தில் மேல் நாட்டில் யுத்தம் கொந்தளித்துக் கொண்டிருந்தது. அது அநேகம் பேரை மறைமுகமாகத் தாக்கினது. ஆனல் எங்கள் வாழ்கைப் படகிற்கு சற்று விலகியே நின்றது.

இக்கொண்டாட்டத்துக் கடுத்த மூன்றும்நாள் மாலை என் செல்வச் சிறுவனை ஓர் தள்ளு வண்டியில் வைத்து என் பங்களாவைச் சுற்றித் தள்ளிக் கொண்டிருந்தேன். வழக்கம் போல் தபால்காரன் கடிதங்களைக் கொண்டு வந்தான். ஜப்பானிய ஐக்கிய சங்கத்திலிருந்து எனக்கு ஓர் கடிதம் இருந்தது. நானும் ஓர் அங்கத்தினன்தான். அதில் கீழ்வருமாறு எழுதியிருந்தது:-

“இம்மாதம் 20-ம் தேதி ரங்கூனிலிருந்து “அசாமா மாரு” புறப்படுகிறது. தடையின்றி அதில் புறப்பட்டுத் தாய்நாடு செல்லவும். எல்லா ஜப்பானியரையும் தாய்நாடு எதிர்பார்க்கிறது. தயவு செய்து சுற்றுப் புரங்களிலுள்ள தோழர்களுக்கும் தெரியப் படுத்தவும்.”

ஒரு நொடியில் எனக்கு விஷயம் விளங்கி விட்டது. இது நாங்கள் எதிர்பார்த்திருந்ததே. ஆனல் என் ஜுபேதா? என் மகன்? எனக்கு நிலை கொள்ளவில்லை. அப்படியே புற்றரையில் அமர்ந்து விட்டேன். பிறகு சிறிது திடங்கொண்டு என் மகனைத் தூக்கி மார்புடன் அணைத்து முத்தமிட்டேன். நாளை ஒரே ஒரு தினம் தான் எங்கள் மத்தியிலிருக்கிறது. கூடியவரை சமாளித்துக்கொண்டு அன்றிரவைக் கழித்தேன். அளவுக்கு மீறிய அன்பு பாராட்டுவதைக் கண்டு ஜுபேதா ஆச்சரியப்பட்டாள். பாவம்...அவள்... அனதை. ஆனல் என் இதய கமலத்தை விட்டு மட்டும் அகல மாட்டாள்.

மறுநாட் காலையில் தொழிற் சாலைக்குச் சென்றேன். உடன் நோட்டீஸ் சமர்ப்பித்தேன். என் கணக்கு வழக்குகளைத் தீர்த்துக் கொண்டு வீடு திரும்பி விட்டேன். நான் தொழிலிலிருந்த வாறே போய்விட்டால் அது என் மனைவி, மகனைப் பாதிக்குமென்றே இப்படிச் செய்தேன். ஆனல் நான் இன்னும் ஓர் முடிவுக்கு வரவில்லை. வழக்கத்துக்கு மாருக நான் அன்று நேரத்தோடு வீடு திரும்பியதைக் கண்டு ஜுபேதா கேள்விகள் கேட்டாள். நான் லீவெடுத்துக்கொண்டு வந்ததாகச் சொல்லி விட்டேன். வீடும் வாசலும் அவள் பேரிலேயே இருந்தன. மறுநாட் காலையில் 5 மணிக்குக் கப்பல் புறப்படுகிறது. அன்றிரவு வெகு நேரம் வரை ஜுபேதாவுடன் பேசிக் கொண்டிருந்தேன். மகனை வளர்ப்ப தெப்படி? திடீரென்று கிழக்கில் யுத்தம் உதித்தால் சமாளிப்ப தெப்படி? என்றெல்லாம் ஆலோசித்தோம். நான் எவ்வளவோ உணர்ச்சியுடன் பேசினேன். அவளோ, “கவலைப் படாதீர்கள், வரும்பொழுது பார்த்துக் கொள்வோ” மென்று என்னை சமாதானப் படுத்தி விட்டுத் தூங்கி விட்டாள். என் கண்கள் மட்டும் மூடவே இல்லை. கண்ணீர் தாரை தாரையாக ஒடித் தலையணையை நனைத்தது. மனதில் எண்ண அலைகள்

ஒன்றன் பின் ஒன்ருகத் தோன்றி மறைந்தன. என்னை ஜுபேதாவுடன் சம்பந்தப்படுத்தின அந் நாளைச் சபித்தேன். என் முட்டாள்த் தனத்தை அறிந்தேன். முட்டாள்த் தனமா? இல்லை. இல்லை விதி. யாரிடம் சொல்வது? நான் ஜுபேதாவுடனும், என் அருமைக் கண்மணியுடனுமிருப்பதா? அல்லது தாய்நாட்டை, என்னை ஈன்ற அன்னையை அடைவதா? இது என்ன புதிர். ஆம்! இன்று நான் என் காதலியுடன் இன்புற்றிருக்கிறேன். இது நிரந்தர இன்பம். இவ்வின்ப வாழ்வுக்குக் கால நியமனமில்லை. நாளை ஜப்பானிய யுத்த விமானம் மேற்கு நோக்கிப் பறக்குமானல் சந்தேகமில்லாமல் என்னை என் அன்பர்களிடமிருந்து பிரித்து விடுவார்கள். யுத்தக் கைதி யென்று அழைக்கப் படுவேன். அன்று நான் என் அன்னையையும் இழந்து என் காதலியையும் இழக்க நேரிடும். ஆதலால் உடனே என் அன்னையை அடைந்து அவளுக்குத் தொண்டு செய்வதுமேல். இவ்வாறு ஒரு முடிவுக்கு வந்தேன். ஜுபேதாவுக்கு ஓர் நெடிய கடிதம் எழுத உத்தேசித்தேன். ஆனல் அதை அவளுக்கு வாசித்துச் சொல்வார் யார்? என்னிடத்திலுள்ள பணத்தையெல்லாம் எடுத்து ஓர் பொட்டணமாகக் கட்டி மேசை மேல் வைத்தேன். எனக்குத் தெரிந்த சில ஆங்கிலச் சொற்களால் ஒரு சிறு கடிதம் எழுதி மேசை மேல் வைத்தேன். கடிதத்தில் விஷயத்தை சுருக்கமாக விவரித்திருந்தேன். என் அருமைப் புதல்வனை யணுகி அவன் கன்னங்களில் முத்தமிட்டேன்.

என் கண்களில் தேங்கி நின்ற கண்ணீர், அவன் முகத்தில் வடிந்தது. அதை மெதுவாகத் துடைத்தேன். தூக்கத்திலேயே, என்னை அன்பாக வழி அனுப்புவது போல் நகைத்தான். அதைக் கண்டு என் மனதைத் தேற்றிக் கொண்டு ஜுபேதாவைப் பார்த்தேன். அவள் அலங்கோலமாகப் படுத்திருந்தாள். மெதுவாக அவள் கேசத்தை ஒதுக்கி அவள் அழகைக் கண்ணாரப் பருகினேன். ஆனல் கண்ணீர் அவளைக் காண வொட்டாது மறைத்தது. மெதுவாக அவள் கரத்தை முத்தமிட்டேன்.



கோபுரத்தின் மணி மூன்று தரம் அடித்து ஓய்ந்தது. இன்னும் இரண்டு மணி நேரம்தான் இருக்கிறது. அவளை விட்டகன்றேன். வாசலில் நின்று திரும்பிப் பார்த்து விட்டு வாசலைவிட்டுத் திடமாக மனதைக் கடினப் படுத்திக்கொண்டு மெதுவாக நடந்தேன். வாசலில் தொங்க விட்டு மேலே தூக்கி விடப்பட்டிருந்த திரை, அன்று அக்குடிசை வாயிலில் நான் ஜுபேதாவைக் கண்ணாரக் கண்டு களிக்கும்படி ஒதுக்கப்பட்ட திரை, என் அருமை ஜுபேதாவின் மெல்லிய கரங்களால் அலங்கரிக்கப்பட்ட திரை, இன்று திரும்பவும் காற்றில் லேசாக அசைந்தது! என் மனத்திலும் ஓர் திரை படிந்தது போல் இருந்தது. அந்தோ! சில நிமிஷங்களில் நான் துறைமுகத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தேன்.

மூன்ரும் நாள் டோக்கியோ சேர்ந்தேன். பிறகு நாம் இருவரும் ஒன்ருகவே கடமை ஆற்றி வந்தோம். நேற்று அதிகாரிகளுடைய அனுமதியும்கூட இல்லாமல் தந்திரமாக ஓர் அமெரிக்க விமானத்துள் சென்று அவ்விமான மூலமாக இங்கு வந்து சேர்ந்தேன். நான் உன்னிடம் கூடச்

சொல்லவில்லை. என் மனம் ரங் கூனை நாடி இருந்தது. சரணுகதி யடைந்து விசாரணை நடப்பதற்கு முன் திரும்பவும் என் காதலி யையும், மகனையும் கண்டு கொள்ள வேண்டுமென்ற ஆவ லால் உன்னிடம் சொல்லாமல் வந்தேன்.

இன்று காலை என் சிறு பங்க ளாவைப் பார்க்கப் போனேன். அங்கு குட்டிச் சுவர்தான் இருந் தது. நான்கு வருஷங்களுக்கு முன் அமுதை அள்ளி ஊட்டின அந்தஇல்லம் இன்று என்கண்ணில் பாஷாணத்தை பார்ப்பது போல் பட்டது. முன்புறத்தில் ஓர் பக்கத்தில் மட்டும் கொஞ்சம் கூரை நீட்டிக் கொண்டிருந்தது. அதன் நிழலில் ஒரு சொறி நிறைந்த நாயும், இடது கை முறிந்த பையனும் படுத்திருந்தார் கள். சில ஜனங்கள் இங்கும் அங்கும் நடமாடிக் கொண்டிருந் தார்கள். ஆனல் அவ்வீட்டாரின் சரித்திரத்தைச் சொல்ல எனக்கு ஒருவருமில்லை. சோர்ந்த மனத் துடன் அவ்விடத்தை விட்டுத் திரும்பினேன். தெருவிலிருந்து ஓர் பையன் "லாஹீர்! லாஹீர்! இங்குவா இதோ ரொட்டி உனக் கும் தாரேன்" என்ருன். நான் திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தேன்.

கூரையின் அடியில் படுத்திருந்த பிச்சைக்காரச் சிறுவன் எழுந்து ஓடிப்போய்த் தன் தோழன் தந்த ரொட்டித் துண்டை அவாவுடன் வாங்கித் தின்ருன். நான் மெது வாக அவனை அணுகி என்னுடன் வருமாறு அழைத்தேன். என்னைக் கண்டு நடுங்கி ஓட எத்தனித்தான். ஆனல் நான் விடவில்லை. அவனை நிறுத்துவதற்காக ஒருவெள்ளியை அவனிடம் நீட்டி, "தம்பீ என் னுடன் வா, உனக்கு ரொம்பத் தின்பண்டம் தாரேன்" என்று அழைத்துச் சென்றேன். நான் கொடுக்கும் கடிதத்தைத் தபாலில் சேர்த்து விட்டால் நான் அவ னுக்கு வெள்ளி தருவதாகச் சொன்னேன். பையன் அரை மனதோடு என்னுடன் வரச் சம்மதித்தான். அவனை அழைத் துக்கொண்டு நான் தங்கியிருந்த ஹோட்டலுக்குப் போய் இக் கடிதத்தை உனக்கு எழுதினேன்.

என் ஆசை நிராசையாகி விட்டது. நான் ஆவலுடன் எதிர்பார்த்த தொன்றும் இங்கு நடக்கவில்லை. இனி என் ஜீவன் இவ்வுலகிலிருந் தும் பிரயோஜனமில்லை. நான் அப்பொழுதே அமெரிக்க குண் டுக்கு ஆளாகாமல் போனதுக் காக இன்று வருந்துகிறேன். இதோ, இவ்வறையில் இம்மேசை மேல் என் உயிரைக் கவர்ந்து செல்ல யமன் கைக்குண்டு உரு வெடுத்து நிற்கிருன். என் கை நடுங்குகிறது. என் மனம் துடிக் கிறது. என் பெரு மூச்சின் சத்தம் இதோ மூலையிலிருந்து ஆவ லுடன் பலகாரம் தின்னும் இச் சிறுவனுக்குத்தான் கேட்கும்.

"தம்பி நீ யார்? உன் கை என் இப்படியாயிற்று?" என்று அவன் சிற்றுண்டி முடியும் வரை என் நேரம் போவதற்காகக் கேட்டு வைத்தேன்.

"அது போன மாசம் ஒருநாள் நானும் என் அம்மாவும், தூங்கும் போது ஜப்பான்காரன் குண்டு போட்டான். நல்ல வேளையாக நான் பிழைத்துக் கொண்டேன். அம்மா செத்துப் போனுள். நான் படுத்திருக்கலே, அதுதான் எங்க வீடு. நிஜமா ஜப்பான் காரன்னு எனக்குப் பிடிக்காது. நீங்கன்னு ரொம்ப நல்லவுங்க", என்ருன்.

"உன் அப்பா எங்கே?" என்றேன் நான்.

"எனக்கு அப்பா இல்லேண்ணு அம்மா சொன்னு. அவரு எங்கேயோ போயிட்டாராம். ஜப்பான் காரன் வந்தா அப்பாவும் வருவாருண்ணு சொல்லுவா." என்ருன் சிறுவன்.

பையனின் சிற்றுண்டியும் முடிந்தது. நேரமாகிறது. இனி நான் ஜீவித்திருக்கலாகாது. அமெரிக்க விமானியைக் கொன்று அவ் விமானத்தை நான் இங்கு கொண்டு வந்த இரகசியம் இன்னேரம் வெளியாகி இருக்கும். நாளை அமெரிக்கத் துப்பாக்கி என்னை இவ்வுலகிலிருந்து பிரிக்கத் தயாராகும். என் அன்பு, ஆசைக்கிளி ஜுபேதா மட்டும் இருந்திருந்தால் இன்னேரம் நான் வந்த விமானம் ஓர் அன்னிய தேசத்தை நோக்கிப் பறந்து கொண்டிருக்கும். அப்பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை. விதி யாரை விட்டது?

இவ்வனைதைச் சிறுவனின் பிற்காலவாழ்விற்கு வேண்டிய பொருளுதவியும் செய்து, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் உத்திரவாதத்துடன் ஹோட்டல் மானேஜர் மூலம் செய்துள்ளேன். இக் கடிதம் தபாற் பெட்டியை அடையுமுன் என் ஜீவன் என் சரீரத்தை விட்டுப் பிரிந்துவிடும்.

இதுவே நான் உனக்கு எழுதும் கடைசிக் கடிதம். உனக்கும் உன் மனைவிக்கும் என் நன்றி.

இப்படிக்கு
உன் அன்புள்ள நண்பன்
மியாகி

குறிப்பு:-

நீ என்னை மறந்து விட்டாலும் சரி, ஆனல் இவ்விடத்தில் கையை இழந்த சிறுவனை! ஆம். லாஹீரை, கை விட்டுவிடாதே. அவனே என் செல்வம்; என் வாரிசு.

உன் அன்பு மறவாத
மியாகி.

சுவாமி சுத்தானந்த பாரதி

அத்தியாயம் பதினெட்டு
தோகியோ கப்பலில்

எந்த நாட்டிலும் நல்லதும் பொல்லதும் நல்லவரும் தீயரும் உண்டு; ஆளும் செருக்கால் ஆசிய – ஆப்பிரிக்கக் கண்டங்களை, அடிமை செய்யும் வெள்ளையரிடையே, ஆசிய ஞானத்தைத் தேடி வரும் வெள்ளறிஞரும் இருக்கிறார்கள். இந்தியரை மட்டமானவர் என்று படங் காட்டிப் பழிக்கும் மேனாட்டாரிடை, கீதையும், குறளும் உபநிடதமும் தந்த வேத நாடு என்று இந்தியாவைப் புகழும் மேதாவிகளும் உண்டு. அத்தகைய – இந்திய அபிமானிகள் ஜெங்கின்ஸ் தம்பதிகள்: விவேகானந்தரை ஆதரித்த ஸேவியர் தம்பதிகள் போன்றோர் இவரும். விவேகானந்தரின் சிகாகோ பிரசங்கத்தை இவர்கள் நேரே கேட்டதுண்டு; அதுமுதல் இந்திய வேதாந்தத்தில் இவர்கள் ஈடுபட்டார்கள். சுவாமி ராமதீர்த்தரின் வாக்கமுதை அள்ளிப் பருகினார்கள். ஜெங்கின்ஸ் தம்பதிகள் கலிபோர்னியா சர்வகலாசாலையில் வேலை பார்த்து ஓய்வு கொண்டவர்கள். ஸ்ரீ ஜெங்கின்ஸ் எஞ்சிநீரிங் புலவர்; ஸ்ரீமதி ஜெங்கின்ஸ் இசைப் புலவர். இவர்களுக்கு ஒரே மகள் இருந்து தவறிப் போனது. பிறகு குழந்தை பிறக்கவில்லை. தமக்குப் போதிய செல்வத்திரளை பாங்கில் போட்டுவிட்டு, இருவரும் உலகைச் சுற்றுவதும், மகான்களைக் காண்பதும் ஞானவிசாரம் செய்வதுமானார்கள். இவர்களுக்குத் தமிழ்மணியிடம் கவர்ச்சி யுண்டானது; மணியைத் தமது மகன் போல நேசித்தனர். வாணியை மகள் போல நேசித்தனர். வாணி, இளம் விதவை, சுதந்திரமாகக் கலைப்பணி செய்வதைக் கண்டு, இந்திய விதவைகளைப் பற்றிச் சில வெள்ளைக்காரர் கட்டிவிடும் பொய்க் கதைகளைப் பதரென ஒதுக்கினர். மனம் பொருந்தினால் இனம் பொருந்தும். நாடு நிற சாதி மத வேறுபாடுகளெல்லாம் மன வேறுபாடுகளே. அத்துடன் நாகாஷிமாவின் இணையற்ற நட்புரிமையும் சேர்ந்தது. எல்லோரும் ஒரே குடும்பமானார்கள். எல்லாருக்கும் பொது பாஷை ஆங்கிலம்; சிறப்பாகத்

தமிழ் கற்றுணர்ந்தனர். ஒருவர் அறிவை மற்றவர் அறிந்து பயன் பெற்றனர். மேற்கும் கிழக்கும் கை கோத்துக் கலைநடம் புரிந்தது.

ஸ்ரீமதி ஜெங்கின்ஸ் தமிழ் மணிக்கு ஐரோப்பிய சங்கீதமும் வாணிக்கும் கமலாவுக்கும் நடனமும் கற்றுக் கொடுத்தாள். தீர சங்கராபரணத்தின் விரிவான ஐரோப்பிய சங்கீதத்தைத் தமிழ் மணி எளிதாகக் கற்றான். இந்தமாதிரி ஒரு அரிய கலைக்குழு சேர்ந்து கப்பலேறியது.

தோகியோ என்னும் அந்தப் பெரிய கப்பலில் அமர்ந்ததுமே ஸைஸுகி என்ற ஜப்பான் அறிஞர் இவர்களுக்கு அறிமுகமானார். அவர் நாகாஷிமாவைக் கலைக் கூட்டத்தின் பெயர் என்ன என்று விசாரித்தார். நாகாஷிமா Arts Union (கலைக் கூட்டம்) என்றார். ஜெங்கின்ஸ் Hearts Union (உள்ளொருமைக் கூட்டம்) என்றார். இரண்டும் சரிதான், கலை உள்ளத்தின் இன்ப ஊற்றே; உள்ளொற்றுமையே ஒரு சங்கத்தின் உயிர். அந்த ஒற்றுமையிருந்தால் உலகில் போட்டி, பொறாமை போர்கள் ஏது...... இப்போது நடக்கும் கொடிய போர் எதனால் உண்டானது? மனிதர் உள்ளம் ஒன்று சேராமல், அன்பில்லாமல், எனது, நான் எனக்கே என்ற தனியகந்தையால் பிரிந்து நிற்பதனாலேதான் இப்படி உலகம் குண்டுப் புகையும் கொலைக் காடுமானது'' என்று ஸைஸுகி தமது சர்வதேச ஐக்கிய வாதத்தைப் பேசத் தொடங்கினர்.

> **உள்ளொன்றினாலே**
> **உலகொன்றும்; ஆதலினால்**
> **உள்ளத்தில் ஒற்றுமையை**
> **ஊன்று**

என்ற சூத்திரத்தை விளக்கித் தமிழ்மணி அருட் சோதி வள்ளலாரின் வரலாற்றையும் ஆன்மநேய ஒருமை யுணர்வையும் பற்றி அழகான ஆங்கிலத்திற் பேசினான். அப்பேச்சை ஜெங்கின்ஸ் சுருக்கெழுத்தில் எடுத்துப் படித்து மகிழ்ந்தார். "சாதியிலே மதங்களிலே" என்ற அருட்பாவை விளக்கித் தமிழ்மணி உலகொற்றுமையின் உயிர் நாடி தமிழ் மகான்களின் திருவாக்கில் உள்ளது என்று விளக்கினான்.

இவ்வாறு கலைப் பேச்சில் இவர்கள் காலங்கழித்தனர். கப்பலும் மணிலாவுக்கு வந்து நங்கூரம் போட்டது. எல்லோரும் பிலிபைன் தீவின் இயற்கை வளமையில் உலாவி வந்து மீண்டும் கப்பலேறினர்.

இரவில் கப்பலிருந்த ஜப்பானிய ஜோடிகளுக்கு உற்சாகம் பிறந்துவிட்டது. எல்லாரும் ஆடல் பாடலில் மகிழ்ச்சி கொண்டனர். நாகாஷிமாவும் ஸைஸுகியும் கலைக் கோயிலாரை அறிமுகப் படுத்தினர். ஜப்பானியர் இவர்களை உற்சாகப் படுத்தி விருந்தளித்தனர். பிறகு பாடச் சொன்னார்கள்.

பௌர்ணமி யிரவு; வெள்ளி நிலாவுடன் கடற் காற்று கொஞ்சி விளையாடுகிறது. அரை மணி நேரம் ஜப்பானிய சங்கீதமும் நடனமும் ஆன பிறகு ஸ்ரீமதி ஜெங்கின்ஸ் பியானோ வாசித்துப் பாடினாள் – வாணி – கமலா அழகான நடனம் புரிந்தனர். பிறகு, மணி கோஷ்டி தேவகானம் பாடியது; பொன்னம்பலம் வழக்கம் போலப் பாடல்களின் பொருளை விளக்கினான். திருப்புகழ் பாடும் போது ஜப்பானியரெல்லாம் உற்சாகங் கொண்டு குதிக்கத் தொடங்கினர். கப்பல் தலைவன் மணி

கோஷ்டிக்கு வந்தனம் செலுத்தினான்.

இவ்வாறு பகலில் கலைப் பேச்சும், இரவில் கலை நடனமுமாக இந்த ரசிகர் கூட்டம் ஹாங்காங் வந்து சேர்ந்தது. கப்பலிலிருந்த சீன நண்பர் சிலர் இவர்களை நான்கிங்கிற்கு அழைத்துச் சென்றனர். அங்கே ஜெங்கின்ஸுடன் எல்லாரும் ஸுன்யத்ஸன்னையும், அவர் குடும்பத்தையும் பார்த்தனர். சுதேசத்திற்காக அந்த வீரன் செய்த தியாகம் மணிக்குப் புதிய எழுச்சி தந்தது. அங்கே ஒரு ஆவேசமான கச்சேரி நடந்தது.

இராமன், அனுமான், முருகன், அர்ஜுனன் முதலிய தெய்வீக வீரர்களைப் பற்றிப் பாடி இந்திய வீரப் புகழைத் தமிழ்மணி நிலை நாட்டினான். சிவாஜி, பிரதாப சிங்கன், ராஜராஜ சோழன், கரிகால் வளவன், வ. வெ. சு. ஐயர் முதலிய வீரர்களின் வரலாற்றை அவன் சொல்லக் கேட்டுச் சீனத் தியாகி உணர்ச்சி கொண்டான். சீனரின் கலைப்பண்பை மணி வியந்தான். ஆனால் பிறநாட்டார் துறைமுகங்களை யெல்லாம் வசப்படுத்தி சீன வியாபாரத்தைத் தம் கைக்குள் வைத்துக் கொண்டு நாட்டைச் சுரண்டும் கொடுமையைக் கண்டு வருந்தினான். இச்சமயமே நமது தாய்நாடும் அன்னியருக்கு அடிமைப் பட்டு, உரிமையிழந்து, செல்வமெல்லாம் கொள்ளை கொடுத்து வறுமையானதை அவன் நினைத்து நெஞ்சங் குமுறினான். கலைக்கனவுடன் தேசபக்திக் கனலும் அவன் உள்ளத்தைப் பற்றியது. நான்கிங்கிலிருந்து கொரியாவுக்கு செல்லும் வழியில் ஜப்பானியர் கொரியாவில் செய்யும் கொடுமைகளைக் கேட்டு நாகாஷிமாவிடம் வருந்தினான். "உலகில் வல்லரசுகள் மண் வெறி பிடித்தலையுமட்டும் இப்படிக் கொடுமைகள் நடக்கும். அது ஜப்பானியர் குற்றமன்று. அதிகார வர்க்கத்தைப் பிடித்த மண் வெறியின் குற்றம்" என்றான் நாகாஷிமா.

இப்படியே பேசிக் கொண்டு நண்பர் தோகியோ துறைமுகம் சேர்ந்தனர்.

துறைமுகத்தில் சண்டைப் படைகள் கப்பல் கப்பலாக ஏறி ஐரோப்பாவுக்குச் சென்றன. ஏராளமான ஆயுதங்களும் உணவுப் பொருள்களும் சென்றன. ஜிண்டான் மாத்திரை முதல் தீப்பெட்டி வரையில் கணக்கில்லாத சரக்குகளைக் கப்பல்கள் அள்ளிச் சென்றன. பெரும்பாலானவை நமது இந்தியாவில் விற்கவே சென்றன. பருத்தி, சணல், ரசாயனப் பொருள்கள், தானியங்கள் எல்லாம் இறக்குமதியாயின. நமது நாட்டுப் பசும் பொருள்களை மலிவாக வாங்கி வந்து - யந்திரங்களால் விரைவாக பல சாமான்களைச் செய்து நமது தலையிலேயே வைத்துக் கட்டும் வாணிகத் திறமையை மணி கண்டு கொண்டான். நமது நாடு அன்னியச் சரக்குகளின் சந்தையாயிருக்கிறது; நமது பொருள் அதனால் பரதேசம் போகிறது; நாம் பஞ்சத்தால் வருந்துகிறோம்; நமது கைகளுக்கு வேலையில்லாதிருக்கிறது. வறுமையின் காரணம் இதுதான் என்பது அவனுக்குத் தெரிந்தது. கலைக்கோயில் என்றால் சும்மா ஆடல் பாடல் மட்டும் போதாது. வறுமையை நீக்கும் தொழிற் கலைகளை வளர்க்க வேண்டும் என்றும் உறுதி கொண்டான். உலக நிலையையும், இந்திய நிலையையும் இவ்வாறு சிந்தனை

செய்து கொண்டே மணி, தன் கோஷ்டியுடன் தோகியோ நகரத்தில் பிரவேசித்தான்.

நாகாஷிமாவும் ஸுஸுகியும் மணி கோஷ்டியை அன்புடன் உபசரித்தனர். ஜப்பானியர் விருந்தை உபசரிப்பதில் நமது தமிழரைப் போன்றவர். கடற்காற்று வீசும் வசதியான பங்களாவில் நாங்கள் இறங்கினோம்; பங்களாவின் முப்புறமும் அழகான மலர் கனிந்த தோட்டமிருந்தது. இனிய பறவைப் பாட்டு காதைக் கொஞ்சியது. ஜப்பானிய உழவரும், செம்படவரும் பாடும் நாடோடிப் பாடல்கள் காற்றில் மிதந்து வந்தன. ஜப்பானியர் வாழ்க்கைச் சித்திரம் சுற்றிலும் காணப்பட்டது. பங்களாவில் மூங்கிலாலும், வர்ணத் தகடுகளாலும், காகிதங்களாலும் பல பூவேலைகள் பொலிந்தன. விளக்குகளில் பல நிறக் குமிழ்கள் கண்ணுக்கின்பமளித்தன. சுவர்களை அழகான படங்கள் அலங்கரித்தன. புத்தரின் கம்பீரமான சிலை, ஜீவ களையுடன் ஒரு கண்ணாடி பீரோவில் விளங்கியது. கொன் புத்ஸன் உருவம் மற்றொரு பீரோவில் துலங்கியது. ஜப்பான் மன்னனை மிகாடோதான் இவர்கள் தெய்வம்; கதிர் வீசும் மின்சார விளக்குகளுக்கிடையே மிகாடோவின் உருவம் கொலு வீற்றிருந்தது. உலகத் தலைவர் படங்களெல்லாம் சுவர்களை அலங்கரித்தன. காந்தி, திலகர், தாதாபாய், லாலாஜி, லாயிட் ஜார்ஜ், வில்சன், தளவாய், ஃபோக், விக்டோரியா, எட்வேட், ஜார்ஜ் V, கெய்சர், லெனின், நெபோலியன் முதலிய பல பிரமுகர் படங்களுக்கிடையே நமது தமிழ்ப் பெரியார் படம் ஒன்றுகூட இல்லாதது மணிக்கு வருத்தமாயிருந்தது. ஜப்பானியரின் கலையுணர்வும், சித்திரத்திறனும், அணிநயமும், வியக்கத்தக்கன. இயற்கைக் காட்சிகளைக் காட்டும் படங்களைப் பார்த்து மணி வியந்தான். தமிழகத்திலும் இப்படியே சித்திரக்கலை வளர்த்து இயற்கையழகுடன், தமிழர் நாகரிகப் படங்களையும், தமிழ்ப் பெரியார் படங்களையும் எழுதி அச்சிட்டு உலகெல்லாம் பரப்ப உறுதி கொண்டான். ஆயிரம் கனவுகள் அவனுள் விளங்கும் கலைக் கோயிலிற் குடிபுகுந்தன. அவற்றையெல்லாம் வாணிக்கும் பொன்னம்பலத்திற்கும் சொல்லிக் கொண்டிருந்தான்.

நாகாஷிமா ஒரு தனி மோட்டார் அமர்த்தி, மணி கோஷ்டியை தோகியோ, பூஜியாமா முதலிய இடங்களைச் சுற்றிக் காட்டி ஜப்பானிய சரித்திரத்தையும் ஆவேசமாகச் சொன்னான். ஜப்பானியர் நாகரிகத்தை "இதோ பாருங்கள்" என்று பல வீடுகளுக்கும், கல்லூரிக்கும் அழைத்துச் சென்று காட்டினான். முதன்மையாக ஜப்பானியத் தொழிற்சாலைகளையும் கல்லூரிகளையும் தமிழ்மணி கண்டு வியந்தான்.

1858-ம் ஆண்டிற்கு முன் ஜப்பான் சீர்குலைந்திருந்தது. சாதிப் பிளவுகளும், சமூக ஊழல்களும், கல்வியில்லா மடமையும், வறுமையும், காலமறியா மூடப் பழக்கங்களும் ஜப்பானை சீர்குலைத்தன. அதன் பிறகு சில அறிஞர் எழுந்தனர். அமெரிக்காவுக்கும், இங்கிலாந்திற்கும், பிரான்ஸிற்கும் ஜர்மனிக்கும் சென்று வெள்ளைக்காரர் வல்லரசாக விளங்கும் தந்திரத்தை அறிந்து கொண்டனர். ஐரோப்பாவும், அமெரிக்காவும் செய்வதை ஜப்பானும் செய்ய வேண்டும் என்று உறுதி கொண்

டனர். இதற்கு மிகாடே பெருந் துணை யளித்தான். முதலில் வகுப்பு வாதங்களை ஒழித்து எல்லாரும் அரசரைத் தலைமை கொண்டு ஒரே ஜாதியாயினர். பிறகு நாடெங்கும் கல்வி பரப்பினர். பெரிய கல்லூரிகளை நிறுவி மாணவரைக் காலத்திற் கேற்ற முறையிற் பயிற்றினர். தக்க மாணவரைப் பணம் கொடுத்து அமெரிக்காவுக்கும், ஐரோப்பாவிற்கும் அனுப்பி தொழில் நிபுணராக்கினர். அவர்களைக் கொண்டு பல யந்திரத் தொழில்களும், இராணுவத் தொழில்களும் நாட்டினர். இத்தொழில் வளர்ச்சியால் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்தது. ஜப்பானியர் குள்ளையரானலும் வெள்ளையரைவிட உழைப்பாளிகள். அவர்களுக்கு அரிசி, மீன், கனிகள் போதும்; மூங்கில் வீடு போதும், எளிய ஆடை போதும். சொற்பக் கூலிக்கு அதிகவேலை செய்வார்கள். இவர்களால் ஜப்பானியத் தொழில்கள் மிகச் செழித்தன. தொழிலால் குவியும் சாமான்களை விற்க ஜப்பானிய வணிகர், கப்பலோட்டி உலகத் துறைமுகங்களிற் புகுந்தனர். முதன்மையாக நம் அடிமை இந்தியாதான் ஜப்பானியருக்குப் பெருஞ் சந்தையானது. வாணிக லாபம் ஜப்பானை எல்லாவிதத்திலும் செழிப்பாக்கியது. ஜப்பானியர் முன்னே படாடோப பயங்கரப் பிரபுக்களால் துன்புற்றனர். புத்தக் குருக்கள் வைத்தது சட்டம்; குருக்களும் பிரபுக்களும் கூட்டு. குருக்களில்லாமல் மோட்சமில்லை; பிரபுவில்லாமல் பிழைப்பில்லை. ஜனங்களின் இகபர சுகங்களை யெல்லாம் இந்த இருவரும் பங்கு போட்டுக் கொண்டிருந்தனர். ஆண்களுக்கே சுதந்திரமில்லை; பெண்களுக்கு ஏது? பெண் கெட்டியாகப் பேசக் கூடாது; ஆணுக்கு அடிமையாகவே வாழ வேண்டும். எழுத்துத் தெரிவது கூடக் கடினம். ஏழைகள் புழுக்கள் போல நடத்தப்பட்டனர், நசுக்கப்பட்டனர். மாடு மாதிரி உழைத்தே பசியாற வேண்டும்; செல்வர் தொந்தி நிரம்பி புளிச்சேப்பம் வந்த பிறகு தான் ஏழைக்குக் கால் வயிறு கஞ்சி கிடைக்கும். இந்த மாதிரி இருளாயிருந்த ஜப்பானுக்கு 1884-ம் ஆண்டு திடீரென்று ஒளி பிறந்தது.

(தொடரும்)

★

இலக்கிய விஷமம்

[கி. ரா]

"மேல் நாட்டு அறிஞரான புரொபஸர் ஈன்ஸ்டினுடைய அற்புத பௌதிக சித்தாந்தத்தைப் பற்றி யாராவது பேசி விளக்க வேண்டுமானல் அதற்கு ஓரளவு விசேஷப் பயிற்சியும், அறிவாற்றலும் வேண்டியிருக்கிறது. ஆனல் இலக்கியத்தைப் பற்றியோ சங்கீதத்தைப் பற்றியோ, அல்லது வேறெந்த நூல்களைப்பற்றியோ யார் வேண்டுமானலும், எப்போது வேண்டுமானலும் துணிந்து பிரசங்கம் செய்கிறார்கள்" என்று ஒரு வங்க அறிஞர் எழுதுகிறார். நண்பர் ஸ்ரீ மு. அருணசலம் எழுதிய "இன்றைய தமிழ் வசன நடை" என்ற புத்தகத்தைப் படித்த போது அந்த அறிஞர் வாக்கின் உண்மை என் நினைவுக்கு வந்தது.

"......இது வசன நடையைப் பற்றிய ஆராய்ச்சியுமல்ல, வசன நடையின் சரித்திரமுமல்ல" என்ற பூர்வ பீடிகையுடன் ஆரம்பிக்கும் ஸ்ரீ அருணசலம் மேற்குறிப்பிட்ட இரண்டு வேலைகளையும்தான், தம்முடைய சிற்றறிவுக்கு எட்டிய வரையில், நூற்றியெண்பத்திரண்டு பக்கங்களில் செய்து முடித்திருக்கிறார். இந்த அபாரமான வேலையினல் அவருக்கே திருப்தி ஏற்படிருக்குமா என்பது சந்தேகம்தான். ஏனெனில், அவருடைய நோக்கம் என்ன என்பது அவருக்கே தெளிவாகத் தெரியாத போது, ஒரு ரூபாயைக் கொடுத்து புஸ்தகத்தை வாங்கிப் படிக்கும் ஒன்றும் அறியாத வாசகனுக்கு, பாவம் என்ன விளங்கிவிடப் போகிறது!

இன்றைய தமிழ் நடையை ஆசிரியர் கடுந்தமிழ், பண்டிதத் தமிழ், தேர்வடத் தமிழ் என்பன போன்ற பதினெட்டுப் பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார். அவை ஒவ்வொன்றுக்கும் ஆங்காங்கு உதாரணங்களும் கொடுத்திருக்கிறார். இவற்றிலிருந்து அவர் விளக்கியுள்ள அற்புதமான முடிவு என்னவென்றால், இன்று தமிழை, மரபுடன் ஒத்து, பிழையின்றி எழுதக் கூடியவர்கள் நான்கே ஆசிரியர்கள்தான் உண்டு என்பதுடன்; இதற்கு நூற்றெண்பது பக்கங்கள் வேண்டுமா என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

இலக்கிய சிருஷ்டி செய்வதற்கு எவ்வளவு ஆற்றலும், பயிற்சியும், மனப் பக்குவமும் வேண்டுமோ அவ்வளவு இலக்கிய விமரிசனத்துக்கும் வேண்டும் என்பதை ஆசிரியர் உணரவில்லை. அதற்கு நேர்மாருக குறுகிய நோக்கமும், சொந்தமான விருப்பு வெறுப்புகளினல் "வீட்டுத் தோட்டத்தில்" பயிர் செய்யப்பட்ட அசட்டுக் கருத்துக்களும் கொண்டு ஆசிரியர் இலக்கியத்தை எடைபோட முன்வருகிறார்.

உதாரணமாக "நடை" என்றால் என்ன என்பதைப் பற்றி அவருடைய கருத்தைக் கவனிப்போம்.

"எந்த எழுத்தாளனுக்கும் நடை என்று தனியாக ஒன்று

இல்லை; அவனுடைய குண விசேஷம், ஒழுக்கம், தனித்த இயல்பு, இவற்றைப் பொறுத்துத்தான் அவனுடைய எழுத்து நடையும் அமைகிறது என்பது கருத்தாகும். ....வாழ்க்கையில் உண்மையும் சீலமும் இல்லாவிட்டால், எழுத்தால் மட்டும் நேர்மை என்பது ஒரு நாளும் அமையாது" என்று ஸ்டைல்-ஈஸ்-மான் என்ற ஆங்கிலப் பழமொழிக்குப் பொருள் சொல்லுகிருர். அவர் சொல்லும் முதல் வாக்கியத்துக்கும் இரண்டாம் வாக்கியத்துக்குமே முரண்பாடு இருக்கிறது வெளிப்படையாகத் தெரிகிறது.

ஒரு மனிதனுடைய நடத்தைக்கும் அவனுடைய வசன நடைக்கும் என்ன சம்பந்தம் என்பதை என்னல் அறிந்து கொள்ள முடியவில்லை. ஒரு ஆசிரியன் எடுத்தாளும் விஷயத்தை எவ்வளவு தூரம் அனுபவித்து எழுதுகிருன் என்பதைத்தான் நடை குறிக்க முடியும்; அவனுக்கு யோக்கியதா பத்திரம்கூடக் கொடுக்க முடியும் என்ற விசித்திர உண்மையை இனிமேல்தான் கேள்விபடப் போகிறேன்.

'தீபன்' எழுதிய நடையைப் பற்றிக் குறிப்பிடும்போது "இதைப் படிக்கும்போது, தமிழ் வசனம் என்ற நினைவுகூட நமக்கு எழவில்லை. விஷயத்தோடு முற்றிலும் அப்படியே என்றிவிடுகிறோம்" என்று எழுதும்போது ஆசிரியர் 'உண்மையான நடை என்ருல் என்ன என்று அறிந்திருக்கிருர்' என்று எண்ணி நாம் சந்தோஷப் படுகிறோம். ஆனல் உடனே அந்த அல்ப சந்தோஷம் நிலைத்திருக்கவில்லை என்பதைக் கண்டு வருகிறோம். அடுத்த பக்கத்திலேயே ஸ்ரீ திரு வி. க. அவர்களின் நடையைப்பற்றி "முதலியார் நடை கடினமானது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள்" என்றும், "விஷயத் தெளிவு, சொல்லழகு, உணர்ச்சி விரைவு, ஓட்டம், உண்மை ஆகிய எல்லாப் பண்புகளும் பொருந்தியிருக்கின்றன" என்றும் சொல்லுகிருர். இவ்வளவும் பொருந்தியிருக்கும்போது அதைக் கடினமாக நடை என்று எப்படிச் சொல்ல முடியும்?

இன்னெரு ரஸமான இடம்:

"இரசாயனத்தைப் பற்றி எழுதுகிறோம், அணு, துகள், பிராண வாயு, நீர், தனிப் பொருள், கூட்டுப் பொருள், என்பன போன்ற சொற்கள் நடையில் பரவி வரும். இசையைப்பற்றி எழுதுகிறோம். பண், சுரம், பல்லவி, அனுபல்லவி, இராகம், ஆலாபனம், கமகம், கார்வை என்ற சொற்கள் இங்கு வரும். முன்னே வந்த சொற்கள், இங்கே வரமாட்டா, இங்கு வருகிற சொற்கள் அங்கு வர மாட்டா"

இந்த உண்மையைக் கண்டு பிடிக்க இவ்வளவு பெரிய ஆராய்ச்சி வேண்டுமா? சங்கீதத்தைப் பற்றி எழுதும்போது எந்த ஆசிரியனவது ரசாயனப் பரிபாஷைச் சொற்களை பிரயோகிப்பான!

ரசாயனத்தை 'இரசாயனம்' என்று எழுதியிருக்கிருரே அவர் ரொம்ப இலக்கணம் படித்தவரோ என்று எண்ணிவிட வேண்டாம். "தொல்காப்பியர் தம் காலத்து இலக்கியத்திலும், வாழ்க்கையிலும் கண்ட பேருண்மைகளையும், தாம் எண்ணிய எண்ணங்களையும் தொகுத்து நூலாக்கினர். பல நூற்றுண்டுகளுக்குப் பின் வாழ்ந்த நன்னூலார் தம் காலத்துக்

கேற்ப தொல்காப்பியக் கருத்தை மாற்றிக் கொண்டார்'' என்று ஓரிடத்தில் சொல்லுகிறார். ஆனால் தொல்காப்பியத்திலுள்ள ஒரு பகுதியின் சுருக்கமே நன்னூல் என்பதை இரண்டையும் படித்தவர்கள் அறிவார்கள்.

தமிழில் இதற்கு முன்னால் வசன நடையே இல்லையென்று ஓரிடத்தில் சொல்லுகிறார். அதற்குக் காரணம் காட்டும் தோரணையில், இங்கிலாந்தில் அச்சு யந்திரம் ஏற்பட்டவுடன்தான் வசன நடை பரவிற்று என்கிறார். பல நூற்றுண்டுகளுக்கு முன்னரே நமது நாட்டில் வடமொழியில் வசன நூல்கள் மலிந்திருந்தனவே, அப்போது எந்த அச்சு யந்திரம் இங்கு வேலை செய்தது?

இப்படியே, ஆசிரியருடைய சொத்தைக் கருத்துகளையும், நடன சூன்யத்தையும் பற்றி விவரித்துக் கொண்டே போனால் பத்திரிகையில் இடம் போதாது. இந்த "நூலில்" யார் யார் படித்தவர்கள், எது பிடிக்காதவை என்ற விஷயத்தைத் தவிர வேறென்றும் தெளிவாகத் தெரியவில்லை.

"மறுமலர்ச்சி" என்ற வார்த்தை அவருக்குப் பிடிக்காத 'விஷயங்களில் ஒன்று என்று தெரிகிறது. அது ஏன் என்பது "மனோ தத்வ விகற்ப" சாஸ்திரிகளுக்கு விருந்தாக அமையும் விஷயம். நிற்க,

மறுமலர்ச்சி என்றால் என்ன? முன்னூறு வருஷகாலம் அடிமைப் பட்டுக்கிடந்ததின் பயனாய் நாட்டில் அரசியல் வாழ்க்கையும், சமூக வாழ்க்கையும், பொருளாதார வாழ்க்கையும் தட்டுத் தடையாய்த் தேங்கிக் கிடந்தன. ஆகவே நாட்டின் கலாசாரமும், இலக்கியமும் முன்னேற்றமின்றி பட்டுக்கிடந்தன. ஏனெனில், மக்களுடைய வாழ்க்கையை ஒட்டித்தான் அறிவும், கலையும், இலக்கியமும் வளம்பெற்று வளர முடியும். இரு அம்சங்களும் ஒன்றையொன்று ஒட்டி நிற்பவை; வசனத்தில் நடையும் கருத்தும் ஒட்டி நிற்பதைப்போல, இந்த சமயத்தில் திடீரென்று ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பினால் மக்களின் கண் திறந்தது. அன்னியருக்குத் தான் பணிந்து அரை வயிற்றுக் கஞ்சிக்குத் தாளம் போடுவதை விடச் சிறப்பாக, வளம்பெற்ற வாழ்க்கையை வாழ முடியும் என்ற உண்மை மக்கள் மனத்தில் பதிந்தது; முழு வேகத்துடன் பரவிற்று.

இந்த மகத்தான சேவையைச் சாதித்த பொருப்பில் பெரும் பங்கு பத்திரிகைகளைச் சேரும். நூற்றுக் கணக்கான இளைஞர்கள் தேசப் பணி என்னும் பெரும் தீயினிடையே ஆவேசத்துடன் புகுந்தார்கள்; வீடு வாசலை, பெண்டு பிள்ளைகளை மறந்தார்கள். எல்லாவற்றையும் மறந்து, நாட்டு நலம் ஒன்றே குறிப்பாகக் கொண்டு எண்ணற்ற இன்னல்களுக்கு ஆளானார்கள். இந்த வீர புருஷர்களைத்தான் நண்பர் அருணசலம் 'கூலிக்கு மாரடிப்பவர்கள்' என்று மகுடம் சூட்டி அழைக்கிறார்.

அந்தக் காலத்தில் பத்திரிகையில் கிடைக்கும் ஊதியம் அரை வயிற்றைக் கழுவக்கூடப் பயன்படாது. தெருக் கோடியில் நின்று "பப்பர்மின்ட்" விற்றாலும் அதிகம் சம்பாதித்து விடலாம். இருந்தாலும், பத்திரிகைகளில் வேலைக்கு அமர்ந்த இளைஞர்களின் தொகை நாளுக்கு நாள்

பெருகியது. மூலைக்கு மூலை பத்திரிகைகள் புதிது புதிதாக முளைக்கத் தொடங்கின. அந்தப் பத்திரிகைகள்தான் மடிந்து மங்கிப் போயிருந்த தமிழ் வசன நடைக்கு உயிரளித்தவையாகும். ஆனால் எழுதிய ஆசிரியர்களின் உள்ளத்திலே கொழுந்து விட்டெரிந்த சுதந்திரத் தீ அவர்களுடைய எழுத்துக்களில் சுடர் விட்டன. அவர்களுடைய நெஞ்சத்தின் ஆர்வமும் வேகமும் தமிழ் நடைக்குப் புதிய உருவும், பொலிவும் தந்தன. அந்தத் தியாகிகளைக் கண்டுதான் நம் ஆசிரியர் எள்ளி நகையாடுகிறார். ஆனால் புதிய தமிழ் வசன நடைக்குப் பிதாவான பாரதியாரையே "புலவர்" "கொச்சைத் தமிழ் எழுதுகிறவர்" என்று கூறும் மனிதரிடத்தில் நாம் வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?

இலக்கியம் என்பதுடன் இலக்கணம் என்பதை இந்த "ஐந்தாம் படைப் புலவர்" களும், போலிப் பண்டிதர்களும் உணரவேண்டும். உணராது போனால் நஷ்டம் அவர்களுடையதுதான். இல்லாவிடில் தமிழ் இலக்கியம் "நில்லும், எனக்கினி நேரமில்லை — இன்னும் நீண்ட வழி போக வேண்டுமையா" என்று இவர்களைப் புறக்கணித்து விட்டுப் போய்விடும்.

மறு மலர்ச்சி எழுத்தாளர்களை நையாண்டி செய்யும் ஆசிரியர் அதே வாயால் புலவர்களையும் பரிகசித்து ஏசுகிறார். அவருடைய இரண்டு பட்ட திரிசங்கு நிலையைக் கண்டுதான் மனம் இரங்குகிறேன். அவர் இலக்கிய விமர்சனம் செய்யப் புகுந்ததைக் கண்டதும் "தெய்வங்கள் அடியெடுத்து வைக்க அஞ்சும் புனிதமான இடத்திலே மூடப்பேய்கள் தலை விரித்தாடுகின்றன" என்ற கருத்தைக்கொண்ட ஒரு ஆங்கிலப் பழமொழி நினைவுக்கு வருகிறது.

வண்டியின் ஜன்னலிலிருந்து எல்லாம் சரியாகத்தான் தோன்றுகிறது

ஆனால் பிரயாணி புன்னகை புரிவதில்லை. செழிப்புறத் தோன்றும் நிலங்களும் பழத் தோட்டங்களும், விரைவில் மறைந்து விடுகின்றன. அவைகளுக்கப்பாலுள்ள ஒன்றும் விளையாத விசாலமான வெட்டை வெளிகளே அவர் எண்ணத்தை கவர்கின்றன,

அதன் காரணத்தையும் அவர் அறியாமல் இல்லை. இந்தியாவில் உள்ள ஏழு லட்ச கிராமங்களில் பெரும்பாலானவை ரஸ்தாக்களினின்று தனித்தே நிற்கின்றன. கிராம வாசிகள் உணவுப் பொருள்களை அதிகமாக விளைவித்தாலும் அவைகளை மார்க்கட்டுக்கு அனுப்ப இடமில்லை. ர[illegible]கள் ஏற்[illegible] அவர்கள் அதிகமாக தானியங்களை விளைவிப்பதன்றி கைத்தொழில் [illegible]மான்களையும் வாங்க[illegible]கும் விவசாயமும் கைத்தொழிலும் ஒன்றை ஒன்று சார்ந்தன. ஒன்றின் அபிவிருத்தி[illegible]ற்றொன்றின் வாழ்விற்கு காரணமாகும்.

பிரயாணி முன் நோக்குகிறார். கிராமங்களுக்கும், பட்டினங்களுக்கும், நகரங்களுக்கும், தேசத்தின் சுகாதாரத்திற்கும், சுபிக்ஷத்திற்கும் உயிர்ப்பொருளாயுள்ள சாமான்களை அனுப்ப, உடம்பிலுள்ள ரத்த குழாய் போலவும் வலை பின்னலைப்போலவும் உள்ள ரஸ்தாக்களை உடைய வருங்கால இந்தியாவைப் பார்க்கிறார்.



நல்ல ரஸ்தாக்கள் செழிப்பிற்கு மார்க்கமாகும்

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

கம்பெனி, லிமிடெட்.

(தலைமை ஆபீஸ்: பம்பாய்)

தீ, ஆயுள், கப்பல், விபத்துகள்

முதலிய இன்ஷூரன்ஸ்கள் செய்யப்படுகின்றன.

தலைவர் :- ஸர். சுனிலால் வி. மேதா.
உபதலைவர் :- ஸ்ரீ ஜே. ஆர். டி. டாடா.

ஆயுள் இலாகா சம்பந்தமான விவரம்

1944-ம் வருஷத்தில் செய்யப்பட்ட புது பிஸினஸ்	ரூ. 6 கோடிக்கு அதிகம்.
1944-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ந் தேதி வரைக்கும் செய்யப்பட்ட பாலிஸிகளின் மொத்த தொகை	ரூ. 21 கோடிக்கு அதிகம்.

பொருளாதார் புள்ளி விவரங்கள்

செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 71,21,055.
மொத்த நிதி	ரூ. 6 கோடிக்கு அதிகம்.
மொத்த இருப்பு (சுமார்)	ரூ. 8 கோடி
ஆரம்பம் முதல் கிடைத்த பிரீமியம் வருமானம்	ரூ. 22 கோடிக்கு அதிகம்.
கொடுக்கப்பட்ட மொத்த உரிமைத் தொகை	ரூ. 11 கோடிக்கு அதிகம்.

இன்ஷியூர் செய்வதற்கோ அல்லது பிரதிநிதியாக இருப்பதற்கோ சிறந்த இந்திய கம்பெனி.

சென்னை கிளைநிலயம்,
4 & 5 முதல் லைன் பீச்.

கே. கணபதி,
பிராஞ்சு மானேஜர்.

ஓடத்துறை

பணக்காரனோ ஏழையோ, அவசரமோ, இல்லையோ, எப்படியும் ஆற்றைக் கடக்கப் படகுக்குக் காத்துத்தானாகவேண்டும். நெடுந்தூரம் வெய்யிலில் மீன் சுமையை விற்கக் கொண்டுபோகும் செம்படவனுக்கும் அவன் மனைவிக்கும் ஒரு கோப்பை தேனீர் வேண்டியதுதான். பொழுது போக்குக்காக வெளியே செல்பவர்களும் வழியே கிடைக்கும் சிற்றுண்டிகளை வாங்கித் தின்பதையும் தமாஷாகவே நினைக்கிறார்கள்.

கடலையடுத்த கீழ்வங்காளம், மலையாளம் ஆந்திர தேசம், கத்யவார் போன்ற எல்லா இடங்களிலும் ஓடத்துறைகளுண்டு. அநேகமாக, கங்கை, சிந்து, காவேரி போன்ற மஹாநதிகளைக் கடக்கப் பாலங்களை விடப் படகுகளையே உபயோகிக்கிறார்கள். இரு கரைகளிலும் இல்லை ஒருகரையிலாவது நீங்கள் விரும்பும் தேனீர்க்கடையுண்டு. ப்ரூக் பாண்ட் தேனீர் அருந்துவதால் படகுக்காகக் காத்திருக்கும் சிரமம் தோன்றாது.

இடைவிடா விநியோகம்—
எப்போதும் புதுமணம்

ப்ரூக் பாண்ட்

" இரு இலையும் ஒரு மொட்டும் ".



ஒரு சுத்தமான ஊற்றிலிருந்து

இயற்கை மைசூர் காடுகளில் மிக உன்னதமான சந்தன மரங்களை உண்டாக்கி யிருக்கிறது. இது தான் நூற்றுக்கணக்கான வருஷங்களுக்கு மிகவும் சேர்த்தியான சந்தன அத்தருக்கு ஆதாரம். இத்துடன் தற்கால விக்ஞானமுறைகளும் சேர்ந்து நூற்றுக்கு நூறு சுத்தமான உயர்ந்த மைசூர் சந்தன அத்தர் கிடைக்கிறது. அது மருந்துகள், சோப் அல்லது வாசனை திரவியங்கள் தயாரிப்பதற்கு இன்றியமையாதது.

மைசூர்
சந்தன அத்தர்

MSK 16 TM

மைசூர் கவர்ன்மென்ட் தயாரிப்பு.

தி சென்டரல் பேங் ஆப் இந்தியா, லிமிடெட்.

(இந்தியாவிலேயே மிகப் பெரிய இந்தியன் ஜாயின்ட் ஸ்டாக் பேங்)

(ஸ்தாபிதம்: டிசம்பர் 1911)

அதிகாரம் பெற்ற மூலதனம்	... ...	ரூ. 5,25,00,000
வாக்களிக்கப் பட்ட மூலதனம்	... ...	ரூ. 5,04,39,600
செலுத்தப் பட்ட மூலதனம்	... ...	ரூ. 2,51,02,200
ரிசர்வும் மற்ற நிதிகளும்	... ...	ரூ. 2,54,72,000
டிபாசிட்டுகள் 31-12-1944ல் இருந்தபடி	...	ரூ. 94,48,67,000

தலைமை ஆபீசு:

மகாத்மா காந்தி ரோடு, போர்ட், பம்பாய்.

இந்தியா முழுவதிலும் 180க்கு மேற்பட்ட கிளை ஸ்தாபனங்களும், வளங்கும் ஸ்தாபனங்களும் பெற்றது.

மானேஜிங் டைரக்டர்:- Mr. H. C. கேப்டன், J. P.

டைரக்டர்கள்:-

Sir. H. P. மோடி K. B, E. (தலைவர்)
ஹரிதாஸ் மாதவதாஸ
ஆர்டிஷ B. துபாஷ்
டின்ஷா D. ரோமர்
நூர்முகமத் M. சினாய்
பாபுஜி தாதாபாய் லாம்
தரம்ஷே முல்ராஜ் காட்டாவ்
ஹார்மஜி பிரேம்ஜி கனிஷாரியட்
விதல் தாஸ் கான்ஜி

லண்டன் ஏஜண்டுகள் :- மெஸர்ஸ், பார்க்லேஸ்பேங் லிமி மிட்லண்ட்பேங் லிமி.,

நியூயார்க் ஏஜண்டுகள்:- தி காரன்டி டிரஸ்ட் கம்பனி ஆப் நியூயார்க்

எல்லாவிதமான பாங்கி அலுவல்களும் கவனிக்கப்படும். விண்ணப்பம் செய்து விவரங்களை ஊர்ஜிதம் செய்து கொள்ளலாம்.

தென் இந்தியாவின் கிளை ஸ்தாபனங்கள்:—

அடோனி, ஆலப்பிளை, ஈரோடு, பங்களூர், பெஜவாடா, கள்ளிக்கோட்டை, கொச்சி, கோயமுத்தூர், கடப்பை, தோணி, எர்ணாகுளம், குண்டக்கல், கோவில்பட்டி, கர்நூல், மதராஸ், மதுரை, நந்தியால், பொள்ளாச்சி, சேலம், திருப்பூர், திருச்சூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, உடுமலைப்பேட்டை, விருதுநகர்.

மலர் மணம்

17237

சரளமான முகத்தோடும், அழகான கண்களோடும் நம் மனதை அள்ளிக் கொள்ளும ஒரு சின்னஞ் சிறு சரளா இந்த இதழ் 'வசந்த'த்துக்கு அழகு தருகிறாள். மக்கள் மனதிலுள்ள அறியாமை இருளை ஒழிக்க ஒளி விளக்கு ஏற்றுவதாகச் சொல் லப்படும் கார்த்திகை விளக்கைத் தாங்கி நிற்கும் குழந்தையின் கோலம் மிகக் குதூகலத்தை அளிக்கிறது.

'மாயையின் முன்பு' ஒருஉணர்ச்சிச் சித்திரம். சித்தார்த் தன், யசோதரை இந்த இருவரது உள்ள உணர்ச்சிகளையும் அற்புதமாகப் படம்பிடித்துக் காட்டுகிறார் சேது அம்மாள்.

தன் வாழ்க்கைப் படகை அலைமோத வைத்த ஒரு பெண் ணின் வாழ்க்கைப் படகு கரை சேர, தன் உயிரையே பணயம் வைக்கிறான் ஒருபடகோட்டி. அவனது வாழ்க்கைச் சித்திரத்தை கோமதி சுப்ரமண்யம் அற்புதமாகத் தீட்டியிருக்கிறார், 'ஓடக் காண்பது' என்ற கதையில்.

கவியுள்ளத்திற்கும் மலருக்கும் உள்ள தொடர்பு பற்றி மு. அருணாசலம் எழுதியிருக்கும் ஒரு அழகான இலக்கியக் கட் டுரையை இந்த இதழில் காணலாம்.

'மறு மலர்ச்சி' என்ற தலைப்பில் வித்துவான் அ. கிருஷ்ணமூர்த்தி எழுதிய கட்டுரையின் பிற்பாதி இந்த இத ழில் வெளிவந்திருக்கிறது. அவரது அபிப்பிராயங்கள் மறு மலர்ச்சி எழுத்தாளர்களின் கவனத்துக்கு உரியன.

இளம் எழுத்தாளர் ர. சி. டேவிட், இனிய சரளமான நடையில் எழுதியிருக்கும் 'மியாகியின் கடிதம்' ஒரு உள்ள முருக்கும் சொல்லோவியம்.

'விசுவ'த்தின் 'கலர்க் குங்கும'மும், 'சுகி'யின் 'கார்த் திகைச் சுடரும்' சிறு கதைப் பகுதியில் நல்ல ஸ்தானம் பெறு கின்றன.

இன்னும் பல சுவையான விஷயங்களையும், இரண்டொரு இளம் உள்ளங்களின் சிந்தனைப் பொறிகளையும், வழக்கமான இதர அம்சங்களையும், பார்த்து படித்து அனுபவிக்கலாம்.

— ஆசிரியர்

Extract from a letter from an officer in Malaya
Dated October 7-th, 1945.

"... What we need more than anything else is
"Amenities" **BADLY** ... !"

It is this need which

H. E. The Governor's
Amenities & Relief Fund

tries to need
the wherewithal but is badly needed.

PLEASE ASSIST THE FUND

by a contribution '**Earmarked**'
with "**Amenities & Relief**"

addressed to Honorary Treasurer,
H. E. THE GOVERNOR'S AMENITIES & RELIEF FUND
C/o Imperial Bank of India.

தோஷமற்ற, உயரிய, பூரிப்புள்ள

வைரங்கள்

அழகிய வேலைப்பாடமைந்த

பவுன் நகைகள்

நவீன முறைகளால் தயாரிக்கப்படும்

வெள்ளி சாமான்கள்

இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசிக்கவும்.

உம்மிடியார்

உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி
24/25. சைனா பஜார் :: மதராஸ்

பண்டை நாட்களில் ஜனங்கள் தேய்த்துக் குளிக்க சிறுபயிறு போன்ற இயற்கை தானியங்களை உபயோகித்து வந்தனர். சிறுபயிரை நைஸாகப் பொடித்து ஜலத்திற் குழைத்து தேய்த்து வந்தனர். இது ஹமாம் சோப்பின் களைப்பைப் போக்கும் குளிர் நுரை போன்று உடம்பிற்கு ஏதோ சற்று குளிர்ச்சியளிப்பதென பெயரோங்கி வந்த போதிலும் ஹமாமின் தைலங்களின் குணமோ சுத்தம் செய்யும் தன்மையோ இதற்குக் கிடையாது. இந்தப் பழைய முறைகளின் சிறந்த அம்சங்களனைத்தும் எத்தனையோ கூடுதல் சௌகரியமும் சுகமும் அளிக்கும் விதத்தில் இனிய நறுமணங் கமழும் ஸோப்பாகிய ஹமாமில் நன்கு பொருந்தியமைந்திருக்கின்றன.

ஹமாம்

உங்கள் ஸ்நானத்திற் குகந்த பெரிய ஸோப்பு



டாம்கோ விற்பனை இலாகா

பிக் பஜார், பாலக்காடு.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிட்.,

அரவிந்த்

வஸ்திரங்கள் கம்பீரமான ஆடைகளுக்கு

இந்தியாவின் அதி பிரபலமான வஸ்திரங்கள்:

நூல் புடவை, வேஷ்டி, ஷர்டிங், டுவில், கிரேப், பாப்ளின், நயின்ஸுக், லான், மல், டோரியா, வாயில் முதலிய தினுசுகள் உள்ளன.

நீங்கள் வாங்கும் துணிகளின் மேல் இக் குறியை பார்க்கவும்

அரவிந்த் மில்ஸ் லிமிடெட், அஹமதாபாத்

எங்கும் விற்பனையாளர்கள் உள்ளனர்.

AVI

Vasantham, Nov, 1945.

Printed at the Vasanta Mills Press, and Published by K. P. Sundaram at 4/12 A. Trichy Road, Coimbatore. Editor: R. Thirugnanasambandam.